**மார்ச் – 01**

# TNPSC துளிகள்

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சரான பிரகாஷ் ஜவ்டேகர் அவர்கள் சமீபத்தில் காலநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் குழுவின் விவாதத்தில் முதன்முறையாக சமஸ்கிருதத்தைப் பயன்படுத்தினார்.
  - இவர் சுக்லா யஜுர் வேதத்திலிருந்து சமஸ்கிருதப் பாடலுடன் உரையாற்றினார்.

# தமிழ்நாடு செய்திகள்

## அரசுப் பணியாளர்களின் ஓய்வு பெறும் வயது

- தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் ஓய்வு பெறும் வயதானது 59 வயதிலிருந்து 60 ஆக உயர்த்தப் பட்டுள்ளது.
- தற்பொழுது பணியில் உள்ளவர்கள் மற்றும் 2021 ஆம் ஆண்டு மே 31 ஆம் தேதியன்று ஓய்வு பெறும் அனைவரும் இந்த அறிவிப்பின் கீழ் உள்ளடங்குவர்.
- கடந்த ஆண்டு தமிழ்நாடு அரசானது ஓய்வு பெறும் வயதினை 58 வயதிலிருந்து 59 ஆக உயர்த்தி இருந்தது.

# தேசியச் செய்திகள்

## புதுச்சேரியில் குடியரசுத் தலைவர் ஆட்சி

- சமீபத்தில் புதுச்சேரியில் நாராயணசாமி அரசு பதவி விலகியதைத் தொடர்ந்து, அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப் பட்டுள்ளது.
- இந்திய அரசிலயமைப்பின் சரத்து 239A என்ற பிரிவு ஆனது ஒன்றியப் பிரதேசத்தில் சட்டமன்றம் மற்றும் அமைச்சரவையை அமைக்க வழிவகை செய்கின்றது.

## தேர்தல் நடத்தை விதிமுறைகள்

- தேர்தல் ஆணையமானது 4 மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தலுக்கான முழு அட்டவணையையும் வெளியிட்டுள்ளது.
- மேற்கு வங்காளம், கேரளா, அசாம் மற்றும் தமிழ்நாடு ஆகிய 4 மாநிலங்களும் புதுச்சேரி ஒன்றியப் பிரதேசமும் இதில் உள்ளடங்கும்.
- தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் (MCC) உடனடியாக அமலுக்கு வந்துள்ளன.
- தேர்தல் நடத்தை விதிமுறைகள் என்பது அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட விதிமுறைகளைக் கொண்ட ஒரு தொகுப்பாகும்.
- இந்த அரசியல் கட்சிகள் தங்களது எண்ணம் மற்றும் உணர்வு என்ற அளவில் மேற்குறிப்பிட்ட (MCC) விதிமுறைகளில் உள்ள கொள்கைகளைப் பின்பற்ற சம்மதம் தெரிவித்து இருக்கின்றன.

# சர்வதேசச் செய்திகள்

## சீனாவில் வறுமை ஒழிப்பு

- சீன அதிபர் ஜி ஜின்பிங் வறுமைக்கு எதிரான போரில் சீனா "முழு வெற்றியை" எட்டி உள்ளதாக அறிவித்துள்ளார்.
- மேலும் அவர், சீனாவில் கடந்த 40 ஆண்டுகளில் 770 மில்லியன் மக்கள் வறுமையின் கொடுமையிலிருந்து மீட்கப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.
- இதன்மூலம், சீனாவானது 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் வறுமை ஒழிப்பு இலக்கை 10 ஆண்டுகளுக்கு முன்னதாகவே அடைந்து சாதனை படைத்துள்ளது.
- சீனாவானது ஏறத்தாழ 1.4 பில்லியன் மக்கள் தொகையைக் கொண்டுள்ளது.

## சாம்பல் நிறப் பட்டியலில் – பாகிஸ்தான்

- நிதியியல் நடவடிக்கை பணிக் குழுவானது (FATF) பாகிஸ்தான் நாடு தனது சாம்பல் நிறப் பட்டியலில் தொடர்ந்து இருக்கும் என்று அறிவித்துள்ளது.
- தீவிரவாதத்திற்கு நிதியளிப்பதை ஒழிப்பதற்காக FATF அமைப்பால் நிர்ணயிக்கப்பட்ட அனைத்துச் செயல்திட்ட பணிகளையும் நிறைவேற்றாத காரணத்தினால் இந்த நடவடிக்கையானது எடுக்கப்பட்டுள்ளது.
- பாரீஸ் நகரில் உள்ள FATF ஆனது 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் பாகிஸ்தான் நாட்டை சாம்பல் நிறப் பட்டியலில் வைத்தது.

## 2வது முத்தரப்பு சந்திப்பு

- சமீபத்தில் ஒரு முத்தரப்பு சந்திப்பானது இந்தியா, பிரான்சு மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கிடையே நடத்தப்பட்டது.
- இது இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதின் மீது கவனம் செலுத்துகின்றது.
- இந்த முத்தரப்பு சந்திப்பின் நோக்கம் இந்த 3 நாடுகளுக்கிடையே வலுவான இருதரப்பு உறவினை வலுப்படுத்துவதாகும்.
- முதலாவது இந்தியா-பிரான்சு-ஆஸ்திரேலியா ஆகியவற்றுக்கான முத்தரப்பு சந்திப்பு காணொலி வாயிலாக 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 09 அன்று நடத்தப்பட்டது.

## மருந்து மற்றும் மருத்துவச் சாதனங்கள் குறித்த கருத்தரங்கு

- மருந்து மற்றும் மருத்துவச் சாதனத் துறை குறித்த சர்வதேசக் கருத்தரங்கின் 6வது பதிப்பானது மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் அவர்களால் தொடங்கி வைக்கப் பட்டது.
- இந்தக் கருத்தரங்கானது "INDIA PHARMA 2021 & INDIA MEDICAL DEVICE 2021" என்ற கருத்தை உள்ளடக்கி உள்ளது.
- இது மருந்து மற்றும் மருத்துவச் சாதனைத் துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக சிறந்த தொழில்நுட்பத் தீர்வுகள் மற்றும் உற்பத்தியை ஏற்படுத்துவதையும் அவற்றை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய மருந்து 2021 என்ற மாநாட்டின் கருத்துரு 'Indian Pharma Industry: "Future is Now" என்பதாகும்.

- "இந்திய மருத்துவ சாதனம் - 2021" என்பதின் கருத்துரு, "இந்திய மருத்துவத் தொழில்நுட்ப எதிர்காலம் : உலகக் கூட்டிணைவின் மூலம் புத்தாக்கம் மற்றும் இந்தியாவில் தயாரிப்போம்" என்பதாகும்.




# பொருளாதாரச் செய்திகள்

## நாணய மற்றும் நிதியியல் அறிக்கை

- 2021-21 ஆம் ஆண்டிற்கான இந்த அறிக்கையானது இந்திய ரிசர்வ் வங்கியினால் (RBI) வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின் கருத்துரு, "பணவியல் கொள்கை செயல்திட்டத்தை மறுஆய்வு செய்தல்" என்பதாகும்.
- இந்த அறிக்கையின்படி, அடுத்த 5 ஆண்டுகளுக்குப் பணவீக்க இலக்கானது +/-2 என்ற உயர்ந்தபட்ச/குறைந்தபட்ச விகித அளவுடன் 4% ஆக கணக்கிடப்பட்டுள்ளது.
- மேலும் இந்த அறிக்கையானது 6 உறுப்பினர்களைக் கொண்ட பணவியல் கொள்கைக் குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கான விதிமுறைகளையும் மறு ஆய்வு செய்ய பரிந்துரைத்துள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## வெள்ளி ஆண்டிமனி டெல்லுரைடு

- ஜவஹர்லால் நேரு மேம்படுத்தப்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் வெள்ளி ஆண்டிமனி டெல்லுரைடு ($AgSbTe_2$) என்ற ஒரு புதிய பொருளைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இது வெள்ளி, ஆண்டிமனி மற்றும் டெல்லுரியம் ஆகியவற்றிலிருந்து ஒருங்கிணைக்கப் பட்ட ஒரு நானோ அளவிலான பொருளாகும்.
- இது அனைத்து விதமான உள்ளக மற்றும் தொழிற்துறைப் பயன்பாடுகளினால் உற்பத்தி செய்யப்பட்ட மீதமுள்ள வெப்பத்தை (கழிவு) சேமிக்க உதவ இருக்கின்றது.
- பொதுவாக, இந்தப் பொருளானது வெப்பமின் விளைவுகளின் பயன்பாடுகளைப் பயன்படுத்த இருக்கின்றது.
- வெப்ப-மின் விளைவு வெப்பமானது மின் ஆற்றலாக மாற்றப்படும் செயல்முறையில் பங்கு கொள்கின்றது.
- பொதுவாக 15 முதல் 20 சதவிகிதத்திற்கும் மிகாத கழிவு வெப்பமானது (வெப்ப பகுதி) இதில் பயன்படுத்தப்பட இருக்கின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சுற்றுச்சூழலின் நிலை குறித்த அறிக்கை – 2021

- அறிவியல் மற்றும் சுற்றுச்சுழல் மையமானது (CSE) 2021 ஆம் ஆண்டின் சுற்றுச்சூழலின் நிலை குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது "டவுன் டூ எர்த்" என்ற ஒரு பிரசுரத்துடன் சேர்த்து CSE எனும் மையத்தினால் வருடாந்திரமாக வெளியிடப் படுகின்றது.
- இது வளங்கள், வனவிலங்கு, வேளாண்மை, ஊரக மேம்பாடு, நீர் மற்றும் துப்புரவு, காலநிலை மாற்றம் போன்ற கூறுகளை உள்ளடக்கி இருக்கின்றது.

***சிறப்பம்சங்கள்***

- 375 மில்லியன் குழந்தைகள் (புதிதாகப் பிறந்ததிலிருந்து 14 வயது வரை) குறைவான எடை, குறைவான வளர்ச்சி மற்றும் அதிகரித்து வரும் குழந்தை இறப்புகள் ஆகியவற்றிலிருந்து நீண்ட காலத் தாக்கங்களைக் கொண்டிருக்கின்றனர்.
- உலகளவில் பள்ளிகளிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்ட 500 மில்லியன் குழந்தைகளில், இந்தியாவின் பங்களிப்பு 50 சதவிகிதத்திற்கும் மேலானதாகும்.
- 115 மில்லியனுக்கும் அதிகமான கூடுதலான மக்கள் கடுமையான வறுமையை நோக்கித் தள்ளப்பட்டுள்ளனர், இதில் பெரும்பாலானவர்கள் தெற்கு ஆசியாவில் உள்ளனர்.
- இந்தியாவின் காற்று, நீர் மற்றும் நிலம் ஆகியவை 2009 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் மிகவும் மாசடைந்துள்ளன.
- மகாராஷ்டிராவில் உள்ள தாராப்பூர் ஆனது மிகவும் மாசுபட்டுள்ள தொகுப்பாக உருவெடுத்துள்ளது.
- இந்தியாவானது நீடித்த மேம்பாட்டில் மொத்தமுள்ள 192 நாடுகளில் 117வது இடத்தில் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- இது பாகிஸ்தானைத் தவிர அனைத்து தெற்கு ஆசியா நாடுகளுக்கும் பிந்தைய வரிசையில் உள்ளது.
- நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDG) அடைவதில் சிறப்பான செயல்பாட்டைப் பதிவு செய்துள்ள 5 மாநிலங்கள் பின்வருமாறு : கேரளா, இமாச்சலப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, தெலுங்கானா.
- SDG இலக்கை அடைவதில் மிகவும் மோசமான செயல்பாட்டைப் பதிவு செய்துள்ள 5 மாநிலங்கள் பின்வருமாறு : பீகார், ஜார்க்கண்ட், அருணாச்சலப் பிரதேசம், மேகாலயா மற்றும் உத்தரப் பிரதேசம்.

# விளையாட்டுச் செய்திகள்

## 400 டெஸ்ட் விக்கெட்டுகள்

- டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 400 டெஸ்ட் விக்கெட்டுகளை விரைவாக வீழ்த்திய இந்தியப் பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் ஆவார்.
- இவர் 77வது போட்டியில் இச்சாதனையை எட்டினார்.
- முரளிதரன் அவர்கள் இச்சாதனையை 72 போட்டிகளிலேயே நிகழ்த்தி உள்ளார்.
- அனில் கும்ப்ளே (619), கபில் தேவ் (434) மற்றும் ஹர்பஜன் சிங் (417) ஆகியோர் 400 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்திய இந்திய வீரர்களாவர்.

## QUICKEST TO 400 TEST WICKETS

| Bowler | For | Tests | Time Taken |
|---|---|---|---|
| Muralitharan | SL | 72 | 9 yrs 137 days |
| R Ashwin | Ind | 77 | 9 yrs 110 days |
| R Hadlee | NZ | 80 | 17 yrs 0 days |
| D Steyn | SA | 80 | 10 yrs 225 days |
| R Herath | SL | 84 | 18 yrs 6 days |
| A Kumble | Ind | 85 | 14 yrs 58 days |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 02**

# TNPSC துளிகள்

❖ 'கேலோ இந்தியா தேசிய குளிர்கால விளையாட்டு 2021' என்பதின் இரண்டாம் பதிப்பு ஜம்மு-காஷ்மீரின் குல்மார்க் மாவட்டத்தில் துவங்கி வைக்கப் பட்டது.

# தமிழ்நாடு செய்திகள்

## வன்னியர்களுக்கான உள் இடஒதுக்கீடு

❖ தமிழக அரசானது பிப்ரவரி 26 அன்று மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் (V) பிரிவின் கீழ் உள்ள சமூகத்திற்கு தற்காலிகமாக 10.5 சதவீத உள் இட ஒதுக்கீடு வழங்கும் ஒரு மசோதாவை நிறைவேற்றி உள்ளது.

❖ இது பிப்ரவரி 26 அன்று ஆளுநரின் ஒப்புதலைப் பெற்றது.

❖ இது சுருக்கமாக 2021 ஆம் ஆண்டின் சிறப்பு இட ஒதுக்கீட்டுச் சட்டம் என்று அழைக்கப் படுகிறது.

❖ மேலும் இது இரண்டு பிரிவாக உள்ளது - ஒன்று 25 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் 68 சீர் மரபினர் (Denotified Communities) ஆகியோரையும், மற்றொன்று மீதமுள்ள 22 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களையும் உள்ளடக்கியதாகும்.

❖ இதில் வன்னிய குல சத்திரியர் சமூகத்தில் வன்னியர், வன்னியா, வன்னிய கவுண்டர், கவுண்டர், படையாட்சி, பள்ளி மற்றும் அக்னி குல சத்திரியர் ஆகியோர் அடங்குவர்.

❖ இந்த மசோதா சீர் மரபினர் சமூகங்களுக்கும் மற்றும் அதைப் போன்றுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கும் 7% உள் ஒதுக்கீட்டையும் வழங்குகிறது.

❖ மேற்கண்ட பிரிவில் சேர்க்கப்படாத பிற மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு 2.5% ஒதுக்கீடு வழங்கப் பட இருக்கிறது.

❖ இது ஒரு தற்காலிக ஏற்பாடு மட்டுமே.

❖ இதில் நீதிபதி ஏ.குலசேகரன் ஆணையம் அதன் பரிந்துரைகளை வழங்கிய பின்னர் மாற்றங்கள் செய்யப்படும்.

❖ இது தமிழ்நாட்டின் சாதிகள், சமூகங்கள் மற்றும் பழங்குடியினர் பற்றிய அளவிடக் கூடிய தரவுகளைச் சேகரிக்க அமைக்கப் பட்டது.

## ஆசியாவின் மிகப்பெரிய கால்நடை ஆராய்ச்சி மையம்

❖ சேலத்தின் தலைவாசல் அருகே கால்நடை மற்றும் விலங்கு அறிவியலில் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்கான மேம்பட்ட நிறுவனத்தை (AIIRLAS - Advanced Institute of Integrated Research in Livestock and Animal Science) தமிழக முதலமைச்சர் திறந்து வைத்தார்.

❖ இது ஆசியாவின் மிகப்பெரிய ஆராய்ச்சி மையமாகும்.

❖ இந்த மையத்தில் நான்கு பிரிவுகள் உள்ளன. அவை,

- கால்நடை பண்ணை வளாகம்,
- கால்நடை பொருட்கள் தொழில்நுட்ப வளாகம்,
- விரிவாக்கக் கல்வி, திறன் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி வளாகம் மற்றும்

  - கால்நடை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஆகும்.

## இ-தாகில் தளம்

- நுகர்வோர் குறை தீர்க்கும் இ-தாகில் தளமானது இப்போது 15 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் செயல்பட்டு வருகிறது.
- இதற்காக 'edaakhil.nic.in' என்ற பெயரில் நுகர்வோர் புகார்களை மின்னணு-தாக்கல் செய்வதற்கான வலைப் பயன்பாட்டைத் தேசிய தகவல் மையம் உருவாக்கியுள்ளது.
- இந்த மின்னணு-தாக்கல் ஆனது இந்திய தேசிய நுகர்வோர் குறை தீர்ப்பு ஆணையத்தால் தொடங்கப் பட்டது.
- 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 8, அன்று இதைச் செயல்படுத்திய முதல் மாநிலம் தில்லி ஆகும்.
- 2019 ஆம் ஆண்டிற்கான நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2020 ஆம் ஆண்டின் ஜூலை 20 முதல் நடைமுறைக்கு வந்தது.
- இது நுகர்வோர் ஆணையத்தில் நுகர்வோர் தங்களது புகார்களை மின்னணு முறையில் தாக்கல் செய்வதற்கும், புகாரைத் தாக்கல் செய்வதற்கான கட்டணங்களை இணைய வழியில் செலுத்துவதற்குமான வசதிகளைக் கொண்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு அஞ்சல் வாக்குகள் இல்லை

- ஐந்து மாநிலங்களில் நடைபெறவிருக்கும் தேர்தல்களில் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு அஞ்சல் வாக்கு மூலம் வாக்களிக்க இயலாது என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
- இது ஒரு வாக்காளர் தொலைதூரத்தில் இருந்து வாக்களிக்கக் கூடிய ஒரு வசதியாகும்.
- வாக்குச் சீட்டில் அவர்கள் விருப்பத்தைப் பதிவு செய்வதன் மூலம் வாக்காளர் வாக்களிப்பர்.
- பின்னர் வாக்குகளை எண்ணுவதற்கு முன் வாக்காளர் அதைத் தேர்தல் அதிகாரிக்கு அனுப்பி வைப்பார்.
- மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 என்ற சட்டத்தின் பிரிவு 60 என்பதின் கீழ், ஒருவருக்கு அஞ்சல் வாக்குகள் வசதியானது வழங்கப்படுகிறது.

## நகரப் புத்தாக்கப் பரிமாற்றம்

- வீட்டு வசதி மற்றும் நகர விவகாரங்களுக்கான அமைச்சகமானது 'நகரப் புத்தாக்கப் பரிமாற்றம்' என்ற தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் தளமானது சிந்தனையாளர்களுக்கு நகரங்களைத் தேசியளவில் இணைக்கும் ஒரு சூழலை வழங்கும்.
- நகரங்களின் வளர்ந்து வரும் சவால்களுக்கு இது புதுமையான தீர்வுகளை உருவாக்கும்.
- இது ஒரு வலுவான, வெளிப்படையான மற்றும் பயனர் மைய செயல்முறை மூலம் தீர்வுகளைக் கண்டுபிடிப்பது, வடிவமைப்பது மற்றும் சரிபார்ப்பது ஆகியவற்றை எளிதாக்கும்.

- மேலும், பொருத்தமான தீர்வுகளைத் தேடுவதற்குச் சிந்தனையாளர்களுக்கும் நகரங்களுக்கும் இடையிலான தடைகளை இது குறைக்கும்.

### ஸ்வச் முதன்மை இடங்கள் கட்டம் IV

- ஸ்வச் முதன்மை இடங்களின் நான்காம் கட்டத்தின் கீழ் பன்னிரண்டு முக்கிய இடங்களைத் தேர்ந்தெடுப்பதாக ஜல் சக்தி அமைச்சகத்தின் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.
- தளங்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களில் சுகாதார மற்றும் தூய்மை தரங்களை மேம்படுத்துவதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பார்வையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்துவதை இந்த முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதில் பின்வரும் தளங்கள் அடங்கும்.

| S No | Iconic Site | State |
|---|---|---|
| 1. | Ajanta Caves | Maharashtra |
| 2. | Sanchi Stupa | Madhya Pradesh |
| 3. | Kumbhalgarh Fort | Rajasthan |
| 4. | Jaisalmer Fort | Rajasthan |
| 5. | Ramdevra | Jaisalmer, Rajasthan |
| 6. | Golconda Fort | Hyderabad, Telangana |
| 7. | Sun Temple | Konark, Odisha |
| 8. | Rock Garden | Chandigarh |
| 9. | Dal Lake | Srinagar, Jammu & Kashmir |
| 10. | Banke Bihari Temple | Mathura, Uttar Pradesh |
| 11. | Agra Fort | Agra, Uttar Pradesh |
| 12. | Kalighat Temple | West Bengal |

# சர்வதேசச் செய்திகள்

### கோவாக்ஸ் தடுப்பூசிகளைப் பெற்ற முதல் நாடு

- ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவு பெற்ற கோவாக்ஸ் முன்னெடுப்பின் மூலம் பெறப் பட்ட தடுப்பூசிகளைப் பெற்ற உலகின் முதல் நாடாக கானா திகழ்கிறது.
- 6,00,000 அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசி மருந்துகள் இந்திய சீரம் நிறுவனத்தால் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது.
- இந்த மேற்கு ஆப்பிரிக்க தேசத்தின் 30 மில்லியன் மக்களுக்கு நோய்த் தடுப்பினை ஏற்படுத்துவதற்கான முதல் படியாக இது அமைந்தது.
- இந்தத் தடுப்பூசிகளை யுனிசெஃப் வழங்குகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பி.எஸ்.எல்.வி-சி 51

- பி.எஸ்.எல்.வி செயற்கைக் கோளின் (பி.எஸ்.எல்.வி-சி 51) 53வது திட்டமானது பிரேசிலின் அமேசானியா - 1 என்ற ஒரு முதன்மை செயற்கைக் கோளையும் 18 இணை செயற்கைக் கோள்களையும் ஏவியுள்ளது.
- முதன்முறையாக ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து இந்திய ராக்கெட் மூலம் ஒரு பிரேசில் செயற்கைக் கோள் விண்ணிற்குச் செலுத்தப்பட்டது.
- இது 2021 ஆம் ஆண்டிற்கான இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) முதல் ஏவுதலையும் குறித்தது.
- இந்த இணை செயற்கைக் கோள்களில் சென்னையைச் சேர்ந்த ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா என்பதின் சதீஷ் தவான் சாட் (SD SAT) என்ற செயற்கைக் கோளும் அடங்கும்.
- இந்த விண்கலத்தின் மேல் பக்கத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் புகைப்படம் பொறிக்கப் பட்டுள்ளது.
- இது எஸ்டி அட்டையில் (SD card - பாதுகாக்கப்பட்ட டிஜிட்டல் அட்டை) “பகவத் கீதை” புத்தகத்தையும் சேர்த்து அனுப்புகிறது.
- அமேசானியா - 1 செயற்கைக் கோளானது பெங்களூரைத் தலைமையிடமாகக் கொண்ட இஸ்ரோவின் வணிகப் பிரிவான நியூ ஸ்பேஸ் இந்தியா நிறுவனத்தின் மூலம் வணிகத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட முதல் திட்டமாகும்.



Deep impact: PSLV-C51 lifting off from the Satish Dhawan Space Centre in Sriharikota, on Sunday. PTI


# இதரச் செய்திகள்

## நதி இணைப்புத் திட்டத்திற்கு எதிராக மனு

- தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் 262 கி.மீ தூரம் கொண்ட காவிரி - வெள்ளாறு – வைகை - குண்டாறு நதி இணைப்புத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- இப்போது கர்நாடக அரசு தமிழ்நாட்டின் இந்தப் புதிய திட்டத்தை எதிர்த்து உச்ச

நீதிமன்றத்தை அணுக முடிவு செய்துள்ளது.

- ❖ இத்திட்டத்தின் மூலம் 45 டி.எம்.சி அடி அளவிலான உபரி தண்ணீரைப் பயன்படுத்த தமிழகம் முயற்சிக்கிறது.
- ❖ ஆனால் கர்நாடக அரசாங்கத்தின் படி, இந்தத் திட்டம் மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் தாவா சட்டம்,1956 என்ற சட்டத்தின்படி இல்லை.
- ❖ அந்தச் சட்டத்தின் படி, உபரி நீரும் கணக்கில் கொள்ளப் பட்டு, அது குறித்து தீர்ப்பாயம் தீர்ப்பளிக்க வேண்டும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 03**

# TNPSC துளிகள்

- சமீபத்தில் இராஜஸ்தான் அரசானது அம்மாநிலச் சட்டமன்றத்தில் தனது முதலாவது காகிதமல்லாத வகையிலான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டிற்கான இந்தியப் பெண்கள் லீக் போட்டியை ஒடிசா நடத்தும் என்று அகில இந்தியக் கால்பந்துக் கூட்டமைப்பானது அறிவித்துள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## நம்ம சென்னை ஸ்மார்ட் அட்டை (திறன் மிகு அட்டை)

- நம்ம சென்னை ஸ்மார்ட் அட்டை என்பது ரூபேவினால் ஆதரிக்கப்பட்டு இணைந்து வழங்கப் படுகின்ற, நேரடித் தொடர்பற்ற ஒரு முன் கூட்டியே பணம் செலுத்தல் அட்டை ஆகும்.
- இது பெருநகர சென்னை மாநாகராட்சி மையங்களில் வரி மற்றும் பயன்பாட்டுக் கட்டணங்களை டிஜிட்டல் முறையில் செலுத்த வழி வகை செய்கின்றது.
- இந்த அட்டை முறையைத் தொடங்குவதற்காக ஐசிஐசிஐ வங்கியானது பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பொலிவுறு நகர நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்துள்ளது.




# தேசியச் செய்திகள்

## காஷ்மீரில் எல்லை தாண்டிய துப்பாக்கிச் சூடு

- இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாட்டு இராணுவங்கள் பிப்ரவரி 24 ஆம் தேதி நள்ளிரவிலிருந்து எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் போர் நிறுத்தத்தைக் கடைபிடிக்கவும் அனைத்து ஒப்பந்தங்களையும் கடுமையாகக் கடைபிடிக்கவும் ஒப்புக் கொண்டுள்ளன.
- 2003 ஆம் ஆண்டு போர் நிறுத்த விதி மீறல்கள் குறித்த ஒப்பந்தம் ஏற்பட்டதிலிருந்து மேற்கொள்ளப்பட்ட முதலாவது புரிந்துணர்வு இதுவாகும்.
- இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தமானது கார்கில் போருக்குப் பிறகு 4 ஆண்டுகள் கழித்து, அதாவது 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மேற்கொள்ளப் பட்டது.

- 2003 ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தமானது இந்தியா - பாகிஸ்தான் நாடுகளின் முதன்மை எல்லைப் பகுதி முழுவதும் நடைமுறைக்கு வந்தது.

# சர்வதேசச் செய்திகள்

## பிரிக்ஸ் தலைமைத்துவம் – இந்தியா

- இந்தியாவானது 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 25 அன்று மூன்று நாட்கள் நடைபெறும் ஷெர்பாக்களின் அறிமுகச் சந்திப்புடன் பிரிக்ஸ் தலைமைத் துவத்தை ஏற்றுக் கொண்டுள்ளது.
- பிரிக்ஸ் என்பது பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகியவற்றின் ஒரு சுருக்கமாகும்.
- பிரிக்ஸ் நாடுகளின் அதிகாரப்பூர்வ வருடாந்திர மாநாடுகள் 2009 ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்டு வருகின்றன.
- 12வது பிரிக்ஸ் மாநாடானது ரஷ்யாவினால் காணொலி வாயிலாக நடத்தப் பட்டது.

## தற்கொலைகளைத் தடுப்பதற்காக தனிமைத்துவத்திற்கான அமைச்சர்

- ஜப்பானின் பிரதமரான யோஷிஹைடு சுகா அவர்கள் தனது அமைச்சரவையில் தனிமைத்துவத்திற்கான ஒரு அமைச்சரை சேர்த்துள்ளார்.
- கொரானா வைரஸ் தொற்றினால் அதிகரித்து வரும் தற்கொலைகளைத் தடுப்பதற்காக இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ஜப்பானின் தற்கொலை விகிதமானது கடந்த 11 ஆண்டுகளில் தற்பொழுது முதன்முறையாக கோவிட்-19 நோய்த் தொற்றின் காரணமாக அதிகரித்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் இதே போன்ற ஒரு நடவடிக்கையை மேற்கொண்ட முதலாவது நாடு ஐக்கிய இராஜ்ஜியம் ஆகும்.

## பயோஆசியா – 2020 என்பதின் 18வது பதிப்பு

- ஆசியாவின் மிகப்பெரிய வாழ்வியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மாநாடான பயோஆசியா – 2021 என்ற ஒரு மாநாடானது ஹைதராபாத்தில் நடத்தப்பட்டது.
- இது உலகளவில் வாழ்வியல் துறையில் உள்ள தொழிற்துறைத் தலைவர்களின் பங்கேற்புடன் கோவிட் – 19 நோய்த் தொற்றின் மீது கவனம் செலுத்தியது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, “Moving the Needle” (ஊசியை நகர்த்துதல்) என்பதாகும்.

## பிரதிநிதிகள் அவையை மீண்டும் ஏற்படுத்துதல்


- நேபாள நாட்டு உச்ச நீதிமன்றமானது அந்நாட்டின் கலைக்கப்பட்ட பிரதிநிதிகள் அவையை மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 20 அன்று நேபாள நாட்டு அதிபர் பித்யா தேவி பந்தாரி அவர்கள் பிரதிநிதிகள் அவையைக் கலைத்ததைத் தொடர்ந்து, அந்நாடு அரசியல் பிரச்சினையைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது.
- மேலும் அவர் அந்நாட்டில் தேர்தலானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 மற்றும் மே 10 ஆகிய தேதிகளில் நடத்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

### அணைகள் மற்றும் நதிகளின் நீடித்த மேம்பாடு குறித்த கருத்தரங்கு

- அணைகள் மற்றும் ஆற்றுப் படுகைகளின் நீடித்த வளர்ச்சி குறித்த மிகப்பெரிய அணைகள் மீதான சர்வதேச ஆணையக் கருத்தரங்கானது ஜல்சக்தித் துறை அமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டது.
- இது பின்வருவனவற்றுடன் இணைந்து மிகப்பெரிய அணைகள் குறித்த சர்வதேச ஆணையத்தினால் நடத்தப் படுகின்றது.
    - அணை மறுசீரமைப்பு மேம்பாட்டுத் திட்டம்
    - மத்திய நீர் ஆணையம்
    - தேசிய நீர்வள இயல் திட்டம்
- இது இந்திய அணைப் பொறியியல் வல்லுநர்கள் மற்றும் நிறுவனங்கள் தங்களது அனுபவங்கள், கருத்தாக்கங்கள் மற்றும் சமீபத்திய வளர்ச்சியைப் பகிர்ந்து கொள்ள வேண்டி ஒரு வாய்ப்பினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### அல்சைமர் நோய் (முதுமறதி) சிகிச்சைக்கான மருந்து




- ஆராய்ச்சியாளர்கள் அமைப்பில் இடையூறினை ஏற்படுத்தக் கூடிய ஒரு புதிய சிறு மூலக்கூறுகளின் தொகுப்பை வடிவமைத்துள்ளனர்.
- அதன் மூலம் நியூரான்கள் அல்சைமர் நோயில் செயல்படாத நிலைக்கு மாறும்.
- இவர்கள் ஜவஹர்லால் நேரு மேம்படுத்தப்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஆவர்.
- இந்த மூலக்கூறானது (மூலக்கூறு TGR63) அமீலாய்டு பீட்டா என்ற நச்சுத் தன்மையைக் குறைக்கும் திறன் கொண்டது.
- இது உலகம் முழுவதும் தற்பொழுது ஏற்பட்டு வரும் மனச் சோர்வினால் ஏற்படும் ஒரு வகையான நோயைத் தடுக்க அல்லது சரி செய்யும் திறன் கொண்ட ஒரு மருந்தாகும்.
- அல்சைமர் நோய் என்பது மீளாத தன்மை கொண்ட, அதிகரித்து வரும் ஒரு மூளை தொடர்பான பிரச்சினையாகும்.
- இது நினைவு மற்றும் சிந்திக்கும் திறன் ஆகியவற்றைப் படிப்படியாக அழித்து இறுதியில் சிறு பணிகளைக் கூட மேற்கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## புதிய அல்பைன் தாவர இனங்கள்

- விஞ்ஞானிகளைக் கொண்ட ஒரு குழுவானது அருணாச்சலப் பிரதேசத்தின் தவாங் மாவட்டத்தில் ஒரு புதிய அல்பைன் தாவர இனத்தைத் கண்டறிந்துள்ளது.
- இந்தத் தகவல்கள் "பயோடைவர்சிட்டாஸ் :உயிரியல் பல்லுயிர்ப் பெருக்க இதழ்" என்ற இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய தாவர இனமானது இமயமலை சூரியகாந்தி குடும்பத்தைச் சார்ந்தது ஆகும்.
- இதற்கு 'சிரமந்த்தோடியம் இண்டிகம்' (Cremanthodium indicum) என்று பெயரிடப் பட்டு உள்ளது.
- இந்தத் தாவர இனமானது பொதுவாக ஜூலை மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரை மலர்கிறது.
- இது தவாங் மாவட்டத்தின் பெங்கா-டெங் சோ ஏரியில் மட்டுமே காணப்படுகின்றது.
- பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் வழிகாட்டுதலின் படி, இந்த ஆல்பைன் தாவர இனமானது "மிகவும் அருகி வரும் இனமாக" பட்டியலிடப்பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## குஷிநகர் விமான நிலையம்

- உத்தரப் பிரதேசத்தில் உள்ள கட்டுமானப் பணி நடைபெற்று வரும் குஷிநகர் விமான நிலையமானது சர்வதேச விமானங்களை இயக்குவதற்கான அனுமதியைப் பெற்று உள்ளது.
- இதற்கு விமானப் போக்குவரத்தின் ஒழுங்குமுறை ஆணையகமான விமானப் போக்குவரத்தின் தலைமை இயக்குநரகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- இது செயல்பாட்டிற்கு வந்தால், உத்தரப் பிரதேசத்தில் சர்வதேச விமானங்களை இயக்கும் மூன்றாவது விமான நிலையம் குஷிநகர் விமான நிலையமாகும்.
- தற்பொழுது, உத்தரப் பிரதேசத்தில் செயல்பட்டு வரும் 2 சர்வதேச விமான நிலையங்கள் பின்வருமாறு
  - லக்னோவில் உள்ள சௌத்திரி சரண் சிங் சர்வதேச விமான நிலையம்.
  - வாரணாசியில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி சர்வதேச விமான நிலையம்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## நாசாவின் செவ்வாய்க் கிரகத்தின் 2020 ஆம் ஆண்டுத் திட்டம்

- இந்திய-அமெரிக்கரான சுவாதி மோகன் அவர்கள் நாசாவின் செயல்பாட்டு விண்கலனான Perseverance ஆய்வுக் கலனானது செவ்வாய்க் கிரகத்தில் தரை இறங்குன் நிகழ்விற்கு தலைமைத் தாங்கினார்.
- இவரது குடும்பம் இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்குக் குடி பெயர்ந்துள்ளது.
- இந்தத் தரை இறக்கமானது கடந்த ஒரு வாரத்தில் மட்டும் செவ்வாய்க் கிரகத்திற்கு

மேற்கொள்ளப் பட்ட மூன்றாவது பயணத்தைக் குறிக்கின்றது.

- கடந்த வாரத்தில் ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 2 விண்கலன்கள் செவ்வாய் கிரகத்தைச் சுற்றியுள்ள சுற்று வட்டப் பாதையில் சேர்ந்து உள்ளன.

# இதரச் செய்திகள்

## ஆஸ்திரேலியாவின் மிகப்பழமையான பழங்காலத்தைச் சேர்ந்த பெருங்கற் கலை

- ஒரு கங்காரு ஓவியமானது சில பழமையான குளவிகளின் உதவியுடன் ஆஸ்திரேலியாவில் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- இந்த கங்காரு ஓவியமானது பழங்காலத்தைச் சேர்ந்த சமூகக் கலைஞர்களால் ஏறத்தாழ 17,000 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப் பட்டதாகும்.
- இந்த ஓவியமானது ஆஸ்திரேலியாவின் மிகப் பழமையான பழுது படாத பெருங்கல் ஓவியமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- இந்த ஓவியமானது 2 மீட்டர் நீளமுடைய ஒரு கலைப் பணியைக் கொண்டதாகும்.
- இந்தக் கலைப் பணியானது முந்தைய இயற்கைக் கலைப் பாணியில் வரையப் பட்டு உள்ளது.
- இந்தக் குழுவானது 8 கல் குகைகளிலிருந்து 16 வெவ்வேறு ஓவியங்களுடன் ஈர மண் கொண்ட குளவிக் கூடுகளைக் கண்டறிந்துள்ளது.



## உலகளாவிய அளவில் பள்ளிகளில் உணவளித்தல் நிலை – 2020

- ஐக்கிய நாடுகள் உணவுப் பாதுகாப்புத் திட்டமானது (WFP - World Food Programmes) “உலகளாவிய அளவில் பள்ளிகளில் உணவளித்தல் நிலை” என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது 2020 ஆம் ஆண்டில் உலகளாவிய அளவில் பள்ளிகளில் உணவளித்தல் நிலை குறித்த ஆய்வை அளிக்கின்றது.
- இது முதன்முதலில் 2013 ஆம் ஆண்டில் WFP அமைப்பால் வெளியிடப்பட்டது.

- 2020 ஆம் ஆண்டுப் பதிப்பானது 2013 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் மாற்றம் அடைந்துள்ள நிலையை ஆய்வு செய்கின்றது.
- இது கல்வி மற்றும் ஆரோக்கிய நலப் பலன் அளிக்கும் திட்டங்களின் ஆதாரம் மற்றும் புரிதலில் உள்ள மேம்பாடுகள் குறித்த திருத்தப்பட்ட தகவல்களை அளிக்கின்றது.
- நோய்த் தொற்று மிகக் கடுமையாக இருந்த 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், 199 நாடுகள் தங்களது பள்ளிகளை மூடி விட்டன.
- இதன் காரணமாக ஏறத்தாழ 370 மில்லியன் குழந்தைகள் பள்ளியில் வழங்கப்படும் ஊட்டச்சத்து மிக்க உணவின்றித் தவித்தனர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 04**

# தமிழ்நாடு செய்திகள்

## இந்தியப் போட்டி ஆணையத்தின் தெற்கு பிராந்திய அலுவலகம்

- மத்திய நிதி மற்றும் பெரு நிறுவனங்கள் துறை அமைச்சகத்தின் அமைச்சரான நிர்மலா சீதாராமன் அவர்கள் காணொலி வாயிலாக சென்னையில் இந்தியப் போட்டி ஆணையத்தின் (CCI - Competition Commission of India) தெற்குப் பிராந்திய அலுவலகத்தை திறந்து வைத்தார்.
- CCI நிறுவனத்தின் சென்னைப் பிரிவு அலுவலகமானது தில்லிப் பிரிவு அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் அமலாக்கம், விசாரணை மற்றும் பரிந்து பேசுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் ஒரு அலுவலகமாகச் செயல்படும்.
- இந்தப் பிராந்திய அலுவலகமானது தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா மற்றும் ஒன்றியப் பிரதேசங்களான புதுச்சேரி மற்றும் லட்சத்தீவு ஆகியவற்றின் தேவையைப் பூர்த்தி செய்ய உள்ளது.

## விழுப்புரத்தில் டாக்டர் ஜெ.ஜெயலலிதா பல்கலைக்கழகம்

- தமிழ்நாடு மாநில சட்டமன்றமானது ஒரு புதிய பல்கலைக்கழகத்தை உருவாக்கிடச் செய்வதற்காக டாக்டர் ஜெ. ஜெயலலிதா பல்கலைக்கழக மசோதா 2021 என்ற ஒரு மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- இதன்படி, திருவள்ளுவர் பல்கலைக்கழகமானது அடுத்து இரண்டாக பிரிக்கப்பட்டு, விழுப்புரத்தில் ஒரு புதிய பல்கலைக்கழகமானது உருவாக்கப்பட உள்ளது.
- இந்தப் புதிய பல்கலைக்கழகமானது இந்தக் கல்வி ஆண்டிலிருந்துச் செயல்பட இருக்கின்றது.
- திருவள்ளுவர் பல்கலைக்கழகமானது முன்னாள் முதல்வரான மு. கருணாநிதி அவர்களால் ஏற்படுத்தப் பட்டது.

# தேசியச் செய்திகள்

## ஒரு மாவட்டம் ஒரு குறிப்பிட்ட பொருள்

- மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகமானது மத்திய உணவு பதப்படுத்துதல் தொழிற்துறை அமைச்சகத்துடன் ஆலோசித்து, ஒரு மாவட்டம் ஒரு குறிப்பிட்ட பொருள் என்ற திட்டத்திற்கான பொருட்களை இறுதி செய்துள்ளது.
- இந்தப் பொருட்கள் நாடு முழுவதும் 728 மாவட்டங்களுக்காக வேண்டி விவசாயம், தோட்டக் கலை, விலங்குகள், கோழிப் பண்ணை, பால், மீன் மற்றும் நீர்வளம், கடல்சார் துறை ஆகியவற்றிலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளது.
- இந்தப் பொருட்களின் பட்டியலானது மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் வேளாண் ஆராய்ச்சி மையம் ஆகியவற்றிடமிருந்து உள்ளீடுகளைப் பெற்ற பின்னர், இறுதி செய்யப் பட்டுள்ளது.
- இந்தப் பொருட்கள் இந்திய அரசுத் திட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் ஒரு தொகுப்பு அணுகுமுறையில் ஊக்குவிக்கப்பட உள்ளது.
- இது பொருட்களின் மதிப்பை உயர்த்துவதற்கு உதவ இருக்கின்றது.
- மேலும் இதன் முக்கிய நோக்கம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதாகும்.

- அடையாளம் காணப்பட்டுள்ள இந்தப் பொருட்கள் மத்திய உணவுப் பதப்படுத்துதல் துறை அமைச்சகத்தின் பிரதான் மந்திரி-எப்எம்இ (FME) என்ற திட்டத்தின் கீழ் ஆதரிக்கப்பட இருக்கின்றது.
- 226 மாவட்டங்களுக்காக பழங்களும் 107 மாவட்டங்களுக்காக காய்கறிகளும் 105 மாவட்டங்களுக்காக நறுமணப் பொருட்களும் இதில் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- முதன்மை உணவுப் பயிரான நெல் ஆனது 40 மாவட்டங்களுக்காகவும் கோதுமை ஆனது 5 மாவட்டங்களுக்காகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## கடலுக்கடியிலான சுரங்கம் – மும்பை

- கடலுக்கடியிலான சுரங்கங்கள் மும்பை கடலோர சாலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக கட்டமைக்கப்பட இருக்கின்றன.
- இது கடல், சுரங்கங்கள், பாலங்கள் ஆகிய புதுப்பித்து மீட்டெடுக்கப்பட்ட பகுதிகளின் மீது மண்சார் சாலைகளை அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கடலோர சாலைத் திட்டம் என்பது மும்பையின் மேற்குக் கடற்கரையைத் தெற்கில் உள்ள கடல் பகுதியிலிருந்து வடக்கில் உள்ள கண்டிவாலியுடன் (Kandivali) இணைப்பதற்காக அமைக்கப்பட்டு வரும் 22.2 கிலோ மீட்டர் தொலைவுள்ள பயணத் தடையற்ற ஒரு சாலையாகும்.
- நாட்டின் முதலாவது கடலுக்கடியிலான சாலைச் சுரங்கம் இதுவாகும்.
- இது கிர்கோன் சௌபட்டி என்ற பகுதிக்கு (Girgaon Chowpatty) அருகில் அரபிக் கடலின் அடியில் செல்ல இருக்கிறது.

## கிருஷ்ணதேவராயரின் இறப்பிற்கான முதலாவது கல்வெட்டு ஆதாரம்



- இந்தியத் தொல்லியல் ஆய்வு மையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கிருஷ்ண தேவராய நாயக்கரின் இறப்பிற்கான முதலாவது கல்வெட்டு ஆதாரத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- இவர் துளுவ வம்சத்தைச் சேர்ந்த மூன்றாவது ஆட்சியாளர் ஆவார்.
- இவர் 1509-1529 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் விஜயநகரப் பேரரசின் அரசராக விளங்கினார்.

- இந்தக் கல்வெட்டானது தும்கூர் மாவட்டத்தில் ஹோனன்னஹல்லியில் உள்ள கோபால கிருஷ்ண ஆலயத்திற்கு அருகில் கண்டெடுக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கல்வெட்டின்படி, 1529 ஆம் ஆண்டு அக்டோபர் 17 அன்று கிருஷ்ண தேவராயர் இறந்தார்.
- தெற்கிலிருந்து ஆட்சி செய்த மிகவும் புகழ்பெற்ற ஆட்சியாளர்களில் அவர் ஒருவர் ஆவார்.

# முக்கிய தினங்கள்

## பூஜ்ஜியப் பாகுபாடு தினம் – மார்ச் 01

- பூஜ்ஜியப் பாகுபாடு தினமானது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 01 அன்று ஐக்கிய நாடுகள் மற்றும் இதர சர்வதேச நிறுவனங்களால் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்தத் தினமானது பாலினம், இனம், வயது, வருமானப் பிரிவு, சமூகம் மற்றும் மதம் போன்ற மனநிலை வரம்புகளை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டின் பூஜ்ஜியப் பாகுபாடு தினமானது தற்பொழுது உலகில் உள்ள பாகுபாடு, அதிலும் குறிப்பாக கோவிட்-19 நோய்த் தொற்றிற்குப் பின்பு ஏற்பட்ட பாகுபாடு மற்றும் சமத்துவமின்மை ஆகியவற்றை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




*பின்னணி*

- இத்தினமானது முதன்முதலில் 2014 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- இது ஐக்கிய நாடுகள் எய்ட்ஸின் (UNAIDS) செயல் இயக்குநரான மிச்செல் சிட்பி அவர்களால் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் தினமானது அனைத்து விதமான பாகுபாடுகளை ஒழிப்பதை நோக்கிய உலக ஒற்றுமையை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமாது எச்ஐவி/எய்ட்ஸ் உடன் வாழும் மக்களுக்கெதிரான பாகுபாடுகளை ஒழிப்பதற்காகப் போராடும் ஐக்கிய நாடுகள் எய்ட்ஸ் (UNAIDS) போன்ற அமைப்புகளால் குறிப்பாக அனுசரிக்கப்படுகின்றது.

## உலக உள்நாட்டு பாதுகாப்பு தினம் – மார்ச் 01

- இந்தத் தினமானது 1990 ஆம் ஆண்டில் சர்வதேச உள்நாட்டுப் பாதுகாப்பு அமைப்பால் ஏற்படுத்தப் பட்டது.

- இந்தத் தினமானது உள்நாட்டுப் பாதுகாப்பின் முக்கியத்துவம், அது குறித்த கௌரவம் மற்றும் மதிப்பைக் குறிக்கின்றது.
- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் அனைத்து இல்லங்களிலும் முதல் உதவியாளர்" (Civil Defence and the first aider in every home) என்பதாகும்.

***சர்வதேச உள்நாட்டுப் பாதுகாப்பு அமைப்பு***

- சர்வதேச உள்நாட்டுப் பாதுகாப்பு அமைப்பு என்பது அரசாங்கங்களுக்கிடையேயான ஓர் அமைப்பாகும்
- இது உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுப்புறம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் அதே வேளையில், குடிமக்களின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்காகவும் வேண்டி தமது பங்கினை அளிக்கும்.
- இது மொத்தம் 59 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.

## சர்வதேச யோகா திருவிழா

- சர்வதேச யோகா திருவிழாவானது ரிஷிகேஷ் நகரில் உத்தரகாண்டின் வேளாண் துறை அமைச்சரான சுபோத் உன்னியல், அகில பாரதிய அகாடா பரிசத்தின் தலைவரான நரேந்திர கிரி மற்றும் பதஞ்சலி யோகா பீடத்தின் தலைவரான ஆச்சாரியா பாலகிருஷ்ணா ஆகியோரால் தொடங்கி வைக்கப்பட்டது.
- இது மார்ச் 01 ஆம் தேதியன்று தொடங்கி வைக்கப்பட்டது.
- இது ஏழு நாட்கள் நடைபெறும் ஒரு சர்வதேச யோகா திருவிழாவாகும்.
- இந்தத் திருவிழாவானது உத்தரகாண்ட் சுற்றுலாத் துறை மேம்பாட்டு வாரியம் மற்றும் கார்வால் மண்டல் விகாஸ் நிகம் ஆகியவற்றால் இணைந்து நடத்தப்படுகின்றது.

## இந்தியாவின் நிலத் துறைமுகங்கள் ஆணையத்தின் 9வது நிறுவன தினம்

- இந்தியாவின் நிலத் துறைமுகங்கள் ஆணையமானது மார்ச் 01 ஆம் தேதியன்று தனது 9வது நிறுவன தினத்தைக் கொண்டாடியது.
- இது புது தில்லியில் தனது தலைமையகத்தைக் கொண்டு இருக்கின்றது.
- இந்தியாவின் நிலத் துறைமுகங்கள் ஆணையமானது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இது இந்தியாவில் எல்லை உள்கட்டமைப்பை உருவாக்குதல், மேம்படுத்துதல், பராமரித்தல் மற்றும் மேலாண்மை செய்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பான ஒரு ஆணையமாக செயல்படுகின்றது.
- இது இந்தியாவில் உள்ள அனைத்து எல்லைகளிலும் பல்வேறு ஒருங்கிணைக்கப்பட்ட சோதனைச் சாவடிகளையும் நிர்வகிக்கின்றது.

## 45வது குடிமைக் கணக்கியல் தினம் – மார்ச் 01

- இந்தியக் குடிமைக் கணக்கியல் சேவையானது (ICAS - Indian Civil Accounts Service) ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 01 அன்று "குடிமைக் கணக்கியல் தினத்தை" அனுசரிக்கின்றது.
- 2021 ஆம் ஆண்டானது 45வது குடிமைக் கணக்கியல் தினக் கொண்டாட்டங்களைக் குறிக்கின்றது.

- ICAS என்பது மத்திய நிதித்துறை அமைச்சகத்தின் மத்திய செலவினத் துறையின் கீழ் உள்ள இந்தியக் குடிமைப் பணிகளில் ஒன்றாகும்.

***ICAS***

- மத்திய அரசானது 1976 ஆம் ஆண்டில் பொது நிதியியல் மேலாண்மையில் மிகப்பெரிய சீர்திருத்தத்தைத் தொடங்கியது.
- தணிக்கை மற்றும் கணக்கியல் பணிகள் மத்திய அரசின் கணக்குகளைத் தயாரிக்கும் பணியை மேற்கொண்ட இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரியை, அப்பணியிலிருந்து விடுவித்ததன் மூலம் இது தனியாகப் பிரிக்கப் பட்டது.
- அதனைத் தொடர்ந்து, இந்தியக் குடிமைக் கணக்கியல் சேவையானது ஏற்படுத்தப் பட்டது.

## 3வது ஜன் அவுசாதி திவாஸ் கொண்டாட்டங்கள்

- 3வது ஜன் அவுசாதி திவாஸ் கொண்டாட்டங்கள் மார்ச் 01 ஆம் தேதியன்று தொடங்கியது.
- இது மார்ச் 07 ஆம் தேதி வரை அனுசரிக்கப்பட இருக்கின்றது.
- ஜன் அவுசாதி கேந்திராக்கள் நாடு முழுவதும் சுகாதாரச் சோதனை முகாம்களை நடத்தின.
- இந்த மருத்துவச் சோதனை செயல்பாடுகள் சர்க்கரை அளவு சோதனை, இரத்த அழுத்தச் சோதனை, இலவச மருத்துவர் ஆலோசனை மற்றும் இலவச மருந்து விநியோகம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- பிரதான் மந்திரி பாரதிய ஜன் அவுசாதி பரியோஜனாவைச் செயல்படுத்தும் நிறுவனமான இந்தியாவின் மருந்து பொதுத் துறை முகமையானது 2021 ஆம் ஆண்டு மார்ச் 07 அன்று மூன்றாவது ஜன் அவுசாதி திவாஸ் தினத்தை அனுசரித்தது.
- 2021 ஆம் ஆண்டிற்கான இதன் கருத்துரு, "சேவா பிஹி, ரோஜ்ஹர் பிஹி" (Seva bhi – Rozgar bhi) என்பதாகும்.
- பிரதான் மந்திரி பாரதிய ஜன் அவுசாதி பரியோஜனா என்பது இந்திய அரசு மருந்துத் துறையின் ஒரு மிக முக்கிய முன்னெடுப்பாகும்.
- இது தற்பொழுது குறைந்த விலையில் தரமான மருந்தினை அளிக்கும் நோக்கத்துடன் மக்களிடையே மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 05**

# TNPSC துளிகள்

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நெய்வேலியில் 1000 மெகா வாட் திறன் கொண்ட 'நெய்வேலி புதிய அனல் மின் நிலையத்தை' நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

# தமிழ்நாடு செய்திகள்

## ஜெயலலிதா சிறப்பு கலைமாமணி விருதுகள் மற்றும் இதர விருதுகள்


- புகழ்பெற்ற திரைப்பட நடிகர்/நடிகைகளான B. சரோஜா தேவி மற்றும் சௌகார் ஜானகி, புகழ்பெற்ற பின்னணிப் பாடகர்களான P. சுசிலா மற்றும் ஜமுனா ராணி மற்றும் பரதநாட்டியக் கலைஞர்களான அம்பிகா காமேஸ்வர் மற்றும் பார்வதி ரவி கந்தாசாலா ஆகியோர் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா சிறப்பு விருதுகளுக்காகத் தமிழக அரசினால் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளனர்.
- புகழ்பெற்ற கலைஞர்களான வாணி ஜெயராம் மற்றும் S. ராஜேஸ்வரி ஆகியோர் முறையே 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான அகில இந்திய எம்.எஸ். சுப்புலட்சுமி விருதுக்கு (இசை) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- மேலும் புகழ்மிக்க கலைஞர்களான அலர்மேல் வள்ளி மற்றும் சந்திரா தண்டாயுத பாணி ஆகியோரும் 2019 ஆம் ஆண்டின் அகில இந்திய விருதான பாலசரஸ்வதி (நாடகம்) விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- மொத்தம் 59 ஆளுமைகள் 2019 ஆம் ஆண்டிற்கான கலைமாமணி விருதுகளைப் பெறுவதற்காகவும் 65 ஆளுமைகள் 2020 ஆம் ஆண்டிற்கான கலைமாமணி விருதுகளைப் பெறுவதற்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- "அக்கரை சகோதரிகள்", எஸ். சுப்புலட்சுமி மற்றும் எஸ். சுவர்ணலதா, கலைஞரான அச்சல்புரம் எஸ். ராமராஜன், யோகி பாபு மற்றும் தேவதர்ஷினி, சினிமா தயாரிப்பாளரான கலைப்புலி எஸ். தாணு, திரைப்படத் தொகுப்பாளரான ஆண்ட்டனி மற்றும் பாரதிய வித்யா பவனின் K.N. ராமசாமி ஆகியோர் 2019 ஆம் ஆண்டிற்கான கலைமாமணி விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- நடிகர் சிவகார்த்திகேயன் மற்றும் நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ், இசை இயக்குநரான D. இமான் மற்றும் திரைப்பட இயக்குநரான கௌதம் வாசுதேவ் மேனன் ஆகியோர் 2020 ஆம் ஆண்டிற்கான விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- பொள்ளாட்சி தமிழ் இசைச் சங்கம் மற்றும் மதுரையில் ராஜா முத்தையா மன்றத்தில் உள்ள தமிழ் இசைச் சங்கம் ஆகியவை சிறந்த கலாச்சார அமைப்புகளுக்கான கேடயங்களைப் பெற இருக்கின்றன.
- திருவண்ணாமலையில் உள்ள சபரி நாடகக் குழுவானது சிறந்த நாடகக் குழுவிற்காக சுழல் கேடயத்தைப் பெற இருக்கின்றது.

## புதிய உணவுப் பூங்கா – கங்கை கொண்டான்

- 2020-21 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்த திரு. பன்னீர் செல்வம் அவர்கள் தமிழ்நாடு அரசு திருநெல்வேலியில் உள்ள கங்கை கொண்டானில் ஒரு மிகப்பெரிய உணவுப் பூங்கா ஒன்றை அமைப்பதற்கு ஒப்புதல்

அளித்துள்ளதாக அறிவித்துள்ளார்.

- மேலும் இவர் தர்மபுரி, அரியலூர், பெரம்பலூர், கரூர், நாகப்பட்டினம், ராமநாதபுரம் மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களிலும் உணவுப் பூங்காக்களை அமைப்பதற்குப் பரிந்துரைத்துள்ளதாகவும் அறிவித்துள்ளார்.
- மேலும் அவர் தேனீ, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், கடலூர், விழுப்புரம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் மேலும் 8 வேளாண் பதப்படுத்துதல் தொகுப்புகளை அமைப்பதற்குப் பரிந்துரைக்கப் பட்டு உள்ளதாகவும் அறிவித்துள்ளார்.
- இவை பிரதான் மந்திரி கிசான் சம்பதா யோஜனாவின் கீழ் அமைக்கப்படுகின்றன.




# தேசியச் செய்திகள்

## "சுகம்யா பாரத் செயலி" மற்றும் "புகைப்படத் தொகுப்பினை அணுகுதல்"

- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை அமைச்சரான தாவர் சந்த் கெலாட் அவர்கள் "சுகம்யா பாரத் செயலி" மற்றும் "புகைப்படத் தொகுப்பினை அணுகுதல்" என்ற ஒரு கையேடு இரண்டையும் தொடங்கி வைத்துள்ளார்.
- இந்தச் செயலி மற்றும் கையேடு இரண்டும் மாற்றுத் திறனாளிகளின் அதிகாரமளிப்புத் துறையினால் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- இது மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியவர்கள் ஆகியோருக்கான அணுகல் தொடர்பான பிரச்சினைகள் குறித்துப் பதிவு செய்ய வழிவகை செய்கின்றது.
- இந்தக் கைபேசிச் செயலியானது மாற்றுத் திறனாளிகளால் எதிர்கொள்ளப்படும் கொரானா வைரஸ் தொடர்பான பிரச்சினைகளையும் களைய இருக்கின்றது.
- இந்தக் கையேடானது பல்வேறு மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களிலிருந்து எடுக்கப் பட்ட புகைப்படங்களின் ஒரு தொகுப்பாகும்.
- இது படங்கள் வடிவில் நல்ல மற்றும் தீய நடைமுறைகள் குறித்து எளிதில் புரிந்து கொள்ளவும் அணுகல் தொடர்பான 10 அடிப்படை அம்சங்கள் குறித்து மாற்றுத் திறனாளிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்ட பங்குதாரர்களுக்கான கூறு மற்றும் வழிகாட்டியாகவும் செயல்படுகின்றது.
- இந்த செயலியானது முக்கியமான 5 அம்சங்களை அளிக்கின்றது. இதில் 4 அம்சங்கள் அணுகலை மேம்படுத்துவது தொடர்பானவையாகும். இதில் 5வது ஆக உள்ளது கொரானா வைரஸ் தொடர்பான பிரச்சினைகளுக்கான மாற்றுத் திறனாளிகளுக்காக

மட்டுமே உள்ள ஒரு சிறப்பு அம்சமாகும்.

## CERA வார உலக ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் தலைமைத்துவ விருது

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் CERA வார உலக ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் தலைமைத்துவ விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளார்.
- இது ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் துறையில் அவரது நீடித்த மற்றும் உறுதித் தன்மைக்கு வழங்கப்பட இருக்கும் ஓர் அங்கீகாரமாகும்.
- 2021 ஆம் ஆண்டானது இந்தக் கருத்தரங்கின் 34வது பதிப்பைக் குறிக்கின்றது.

## உலக உயிரி இந்தியா 2021

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை புவி அறிவியல் மற்றும் சுகாதார & குடும்ப நலத்துறை அமைச்சகத்தின் அமைச்சரான டாக்டர் ஹர்ஷ்வர்தன் அவர்கள் காணொலி வாயிலாக புதுதில்லியில் உலக உயிரி இந்தியா-2021 என்பதின் 2வது பதிப்பைத் தொடங்கி வைத்தார்.
- மூன்று நாட்கள் நடைபெறும் இந்தக் கருத்தரங்கானது உலக சமுதாயத்திற்கும் தேசிய அளவில் இந்தியாவிற்கும் தேசிய உயிரித் தொழில்நுட்பத் துறையின் வாய்ப்புகள் மற்றும் உறுதித் தன்மையை எடுத்துக் காட்ட இருக்கின்றது.
- மூன்று நாட்கள் கால அளவுள்ள இந்த நிகழ்ச்சியானது டிஜிட்டல் தளம் வாயிலாக 2021 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் தேதி முதல் 3 ஆம் தேதி வரை நடத்தப்படுகின்றது.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "வாழ்க்கையை மாற்றுதல்" (Transforming lives) என்பதாகும். இதன் குறிச் சொல், "உயிரி அறிவியலிலிருந்து உயிரிப் பொருளாதாரம்" (Biosciences to Bio-economy) என்பதாகும்.




# சர்வதேசச் செய்திகள்

## "வாய்ப்புக் குறியீடு – 2021" அறிக்கை

- இந்த அறிக்கையானது மக்கள் எவ்வாறு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்கிறார்கள் என்பதையும் அதை அடைவதற்கான வழியில் ஏற்படும் தடங்கல்கள் குறித்து மக்கள் புரிந்து கொள்ளவும் வழிவகை செய்கின்றது.
- இந்த ஆண்டின் அறிக்கையானது பெண்கள் எவ்வாறு வாய்ப்புகளை ஏற்படுத்திக்

கொள்கிறார்கள் என்பது குறித்தும் நோய்த் தொற்றுக் காலம், இந்தியாவில் பணியாற்றும் பெண்களுக்கான எதிர்காலச் செயல்பாடுகளைப் பாலின இடைவெளி எவ்வாறு குறைக்கின்றது என்பது குறித்தும் புரிந்து கொள்ள வழிவகை செய்கின்றது.

- இந்த அறிக்கையானது “LinkedIn” என்ற நிறுவனத்தால் உருவாக்கப் பட்டதாகும்.
- இந்த ஆய்வானது ஜனவரி மாதத்தில் மேற்கொள்ளப் பட்டதாகும்.
- இது ஆசியா-பசிபிக் பகுதி (APAC - Asia Pacific) முழுவதும் 10,000ற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களைக் கொண்டு நடத்தப்பட்டது.
- இதில் இந்தியாவில் இருந்து 2,285 நபர்கள் பங்கு பெற்றனர்.

***முக்கிய அம்சங்கள்***

- 10ல் 9 பெண்கள் அல்லது 89% பெண்கள் கொரானா வைரஸ் நோய்த் தொற்றினால் எதிர்மறைத் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர்.
- இந்தியாவில் 85 சதவிகிதத்திற்கும் மேல் அல்லது 5ல் 4 பெண்கள் பாலினத்தின் காரணமாக வளர்ச்சி, பதவி உயர்வு அல்லது பணிச் சலுகை ஆகியவற்றைப் பெறாமல் உள்ளனர்.
- இந்தச் சராசரியானது APAC பகுதிகளுக்கு 60% ஆக உள்ளது.
- APAC பகுதியுடன் ஒப்பிடும் பொழுது இந்தியாவில் உள்ள அதிகமான பெண்கள் எதிர்கால வாழ்க்கை மேம்பாடு குறித்து பாலினத்தின் தாக்கத்தை அதிக அளவில் சந்தித்துள்ளனர்.

# முக்கிய தினங்கள்

## பெண்களின் வரலாறு குறித்த மாதம் – 2021

- பெண்களின் வரலாறு குறித்த மாதமானது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தில் (மார்ச் 1 முதல் மார்ச் 31 ஆம் தேதி வரை) அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த மாதத்தின் முக்கிய நோக்கம் வரலாற்றில் பெண்களின் மிக முக்கியப் பங்கை கௌரவிப்பதும் அவர்களின் பரந்த அளவிலான சாதனைகளைக் கொண்டாடுவதும் ஆகும்.
- இது 1987 ஆம் ஆண்டு முதல்  அமெரிக்காவில் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதத்தில் அனுசரிக்கப் படுகின்றது.

## உலக வனவிலங்கு தினம் – மார்ச் 03

- உலக வனவிலங்கு தினமானது உலகின் விலங்குகள் மற்றும் தாவரங்கள் குறித்து விழிப்பணர்வை ஏற்படுத்துவதற்காகவும் அவற்றைக் கொண்டாடுவதற்காகவும் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 03 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகின்றது.
- இந்தத் தினமானது வனவிலங்குகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் உலகம் முழுவதும் விலங்குகள் மற்றும் தாவரங்களின் பன்முகத் தன்மை மற்றும் முக்கியத்துவம் குறித்து தங்களுக்கும் மற்றவர்களுக்கும் அறிவை ஏற்படுத்த வழிவகை செய்கின்றது.
- இந்த ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, “வனங்கள் மற்றும் வாழ்வாதாரங்கள் : நிலையான மக்கள் மற்றும் கோள்” (Forests and Livelihoods: Sustaining People and Planet) என்பதாகும்.
- 2013 ஆம் ஆண்டு டிசம்பர் 20 அன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது நமது

பூமியில் உள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் அனுசரிப்பதற்காகவும் வேண்டி மார்ச் 03 ஆம் தேதியை ஐக்கிய நாடுகள் உலக வனவிலங்கு தினமாக அறிவித்தது.




## உலக கேட்புத் திறன் தினம் – மார்ச் 03




- இந்தத் தினமானது கேட்புத் திறன் இழப்பு மற்றும் காது கேளாமையை எவ்வாறு தடுப்பது என்பது குறித்தும் உலகம் முழுவதும் காது மற்றும் செவித்திறன் நலன் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் ஒவ்வோர் ஆண்டும் அனுசரிக்கப் படுகின்றது.
- உலக சுகாதார நிறுவனமானது இந்த வருடாந்திர உலகக் கேட்புத்திறன் தின நிகழ்வை ஏற்படுத்துகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அனைவருக்குமான கேட்புத்திறன்! சோதனை செய்தல், மீட்டெடுத்தல், தகவல் தெரிவித்தல்" என்பதாகும்.

- உலகக் கேட்புத் திறன் தினம் – 2021 ஆனது கேட்புத்திறன் குறித்த முதலாவது உலக அறிக்கை வெளியிடப் பட்டதைக் குறிக்கின்றது.
- இந்த அறிக்கையின்படி, 2050 ஆம் ஆண்டில் 4ல் 1 நபர் செவித் திறன் குறைபாட்டைக் கொண்டிருப்பர் என்று கணிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 06**

# TNPSC துளிகள்

- எச்பி நிறுவனமானது கடலில் உள்ள நெகிழிக் கழிவுகளைப் பயன்படுத்தி தனது முதலாவது நுகர்வோர் தனிநபர் கணினியை மேம்படுத்தியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## அரசியல் கட்சிகளின் பதிவு

- புதிய அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்படக் கோருவதற்கான பொது அறிவிக்கை காலத்தைக் குறைத்துள்ளதாக இந்தியத் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.
- இது கோவிட்-19 நோய்த் தொற்றினால் ஏற்பட்ட காலதாமதங்கள் காரணமாக 30 நாட்களிலிருந்து 7 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- இந்த அறிவிக்கை காலத் தளர்வானது அசாம், தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி மற்றும் மேற்கு வங்கத் தேர்தல்களுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்யப்படுவதற்கான கடைசி நாள் வரை தொடர்ந்து அமலில் இருக்கும்.
    - அசாம், தமிழ்நாடு, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகியவற்றிற்கான வேட்பு மனு தாக்கல் செய்யப் படுவதற்கான கடைசி தேதி மார்ச் 19 ஆகும்.
    - மேற்கு வங்க மாநிலத்தில் வேட்பு மனு தாக்கல் செய்யப்படுவதற்கான கடைசி தேதி ஏப்ரல் 07 ஆகும்.
- இந்த வழிகாட்டுதலின்படி, விண்ணப்பதாரர்கள் 30 நாட்களுக்குள் 2 தேசிய மற்றும் உள்ளூர் நாளிதழ்களில் அவர்களுடைய கட்சியின் பரிந்துரைக்கப்பட்ட பெயரை ஒவ்வொரு இரண்டு நாட்களுக்கும் சேர்த்து குறிப்பிட வேண்டும்.

*குறிப்பு*

- அரசியல் கட்சிகளின் பதிவு செய்யப் படுதலானது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 என்ற சட்டத்தின் பிரிவு 29A என்பதின் விதிமுறைகளினால் நிர்வகிக்கப் படுகின்றது.
- தேர்தல் ஆணையத்துடன் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவின் கீழ் பதிவு செய்யக் கோரும் ஒரு கட்சியானது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 என்பதின் பிரிவு 29A மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் சரத்து 324 ஆகியவற்றினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்தியத் தேர்தல் ஆணையத்தினால் வரையறுக்கப் பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி, தங்கள் கட்சி தொடங்கப்பட்ட தேதியுடன் குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்தல் ஆணையத்திற்கு தங்களது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

## மக்களவை-மாநிலங்களவை தொலைக்காட்சி இணைப்பு

- மாநிலங்களவை மற்றும் மக்களவைத் தொலைக்காட்சி என்ற 2 தொலைக்காட்சி அலைவரிசைகளானது “சன்சத் தொலைக்காட்சி” என்ற ஒரே தொலைக்காட்சி அலைவரிசையாக அதிகாரப்பூர்வமாக இணைக்கப்பட்டுள்ளது.
- மாநிலங்களவைத் தொலைக்காட்சியானது நாடாளுமன்றத்தின் மேலவையின்

செயல்பாடுகளை ஒளிபரப்பப் பயன்படுத்தப் படுகின்றது.

- மக்களவைத் தொலைக்காட்சியானது நாடாளுமன்றத்தின் கீழ் அவையின் செயல்பாடுகளை ஒலிபரப்பப் பயன்படுத்தப்படுகிறது.
- தற்பொழுது சன்சத் தொலைக்காட்சி என்ற ஒரே குடையின் கீழ் மக்களவைத் தொலைக்காட்சியானது மக்களவையின் செயல்பாடுகளைத் தொடர்ந்து ஒளிபரப்பும் என்றும் மாநிலங்களவைத் தொலைக்காட்சியானது மாநிலங்களவையின் செயல்பாடுகளைத் தொடர்ந்து ஒளிபரப்பும் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.
- 1986 ஆம் ஆண்டு பணிப் பிரிவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான ரவி கபூர் அவர்கள் ஒரு ஆண்டுக் காலத்திற்கு இந்த சன்சத் தொலைக்காட்சியின் தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# சர்வதேசச் செய்திகள்

## ஹீருன் உலக செல்வந்தர்கள் பட்டியல் 2021

**THE RICH & FAMOUS: Hurun Global Rich List 2021**

| Rank | | Wealth ($bn) | Change YOY | Company | Country of residence |
|---|---|---|---|---|---|
| 1* | Elon Musk | 197 | 328% | Tesla | USA |
| 2↓ | Jeff Bezos | 189 | 35% | Amazon | USA |
| 3↓ | Bernard Arnault | 114 | 7% | LVMH | France |
| 4↓ | Bill Gates | 110 | 4% | Microsoft | USA |
| 5- | Mark Zuckerberg | 101 | 20% | Facebook | USA |
| 6↓ | Warren Buffet | 91 | -11% | Berkshire Hathaway | USA |
| 7* | Zhong Shanshan | 85 | New | YST | China |
| 8↑ | Mukesh Ambani | 83 | 24% | Reliance | India |
| 9- | Steve Ballmer | 80 | 19% | Microsoft | USA |
| 9* | Bertrand Puech & family | 80 | 45% | Hermes | France |

*Source: 10th Edition of Hurun Global Rich List 2021 Report*

- இது உலகில் உள்ள அமெரிக்க டாலர் செல்வந்தர்களின் தரவரிசையாகும்.
- இந்தத் தரவரிசையின் 10வது ஆண்டு வெளியீடு இதுவாகும்.
- முதன்முறையாக உலகில் செல்வம் மிக்க நபராக டெஸ்லாவின் எலோன் மஸ்க் இடம் பிடித்துள்ளார்.
- இதில் உலக அளவில் அமேசான்.காம் நிருவனத்தின் தலைவரான ஜெப் பெசோஸ் மற்றும் எல்விஎம்எச் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியான பெர்னார்டு அர்னால்டு ஆகியோர் முறையே 2வது மற்றும் 3வது இடத்தைப் பிடித்துள்ளனர்.
- நாடுகளின் அடிப்படையில் சீனாவானது 1058 என்ற அளவில் அதிக செல்வந்தர்களுடன் முதல் இடத்திலும் இதற்கு அடுத்து அமெரிக்கா (696), இந்தியா (177), ஜெர்மனி, ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகியவை 100ற்கும் அதிகமான செல்வந்தர்களுடன் அடுத்தடுத்த இடங்களிலும் இடம் பிடித்துள்ளன.
- கண்டங்களின் அடிப்படையில், ஆசியாவானது 51% என்ற அளவில் செல்வந்தர்களைக் கொண்டு உள்ளது.
- இந்த அறிக்கையின்படி, இந்த உலகமானது 2020 ஆம் ஆண்டில் ஒரு வாரத்தில் 8 செல்வந்தர்களையும் ஒரு ஆண்டில் 421 செல்வந்தர்களையும் சேர்த்துள்ளது, இதன்

மூலம் செல்வந்தர்களின் மொத்த எண்ணிக்கை 3288 ஆக உள்ளது.

❖ ஹீரூன் உலக செல்வந்தர்கள் பட்டியல் 2021 ஆனது 2402 நிறுவனங்கள் மற்றும் 68 நாடுகளைச் சேர்ந்த 3208 செல்வந்தர்களைத் தரவரிசைப் படுத்தியுள்ளது.

**INDIA A-LISTERS: Hurun India Rich List 2021**

| India Rank (Global Rank) | | Net worth ($bn) | Company |
|---|---|---|---|
| 1(8) | Mukesh Ambani | 83 | Reliance Industries |
| 2(48) | Gautam Adani & family | 32 | Adani |
| 3(58) | Shiv Nadar & family | 27 | HCL |
| 4(104) | Lakshmi N Mittal | 19 | ArcelorMittal |
| 5(113) | Cyrus Poonawalla | 18.5 | Serum |
| 6(117) | Hinduja Brothers | 18 | Hinduja |
| 7(154) | Uday Kotak | 15 | Kotak Mahindra Bank |
| 8(160) | Radhakishan Damani & family | 14.5 | Avenue Supermarts |
| 9(185) | Jay Chaudhry | 13 | Zscaler |
| 10(194) | Dilip Shanghvi & family | 12.5 | Sun Pharmaceutical Industries |

*Source: 10th Edition of Hurun Global Rich List 2021 Report*

# சுற்றுச்சூழல் செய்திகள்

## புதர்த் தவளைகளின் 5 புதிய இனங்கள்

❖ புதர்த் தவளைகளின் 5 புதிய இனங்கள் இந்தியா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் மேற்குத் தொடர்ச்சி மலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

❖ மேற்குத் தொடர்ச்சி மலையானது உலகளவில் பல்லுயிர்ப் பெருக்க முக்கியத் தளங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

❖ இந்தத் தவளைகள் பண்டைய உலக மரத் தவளைக் குடும்பமான ரக்சோபோரிடே (Rhacophoridae) என்ற குடும்பத்தைச் சேர்ந்தவையாகும்.

❖ இவை தில்லி பல்கலைக்கழகம், கேரள வன ஆராய்ச்சி மையம் மற்றும் மின்னசொட்டா பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

❖ இந்த ஆராய்ச்சியானது ஏறத்தாழ கடந்த 10 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வரும் மேற்குத் தொடர்ச்சி மலையின் (ராஆர்ச்செஸ்டிஸ்) புதர்த் தவளை என்பது குறித்த மிக விரிவான ஆய்வின் ஒரு பகுதியாகும்.

❖ இந்தத் தகவல்கள் பியர்ஜெ என்பதில் வெளியிடப்பட்டுள்ளன.

❖ இந்தப் புதிய 5 இனங்கள் பின்வருமாறு

- ராவ்ஆர்ச்செஸ்டிஸ் டுருட்டாகு
- ராவ்ஆர்ச்செஸ்டிஸ் காக்காயாமென்சிஸ்
- ராவ்ஆர்ச்செஸ்டிஸ் கெய்ராசபினே
- ராவ்ஆர்ச்செஸ்டிஸ் சஞ்சாபாய்
- ராவ்ஆர்ச்செஸ்டிஸ் வெள்ளிக்கண்ணன்

❖ இந்தப் புதிய 5 இனங்களும் கேரளா மாநிலம் தெற்கு மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப் படுகின்றன.

### இமாலய செரோ (மலை ஆடு) – அசாம்

- இமயமலையைச் சேர்ந்த பாலூட்டியான "இமாலய செரோ" ஆனது (மலை ஆடு) முதன்முறையாக அசாமில் காணப்பட்டுள்ளது.
- இமாலய செரோ ஆனது ஆடு, கழுதை, பசு மற்றும் பன்றி ஆகியவற்றின் கலப்பு இனத்தை ஒத்திருக்கின்றது.
- இமயமலை மலை ஆடு ஆனது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனங்களின் சிவப்புப் பட்டியலில் "பாதிக்கப் படக்கூடிய இனமாக" பட்டியலிடப்பட்டுள்ளது.
- இது வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம், 1972 என்ற சட்டத்தின் அட்டவணை I என்பதில் பட்டியலிடப் பட்டுள்ளது.



## மாநிலச் செய்திகள்

### அனந்தபூர், நெல்லூர் – பிரதான் மந்திரி கிசான் விருது

- மத்திய வேளாண் துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் அவர்கள் புகழ்பெற்ற பிரதம மந்திரியின் கிசான் தேசிய விருதை நெல்லூர் மாவட்ட ஆட்சியரான K.V.N. சக்ராதர் பாபு அவர்களுக்கு வழங்கி உள்ளனார்.
- இந்த மாவட்டமானது பிரதான் மந்திரி கிசான் தளத்தின் கீழ் பெறப்பட்ட குறைகளைத் தீர்த்து வைத்ததில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இந்த விருதானது புது தில்லியில் பிரதான் மந்திரி கிசான் யோஜனாவின் 2வது நினைவு தினத்தின் போது வழங்கப் பட்டது.
- மேலும் அனந்தப்பூர் மாவட்டமானது பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதியின் கீழ் பயனாளிகளின் 99.6% நேரடி சரிபார்ப்பை மேற்கொண்டதற்காக ஒரு விருதைப் பெற்று உள்ளது.

### மையப்படுத்தப்பட்ட குளிர்சாதன இரயில்வே முனையம்

- இந்தியாவின் முதலாவது மையப்படுத்தப்பட்ட குளிர்சாதன இரயில்வே முனையமானது பெங்களூருவில் கட்டமைக்கப்பட்டுள்ளது.
- இது பாரத ரத்னா விருது பெற்ற எம்.விஸ்வேஸ்வரய்யா அவர்களின் நினைவாகப் பெயரிடப் பட்டுள்ளது.

- இது பையப்பன்னஹல்லி என்ற பகுதியில் அமைந்துள்ள பெங்களூருவின் மூன்றாவது இரயில்வே முனையமாகும்.

## இந்தியாவின் முதலாவது ஒருங்கிணைந்த இயந்திரப் பொருள் பூங்கா

- இந்தியாவின் முதலாவது ஒருங்கிணைந்த இயந்திரப் பொருள் பூங்காவானது தும்கூரு இயந்திரப் பொருள் பூங்கா என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது கர்நாடகாவில் கட்டமைக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பூங்காவானது மாநில அரசு மற்றும் இந்திய அரசின் கனரகத் தொழிற்துறை ஆகியவற்றினால் கூட்டாக இணைந்து இந்திய மூலதன சரக்குத் துறையில் போட்டித் தன்மையின் மேம்பாடு என்ற திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- இந்திய இயந்திரப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பானது இதற்குத் தொழில்நுட்ப உதவியை அளிக்கின்றது.
- இந்தப் பூங்காவானது பெங்களூருவில் இருந்து ஏறத்தாழ 90 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள வசந்த நரசபுரத்தில் அமைந்துள்ளது.

## தனியார் துறையில் உள்ளூர் மக்களுக்குப் பணி ஒதுக்கீடு – ஹரியானா

- ஹரியானா மாநில ஆளுநரான சத்யதேவ் நரைன் ஆர்யா அவர்கள் அம்மாநிலத்தில் வேலை தேடுபவர்களுக்காக தனியார் துறையில் 75% இடஒதுக்கீட்டை வழங்க வழி வகை செய்யும் ஒரு மசோதாவிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்.
- ஹரியானா மாநில உள்ளூர் மக்களின் வேலை குறித்த மசோதா – 2020 ஆனது ஒரு மாதத்தில் 50000 ரூபாயிற்கும் குறைவான ஊதியத்துடன் தனியார் துறை பணியில் உள்ளூர் மக்களுக்கான இடஒதுக்கீட்டை அளிக்கின்றது.
- ஒரு குறிப்பிட்ட நிறுவனம் அமைந்துள்ள மாவட்டத்திலிருந்து 10% பணியாளர்களை மட்டுமே அந்நிறுவனம் பணியமர்த்த வேண்டும், மீதமுள்ள பணியிடங்கள் அம்மாநிலத்திலுள்ள இதர மாவட்டங்களைச் சேர்ந்த பணியாளர்களைக் கொண்டு நிரப்பப் பட வேண்டும்.
- இந்த மசோதாவின்படி, இந்த ஒதுக்கீடானது தொடக்கத்தில் 10 ஆண்டுகளுக்குப் பொருந்தும்.
- இந்த மசோதாவானது அம்மாநிலத்தில் உள்ள தனியார் நிறுவனங்கள், சமுதாயங்கள், அறக்கட்டளைகள் மற்றும் பங்காளர் நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- இது தகுதியான நபர்கள் கிடைக்கவில்லை எனில், தகுதியுள்ள உள்ளூர் பணியாளர்களுக்குப் பயிற்சியினை அளிக்கின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 07**

# TNPSC துளிகள்

- மாதவரம் மெட்ரோவானது சென்னையின் மிகப்பெரிய மெட்ரோ இரயில் பராமரிப்பு நிலையத்தைப் பெற உள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## எம்ஜிஆர் பாரம்பரிய நெல் பாதுகாப்பாளர் விருது 2021

- பாரத் ரத்னா டாக்டர் எம்ஜிஆர் பாரம்பரிய நெல் வகைப் பாதுகாப்பாளர் விருதானது பாரம்பரிய நெல் வகையைப் பயிரிடும் விவசாயிகளை ஆதரிப்பதற்காகவும் பாரம்பரிய வகைகளைப் பாதுகாப்பதற்காகவும் வேண்டி வழங்கப்பட உள்ளது.
- முதல் பரிசானது நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த N. சக்திபிரகாஷ் என்பவருக்கும் இரண்டாவது பரிசானது சேலத்தைச் சேர்ந்த S. வேல்முருகன் என்பவருக்கும் மூன்றாவது பரிசானது சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த ப. சிவராமன் என்பவருக்கும் வழங்கப் பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## மிஸ் இந்தியா – 2020 விருது

- தெலுங்கானாவைச் சேர்ந்த 23 வயதான மானசா வாரணாசி என்பவருக்கு 2020 ஆம் ஆண்டின் மிஸ் இந்தியா என்ற வெற்றியாளர் பட்டம் கொடுக்கப்பட்டுள்ளது.
- இவர் 2021 ஆம் ஆண்டில் டிசம்பரில் நடைபெற இருக்கும் 70வது உலக அழகிகள் அணிவகுப்புப் போட்டியில் இந்தியாவின் சார்பாக கலந்து கொள்ள உள்ளார்.
- 2019 ஆம் ஆண்டின் மிஸ் இந்தியா பட்டம் வென்ற சுமன் ரத்தன் சிங் ராவ் என்பவர் இந்த ஆண்டுப் போட்டியில் வெற்றி பெற்றவரான மானசா வாரணாசிக்கு பட்டம் சூட்டினார்.
- இந்த நிகழ்வில் மணிக்கா ஷியோகந்த் என்பவர் 2020 ஆம் ஆண்டின் மிஸ் கிராண்ட் இந்தியாவாக உருவெடுத்திருக்கின்றார், அதே போல மான்யா சிங் என்பவர் மிஸ் இந்தியா 2020 போட்டியில் 2வது இடத்தைப் பிடித்துள்ளார்.

## 2020 ஆம் ஆண்டின் சாம்பியன் பிரசுரிப்பாளர்

- இந்து குழுமமானது WAN-IFRA என்ற அமைப்பின் தெற்கு ஆசிய டிஜிட்டல் ஊடக விருதுகளில் 2 தங்கங்கள் மற்றும் 2 வெள்ளிகளைப் பெற்றுள்ளது.
- இது இந்தக் குழுமத்திற்கு "2020 ஆம் ஆண்டின் சாம்பியன் பிரசுரிப்பாளர்" என்ற பெயர் பெறுவதற்கு வழிவகை செய்துள்ளது.
- இந்த விருதுகள் டிஜிட்டல் ஊடகத்தில், தகவல் வெளியீட்டாளர்களால் அடையப்பட்ட சிறப்பான பணியை அங்கீகரிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- உலக செய்தி வெளியீட்டாளர்கள் கூட்டமைப்பு (WAN-IFRA) என்பது உலகப் பத்திரிக்கையின் ஓர் உலகளாவிய அமைப்பாகும்.

- இது 120 நாடுகளில் 18,000 பிரசுரிப்பாளர்களின் அமைப்பைக் கொண்டுள்ளது.

## இடைக்கால இயக்குநர் – மத்தியப் புலனாய்வு அமைப்பு (CBI)

- மத்திய அரசானது CBI அமைப்பின் இடைக்கால இயக்குநராக பிரவீன் சின்ஹா என்பவரை நியமித்துள்ளது.
- இவர் 1988 ஆம் ஆண்டு குஜராத் பிரிவைச் சேர்ந்த இந்தியக் காவல் பணி அதிகாரி ஆவார்.
- 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 03 அன்று இப்பதவியிலிருந்து ஓய்வு பெற்ற ஆர்கே சுக்லா என்பவரின் இடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## வாழ்வாதார எளிமையாக்கல் குறியீடு – 2020

- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சரான ஹர்தீப் சிங் பூரி அவர்கள் வாழ்வாதார எளிமையாக்கல் குறியீடு – 2020 என்பதின் இறுதித் தரவரிசையை அறிவித்துள்ளார்.
- வாழ்வாதார எளிமையாக்கல் குறியீடு 2020 என்பதின் கீழ் தரவரிசையானது 1 மில்லியனுக்கும் மேல் மக்கள் தொகையைக் கொண்டுள்ள நகரங்கள் மற்றும் 1 மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்டுள்ள நகரங்கள் ஆகியவற்றிற்காக அறிவிக்கப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இந்த கள ஆய்வுச் சோதனையில் 11 நகரங்கள் பங்கேற்றன.
- மில்லியன்+ பிரிவில் சிறப்பான செயல்பாடு கொண்ட நகரமாக பெங்களூரு நகரம் உருவெடுத்துள்ளது.
- மில்லியனுக்கும் குறைவான மக்கள் உள்ள பிரிவில், சிம்லா முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- வாழ்வாதார எளிமையாக்கல் குறியீடு (EoLI) என்பது வாழ்க்கைத் தரம் மற்றும் நகர்ப்புற மேம்பாட்டிற்கான பல்வேறு முன்னெடுப்புகளின் தாக்கங்களை மதிப்பிடுவதற்கான ஒரு ஆய்வுக் கூறாகும்.
- இது வாழ்க்கைத்தரம், பொருளாதாரத் திறன் (நகர்), அதன் நிலைப்புத் தன்மை மற்றும் தாங்குதன்மை அடிப்படையில் இந்தியா முழுவதும் பங்கு பெற்ற நகரங்களின் ஒரு விரிவான புரிதலை அளிக்கின்றது.

### *நகராட்சி செயல்பாட்டுக் குறியீடு (MPI)*

- EoLI குறியீட்டைப் போன்று, MPI 2020 என்பதின் கீழ் ஆய்வுச் செயல்திட்டமானது நகராட்சிகளில் உள்ள மக்கள்தொகையின் அடிப்படையில், அவற்றை வகைப்படுத்தி உள்ளது.
- அவை மில்லியன்+ (மில்லியன் மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள நகராட்சிகள்) மற்றும் மில்லியனுக்கும் குறைவாக உள்ள நகராட்சிகள் என்று வகைப்படுத்தப் பட்டு உள்ளன.
- MPI குறியீட்டின் "மில்லியனுக்கும் குறைவாக உள்ள மக்கள் தொகைப் பிரிவில்" புதுதில்லி நகராட்சி ஆணையம் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- மில்லியன் + மக்கள் தொகைப் பிரிவில் MPI குறியீட்டில் இந்தூர் முதல் இடத்தைப் பிடித்து உள்ளது.

| Rank | Ease of Living Index | | | | |
|---|---|---|---|---|---|
| | Population Million+ | | | Population Less than Million | |
| | City | Score | | City | Score |
| 1 | Bengaluru | 66.70 | | Shimla | 60.90 |
| 2 | Pune | 66.27 | | Bhubaneshwar | 59.85 |
| 3 | Ahmedabad | 64.87 | | Silvassa | 58.43 |
| 4 | Chennai | 62.61 | | Kakinada | 56.84 |
| 5 | Surat | 61.73 | | Salem | 56.40 |
| 6 | Navi Mumbai | 61.60 | | Vellore | 56.38 |
| 7 | Coimbatore | 59.72 | | Gandhinagar | 56.25 |
| 8 | Vadodara | 59.24 | | Gurugram | 56.00 |
| 9 | Indore | 58.58 | | Davangere | 55.25 |
| 10 | Greater Mumbai | 58.23 | | Tiruchirapalli | 55.24 |

| Rank | Municipal Performance Index | | | | |
|---|---|---|---|---|---|
| | Population Million+ | | | Population Less than Million | |
| | Municipality | Score | | Municipality | Score |
| 1 | Indore | 66.08 | | New Delhi MC | 52.92 |
| 2 | Surat | 60.82 | | Tirupati | 51.69 |
| 3 | Bhopal | 59.04 | | Gandhinagar | 51.59 |
| 4 | Pimpri Chinchwad | 59.00 | | Karnal | 51.39 |
| 5 | Pune | 58.79 | | Salem | 49.04 |
| 6 | Ahmedabad | 57.60 | | Tiruppur | 48.92 |
| 7 | Raipur | 54.98 | | Bilaspur | 47.99 |
| 8 | Greater Mumbai | 54.36 | | Udaipur | 47.77 |
| 9 | Visakhapatnam | 52.77 | | Jhansi | 47.04 |
| 10 | Vadodara | 52.68 | | Tirunelveli | 47.02 |

### MTRC முறை

- இந்திய இரயில்வேயின் மேற்கு இரயில்வே மண்டலமானது (மும்பை நகர்ப்புற இரயில்) நடமாடும் இரயில் ரேடியோ தகவல் (MTRC) முறையை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இது திறனுள்ள தகவல் தொடர்பின் மூலம் இரயில் விபத்துகளைத் தடுப்பதில் முக்கியப் பங்காற்ற இருக்கின்றது.
- இது கட்டுப்பாட்டு மையம் மற்றும் நிலைய அதிகாரியுடன் இரயில் ஓட்டுநரின் உடனடி மற்றும் தொடர் இடையீட்டிற்கு வழிவகை செய்கின்றது.

## சர்வதேசச் செய்திகள்

### மலேரியா ஒழிப்புச் சான்றிதழ் – எல் சல்வேடார்

- உலக சுகாதார அமைப்பினால் மலேரியா ஒழிப்புச் சான்றிதழ் வழங்கப்பட்ட முதலாவது மத்திய அமெரிக்க நாடு எல் சல்வேடார் ஆகும்.

- குறைந்தது கடந்த (முந்தைய) 3 ஆண்டுகளாக தேசிய அளவில் இந்த நோய்ப் பரவல் சங்கிலியைத் தடுத்திருந்தால் (முற்றிலும் ஒழிந்திருந்தால்) அந்நாட்டிற்கு மலேரியா ஒழிப்புச் சான்றிதழானது WHO அமைப்பினால் வழங்கப்படும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## முதலாவது பிளாஸ்டிபஸ் (வாத்தலகி) சரணாலயம்

- ஆஸ்திரேலியாவானது உலகின் முதலாவது வாத்தலகி (platypus) சரணாலயத்தைத் திறக்க உள்ளது.
- இது மறைந்து வரும் உள்ளூர் இனங்களைக் காப்பதற்கு உதவுவதற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.
- வாத்து போன்ற தோற்றம் கொண்ட வாத்தலகி ஆனது ஆஸ்திரேலியாவில் மட்டுமே இருக்கும் ஒரு தனித்துவ உயிரினமாகும். இது காலநிலை மாற்றப் பிரச்சினையுடன் தொடர்புடைய காட்டுத் தீ மற்றும் வறட்சி ஆகியவற்றின் காரணமாக அழிவைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது.
- உலகம் முழுவதும் இது போன்ற ஒரு சரணாலயம் அமைக்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.
- இது ஒரு நேரத்தில் 65 வாத்தலகிகளுக்கு இடமளிக்கும் திறன் கொண்டது.
- இந்த வசதியானது 2022 ஆம் ஆண்டில் தரோங்காவின் மேற்குச் சமவெளி விலங்கியல் பூங்காவில் கட்டப்பட உள்ளது.

# முக்கிய தினங்கள்

## தேசியப் பாதுகாப்பு (Safety) தினம் – மார்ச் 04

- தேசியப் பாதுகாப்பு தினமானது முதன்முறையாக 1972 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- இது தேசியப் பாதுகாப்பு ஆணையம் தொடங்கப்பட்டதைக் கொண்டாடுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் அனுசரிக்கப்படுகின்றது.
- இது மக்கள் தங்கள் தினசரி வாழ்வில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் சுகாதார நடவடிக்கைகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, "சதக் சுரக்சா" (சாலை பாதுகாப்பு) என்பதாகும்.

### *தேசியப் பாதுகாப்பு ஆணையம்*

- இது 1965 ஆம் ஆண்டு மார்ச் 14 அன்று இந்திய அரசின் மத்தியத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகத்தினால் ஏற்படுத்தப்பட்டது.
- இது பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் குறித்து தன்னார்வ இயக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் உருவாக்குவதற்காகவும் அமைக்கப்பட்டுள்ளது.
- இது ஒரு தனிச்சுதந்திர அமைப்பாகும்.




## தேசியப் பாதுகாப்பு (Security) தினம் – மார்ச் 04

- இந்தியாவில், இந்தியப் பாதுகாப்புப் படைகளைக் கௌரவிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 04 ஆம் தேதியானது தேசியப் பாதுகாப்பு தினமாக (ராஷ்டிரிய சுரக்சா திவாஸ்) அனுசரிக்கப்படுகின்றது.
- இந்தத் தினமானது பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள காவல் துறையினர், துணை இராணுவப் படையினர், கமாண்டோக்கள், பாதுகாப்பு அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் இதர நபர்கள் உள்ளிட்ட அனைத்து பாதுகாப்புப் படைகளுக்கும் மரியாதை செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மார்ச் 04 என்ற தினமானது 1966 ஆம் ஆண்டில் இந்தியாவில் தேசியப் பாதுகாப்பு ஆணையம் (NSC - National Security Council) ஏற்படுத்தப்பட்ட தினத்தைக் குறிக்கின்றது.
- முதலாவது தேசியப் பாதுகாப்பு தினமானது 1972 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.

### *தேசியப் பாதுகாப்பு ஆணையம்*

- தேசியப் பாதுகாப்பு ஆணையமானது இந்தியாவின் பொருளாதார, அறிவியல், மற்றும் உத்திசார் விவகாரங்களைக் கண்காணிக்கின்றது.
- இது 1998 ஆம் ஆண்டில் இந்தியாவில் அப்போதைய பிரதமரான அடல்பிகாரி வாஜ்பாய் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது.
- NSC ஆனது இந்திய அரசின் கீழ் உள்ள மத்தியத் தொழிலாளர் துறை அமைச்சகத்தினால் அமைக்கப்பட்டுள்ளது.

## சாபஹர் தினம்

- இந்தியாவானது கடல்சார் இந்தியா மாநாடு 2021 என்ற மாநாட்டின் ஒரு பகுதியாக மார்ச் 04 அன்று "சாபஹர் தினத்தை" அனுசரிக்க உள்ளது.
- இது மார்ச் 02 ஆம் தேதி முதல் மார்ச் 04 ஆம் தேதி வரை நடத்தப்படுகின்றது.
- இந்த நிகழ்ச்சியில் ஆப்கானிஸ்தான், அர்மெனியா, ஈரான், கஜகஸ்தான், ரஷ்யா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

### *சபாஹர் துறைமுகம்*

- இந்தியா மற்றும் ஈரான் ஆகியவை தென்கிழக்கு ஈரானில் உள்ள ஓமன் வளைகுடாவில் அமைந்துள்ள சாபஹர் துறைமுகத்தை மேம்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டன.
- இந்தியப் பெருங்கடலிற்கு நேரடி அணுகலை வழங்கும் ஒரே துறைமுகம் சாபஹர் துறைமுகம் ஆகும்.

- இந்தத் துறைமுகமானது இந்தியா, ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியவற்றிற்கிடையே வர்த்தகத்தை ஊக்குவிப்பதை நோக்கம் கொண்ட ஒரு முக்கியமான இணைப்புத் திட்டமாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 08**

# தமிழ்நாடு செய்திகள்

## மூன்றாம் உலகத் திருக்குறள் மாநாடு

- மூன்றாம் உலகத் திருக்குறள் மாநாடானது தஞ்சாவூரில் நடத்தப் பட்டது.
- இது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், பாரத் அறிவியல் கல்லூரி, ஆஸ்திரேலியா மெல்போர்ன் தமிழ்ச் சங்கம், இளங்காடு நற்றமிழ் சங்கம் மற்றும் தஞ்சாவூர் தமிழ்த் தாய் அறக்கட்டளை ஆகியவற்றின் சார்பாக நடத்தப் படுகின்றது.

# தேசியச் செய்திகள்

## தேசியக் குழு

- இந்தியா சுதந்திரம் அடைந்ததின் 75 ஆண்டுகளை நினைவு கூரும் வகையில் தேசிய அளவில் தேசியக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
- இது 259 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு உயர்மட்ட தேசியக் குழுவாகும்.
- இந்தக் குழுவில் மத்திய அமைச்சர்கள், முதலமைச்சர்கள், ஆளுநர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் உள்ளனர்.
- இந்தியாவின் 75வது சுதந்திர தினமானது அடுத்த ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதி கொண்டாடப்பட இருக்கின்றது.
- இந்த 75வது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் ஆகஸ்ட் 15 ஆம் தேதிக்கு முன்பாக, அதாவது 75 வாரங்களுக்கு முன்னதாக இந்த மாதம் 12 ஆம் தேதியன்று தொடங்கத் திட்டமிடப் பட்டுள்ளது.
- மார்ச் 12 ஆம் தேதியானது மகாத்மா காந்தி தலைமையிலான வரலாற்றுப் புகழ்பெற்ற உப்பு சத்தியாக்கிரகத்தின் 91வது ஆண்டு விழாவைக் குறிக்கின்றது.

## சிவப்பு அரிசி

- இந்தியாவின் அரிசி ஏற்றுமதித் திறனுக்கு ஊக்கமளிக்கும் விதமாக, ‘சிவப்பு அரிசியின்’ முதலாவது சரக்குப் பெட்டகமானது அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப் பட்டது.
- இந்த அரிசி வகையானது ‘பாவோ தன்’ - அசாம் உணவின் ஒருங்கிணைந்த பகுதி என்று அழைக்கப் படுகின்றது.
- அசாமின் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கில் ‘சிவப்பு அரிசியானது’ சாகுபடி செய்யப் படுகின்றது.
- இது எந்தவொரு இரசாயன உரத்தையும் பயன்படுத்தாமல் சாகுபடி செய்யப் படுகின்றது.
- இதில் இரும்புச்சத்து நிறைந்துள்ளது.
- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமானது (APEDA - Agricultural and Processed Food Products Export Development Authority) அரிசி ஏற்றுமதி ஊக்குவிப்பு மன்றத்தின் (REPF - Rice Export Promotion Forum) மூலம் அரிசி ஏற்றுமதியை ஊக்குவிக்கின்றது.
- REPFயானது அரிசித் தொழிற்துறை, ஏற்றுமதியாளர்கள், APEDA மற்றும் வர்த்தக

அமைச்சகத்தின் அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கியுள்ளது.

- இது அரிசி உற்பத்தி செய்யும் மாநிலங்களான மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம், அசாம், சத்தீஸ்கர் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் இருந்து விவசாய இயக்குநர்களைக் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டு

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது 2023 ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டாக ஒருமனதாக அறிவித்துள்ளது.
- இது வங்க தேசம், கென்யா, நேபாளம், நைஜீரியா, ரஷ்யா மற்றும் செனகல் ஆகிய நாடுகளுடன் சேர்த்து இந்தியாவினால் முன்மொழியப்பட்டு, 70க்கும் மேற்பட்ட நாடுகளினால் ஆதரிக்கப்பட்டது.

## "உலகில் சுதந்திரம் 2021: ஆபத்தின் கீழ் ஜனநாயகம்" குறித்த அறிக்கை

- இந்த அறிக்கையானது அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு கொள்கை வகுக்கும் குழுவான "ஃப்ரீடம் ஹவுஸ்" என்ற அமைப்பால் வெளியிடப்பட்டுள்ளது.
- இது இந்தியாவை 'பகுதியளவு சுதந்திரம் உள்ள நாடு' என்று வகைப்படுத்தியுள்ளது.

*முக்கிய அம்சங்கள்:*

- இதில் இந்தியாவின் மதிப்பெண் 67 ஆகும்.
- கடந்த ஆண்டு, இதன் மதிப்பெண் 71/100 (சுதந்திர வகை) ஆக இருந்தது.
- இந்த அறிக்கையின் படி, இந்திய அரசாங்கமும் அதன் மாநில அளவிலான அரசாங்கங்களும் இந்த ஆண்டில் தொடர்ந்து விமர்சகர்களைத் தாக்கி வந்தன.




## உணவு வீணாக்கக் கழிவு குறியீட்டு அறிக்கை – 2021


- இது உலகளாவிய அளவில் உணவு வீணாக்கக் கழிவுகளின் ஒரு புதிய மதிப்பீட்டை உருவாக்கும் மிக விரிவான உணவு வீணாக்கக் கழிவு மீதான ஒரு தரவுச் சேகரிப்பு ஆகும்.
- இந்தக் குறியீட்டு அறிக்கையானது அதன் பங்காளர் அமைப்பான WRAP என்ற

அமைப்புடன் இணைந்து ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தினால் வெளியிடப் பட்டது.

- 2019 ஆம் ஆண்டில் உலகளவில் 931 மில்லியன் டன் உணவு வீணடிக்கப்பட்டதாக ஐக்கிய நாடுகள் அறிக்கை காட்டுகின்றது.
- இந்தியாவில் வீடுகள் தோறும் உருவாகும் உணவு வீணடித்தல் அளவு ஆனது ஆண்டுக்கு 50 கிலோ ஆக உள்ளது. இது ஆண்டுக்கு 68.7 மில்லியன் டன்களுக்குச் சமமாகும்.

*மற்ற நாடுகளில்*

- அமெரிக்காவில் வீடுகள் தோறும் உருவாகும் உணவு வீணடித்தல் அளவு ஆனது ஆண்டுக்கு 59 கிலோ ஆகும். இது ஆண்டுக்கு 19,359,951 டன்களுக்குச் சமமாகும்.
- சீனாவில் உற்பத்தியாகும் உணவு வீணடித்தல் அளவானது ஆண்டுக்கு 64 கிலோ ஆகும். இது ஒரு வருடத்தில் 91,646,213 டன்கள் ஆகும்.
- ஆஸ்திரியா ஆனது ஒரு ஆண்டுக்கு 39 கிலோ / தனிநபர் என்ற அளவில் மிகக் குறைந்த அளவிலான உணவு வீணடித்தல் கழிவுகளை உற்பத்தி செய்கின்றது.
- நைஜீரியா ஆண்டுக்கு 189 கிலோ/தனிநபர் அளவிலான உணவு வீணடித்தல் கழிவுகளை உற்பத்தி செய்கின்றது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## முதலாவது ஆர்க்டிக் கண்காணிப்பு செயற்கைக்கோள்

- ஆர்க்டிக்கின் காலநிலை மற்றும் சுற்றுச்சூழலை கண்காணிக்க ரஷ்யா தனது முதலாவது செயற்கைக் கோளை வெற்றிகரமாக ஏவியுள்ளது.
- கஜகஸ்தானில் உள்ள பைகானூர் காஸ்மோட்ரோமில் இருந்து ஏவுகலனில் உள்ள "ஆர்க்டிகா-எம்" என்ற செயற்கைக் கோளுடன் சோயுஸ் - 2.1 பி என்ற ஒரு சரக்கு ராக்கெட்டானது விண்வெளிக்குப் புறப்பட்டது.
- ஆர்க்டிகா-எம் செயற்கைக் கோளானது ரஷ்யாவின் வடக்குப் பிரதேசத்தையும் ஆர்க்டிக் பெருங்கடலில் உள்ள பகுதிகளையும் தொடர்ந்து 24 மணி நேரமும் கண்காணிக்கும்.
- இந்தச் செயற்கைக்கோள் ஆனது பூமியின் வட துருவப் பகுதி மற்றும் அதற்கு

அருகிலுள்ள பகுதிகளின் மேலோட்டப் படங்களை குறைந்தது ஒவ்வொரு 15-30 நிமிடங்களுக்கும் அனுப்பும் திறன் கொண்டது.

- இந்தச் செயற்கைக் கோள் ஆனது செயல்பாட்டு வானிலை மற்றும் நீர்நிலைச் சிக்கல்களைத் தீர்க்க வேண்டி அது குறித்த தகவல்களை சேகரிக்கவும் ஆர்க்டிக் பிராந்தியத்தில் நிலவும் காலநிலை மற்றும் சுற்றுச்சூழலை கண்காணிக்கவும் உதவ இருக்கின்றது.

## திட எரிபொருள் குழாய் ராம்ஜெட் தொழில்நுட்பம் (SFDR)

- திட எரிபொருள் குழாய் ராம்ஜெட் தொழில்நுட்பத்தை (Solid Fuel Ducted Ramjet technology - SFDR) அடிப்படையாகக் கொண்ட விமானச் சோதனையைப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (DRDO) வெற்றிகரமாக சோதித்துள்ளது.
- இது ஒடிசாவின் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் சோதிக்கப் படுகின்றது.
- SFDR தொழில்நுட்பமானது DRDO அமைப்பிற்கு தொழில்நுட்ப நன்மையுடன் சேர்த்து நீண்ட தூர வரம்பு கொண்ட வானிலிருந்து வானில் உள்ள ஏவுகணைகளை உருவாக்க உதவும்.

### *ராம்ஜெட்*

- ராம்ஜெட் என்பது காற்றினால் இயங்கும் ஜெட் இயந்திரத்தின் ஒரு வடிவமாகும். இது சுழலும் ஒரு அமுக்கி இல்லாமல் எரிப்புக்காக உள்வரும் காற்றை அமுக்க வாகனத்தின் முன்னோக்கு இயக்கத்தைப் பயன்படுத்துகின்றது.
- ராம்ஜெட்டுகள் மீஒலி வேக வேகத்தில் மிகவும் திறனுள்ள வகையில் செயல்படுகின்றன. ஆனால் அவை மீ மிகை ஒலி வேகத்தில் திறனுள்ள வகையில் இல்லை.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## முதல் ஓங்கில் (டால்பின்) ஆராய்ச்சி மையம்

- இந்தியாவின் மற்றும் ஆசியாவின் முதலாவது தேசிய ஓங்கில் ஆராய்ச்சி மையமானது பாட்னா பல்கலைக்கழக வளாகத்தில் கங்கைக் கரையில் அமைய இருக்கின்றது.
- ஓங்கில் என்பது வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம், 1972 என்ற சட்டத்தின் அட்டவணை I என்பதின் கீழ் மிகவும் அருகி வரும் ஒரு உயிரினமாக பட்டியலிடப் பட்டுள்ளது.
- இது 2009 ஆம் ஆண்டில் தேசிய நீர்வாழ் விலங்கு என்று அறிவிக்கப்பட்டது.
- உலகில் உள்ள நான்கு நன்னீர் டால்பின்களில் கங்கை டால்பின் இனமும் ஒன்றாகும்.
- மற்ற மூன்று இனங்கள் பின்வருவனவற்றில் காணப்படுகின்றன
    - யாங்சே நதி,
    - சிந்து நதி மற்றும்
    - அமேசான் நதி.
- கங்கையில் டால்பின்கள் வசிப்பது ஆரோக்கியமான சுற்றுச்சூழல் அமைப்பின் அடையாளத்தைக் காட்டுகின்றது, ஏனெனில் டால்பின்கள் குறைந்தது 5 அடி முதல் 8 அடி வரையுள்ள ஆழமான நீரில் வாழ்கின்றன.

# மாநிலச் செய்திகள்

## இரவு நேரச் சுற்றுலா

- ❖ மத்தியப் பிரதேச மாநிலத்தின் மூன்று தேசியப் பூங்காக்களில், அம்மாநில அரசு இரவு நேரச் சுற்றுலாப் பயணங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்த இரவு நேரச் சுற்றுலாப் பயணமானது அம்மாநிலத்தின் சுற்றுலாத் துறைக்கு ஊக்கமளிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- ❖ அந்த மூன்று தேசியப் பூங்காக்கள் பின்வருமாறு
    - பாந்தவ்கார் தேசியப் பூங்கா,
    - கன்ஹா தேசியப் பூங்கா மற்றும்
    - பெஞ்ச் தேசியப் பூங்கா.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 2020 ஆம் ஆண்டிற்கான 30வது பீஹாரி புராஸ்கர்

- ❖ 1991 ஆம் ஆண்டில் கே.கே. பிர்லா அறக்கட்டளையால் நிறுவப்பட்ட மூன்று இலக்கிய விருதுகளில் பீஹாரி புராஸ்கர் விருதும் ஒன்றாகும்.
- ❖ மோகன்கிருஷ்ணா போஹாரா என்பவரது விமர்சனப் படைப்பான 'தஸ்லிமா: சங்கர்ஷ் அவுர் சாகித்யா" என்ற படைப்பிற்காக 30வது பீஹாரி புராஸ்கர் விருதானது அவருக்கு வழங்கப்பட உள்ளது.
- ❖ இந்தப் புத்தகமானது 2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- ❖ இந்த விருதுக்குப் பிரபல கவிஞர் பீஹாரி என்பவரின் நினைவாகப் பெயரிடப்பட்டது.
- ❖ இந்தி அல்லது ராஜஸ்தானி மொழியில் ஒரு ராஜஸ்தானத்தைச் சேர்ந்த எழுத்தாளரால் கடந்த 10 ஆண்டுகளில் வெளியிடப் பட்ட ஒரு சிறந்த படைப்புக்காக ஒவ்வொரு ஆண்டும் இந்த விருதானது வழங்கப்படுகின்றது.

# விளையாட்டுச் செய்திகள்

## 6 சிக்ஸர்களை அடித்த மூன்றாவது மட்டைப்பந்து வீரர்

**SIX SIXES IN AN OVER**
**IN INTERNATIONAL CRICKET**

| BATSMAN | BOWLER | TOURNAMENT |
|---|---|---|
| **Herschelle Gibbs** (South Africa) | **Daan van Bunge** (Netherlands) | 2007 ODI World Cup |
| **Yuvraj Singh** (India) | **Stuart Broad** (England) | 2007 T20 World Cup |
| **Kieron Pollard** (West Indies) | **Akila Dananjaya** (Sri Lanka) | 2021 West Indies vs Sri Lanka bilateral T20 series (first match) |

- ❖ கீரன் பொல்லார்ட் அவர்கள் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் ஒரு ஓவரில் 6

சிக்ஸர்களை அடித்த மூன்றாவது மட்டைப்பந்து வீரராக உருவெடுத்துள்ளார்.

- ❖ ஆன்டிகுவாவில் நடத்தப்பட்ட டி - 20 போட்டியில் இலங்கையின் அகிலா தனஞ்சயாவின் ஓவரில் கீரன் பொல்லார்ட் அவர்கள் 6 சிக்சர்களை அடித்தார்.
- ❖ தென்னாப்பிரிக்காவின் முன்னாள் தொடக்க ஆட்டக்காரரான ஹெர்ஷல் கிப்ஸ் 2007 ஆம் ஆண்டு நெதர்லாந்துக்கு எதிரான உலகக் கோப்பைப் போட்டியில் இந்த சாதனையை நிகழ்த்தினார்.
- ❖ யுவராஜ் சிங்கிற்குப் பிறகு டி - 20 போட்டிகளில் சாதனை படைத்த 2வது மட்டைப்பந்து வீரர் பொல்லார்ட் மட்டுமே ஆவார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 09**

# TNPSC துளிகள்

- ஏகஸ் என்ற தனியார் நிறுவனமானது கர்நாடகாவில் உள்ள கோப்பலில் 400 ஏக்கர் பரப்பளவில் ஒரு பொம்மை உற்பத்தித் தொகுப்பை உருவாக்கி வருகின்றது.
    - உள்நாட்டுத் தொழில் துறையை உயர்த்துவதற்கான இந்தியாவின் முதலாவது பொம்மை உற்பத்தித் தொகுப்பு இதுவாகும்.

# தேசியச் செய்திகள்

## சுவச்தா சார்தி சமூகம்

- இந்திய அரசாங்கத்தின் முதன்மை அறிவியல் ஆலோசகர் அலுவலகம் தனது அலுவலகத்தின் “கழிவிலிருந்து வளம் (சொத்து)” என்ற திட்டத்தின் கீழ் “சுவச்தா சார்தி சமூகம்” என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- இது அறிவியல் ரீதி மற்றும் நீடித்த நிலை ஆகிய வகையில் கழிவு மேலாண்மையில் உள்ள மகத்தான சவாலைச் சமாளிப்பதில் ஈடுபட்டுள்ள மாணவர்கள், சமூகத் தொழிலாளர்கள் / சுயஉதவிக் குழுக்கள் மற்றும் நகராட்சி / சுகாதாரத் தொழிலாளர்கள் ஆகியோரை அங்கீகரிப்பதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தச் சமூகத்தின் கீழ் வழங்கப்படும் மூன்று வகையான விருதுகள் பின்வருமாறு
- வகை A: கழிவு மேலாண்மை சமூகப் பணிகளில் ஈடுபடும் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான பள்ளி மாணவர்களுக்கான விருது.
- வகை பி: கழிவு மேலாண்மை சமூகப் பணிகளில் ஈடுபட்டுள்ள கல்லூரி மாணவர்களுக்கான (இளங்கலை, முதுகலை, ஆராய்ச்சி மாணவர்கள்) விருது.
- வகை சி: சமூகத்தில் பணிபுரியும் குடிமக்கள் மற்றும் தங்கள் வேலைத் தேவைகள் / விளக்கங்களின் கீழ் குறிப்பிடப் பட்டுள்ள வரம்புகளுக்கு அப்பால் பணிபுரியும் சுய உதவிக் குழுக்கள், நகராட்சி அல்லது சுகாதாரத் தொழிலாளர்கள் ஆகியோருக்கான விருது.

### *கழிவிலிருந்து வளம்*

- கழிவிலிருந்து வளம் என்ற திட்டம் என்பது ஆற்றலை உருவாக்குவதற்கும் பொருட்களை மறுசுழற்சி செய்வதற்கும் வளங்களைப் பிரித்தெடுப்பதற்கு வேண்டி கழிவுகளைச் சுத்திகரிப்பதற்கும் தேவைப்படும் தொழில்நுட்பங்களை அடையாளம் கண்டு, அவற்றை மேம்படுத்த மற்றும் அவற்றைப் பயன்படுத்துவதற்கு உதவும் ஒரு திட்டம் ஆகும்.
- இது பிரதமரின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு ஆலோசனைக் குழுவின் (PM-STIAC - Prime Minister’s Science, Technology, and Innovation Advisory Council) ஒன்பது தேசியத் திட்டங்களில் ஒன்றாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## QS உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை

- QS உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையின் 11வது பதிப்பானது சமீபத்தில் வெளியிடப் பட்டுள்ளது.

- 2021 ஆம் ஆண்டிற்கான QS உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையானது 80 வெவ்வேறு இடங்களை உள்ளடக்கிய உலகெங்கிலும் உள்ள முதல் 1,000 பல்கலைக்கழகங்களைத் தரவரிசைப் படுத்துகின்றது.
- அமெரிக்காவில் உள்ள மாசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் தொடர்ந்து ஒன்பதாவது ஆண்டாக சிறந்த பல்கலைக் கழகமாக தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டிற்கான QS உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையில் அமெரிக்காவில் உள்ள ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய ராஜ்ஜியத்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் ஆகியவை முறையே உலகளவில் இரண்டாவது மற்றும் மூன்றாவது சிறந்த பல்கலைக்கழகமாகும்.

***இந்தியா குறித்து:***

- மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப கல்வி நிறுவனமானது அதில் சிறந்த இந்தியக் கல்வி நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- இது 172வது இடத்தில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.
- இந்தியாவில் உள்ள எந்தவொரு கல்வி நிறுவனமும் முதல் 100 இடங்களில் தரவரிசைப் படுத்தப் படவில்லை.
- இந்திய அறிவியல் நிறுவனம் (185), தில்லியில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் (193) ஆகியவை இந்தியாவைச் சேர்ந்த முதல் 200 இடங்களில் இடம் பெற்றுள்ள கல்வி நிறுவனங்களாகும்.
- பாடப்பிரிவைப் பொறுத்தவரை, பன்னிரண்டு இந்திய பல்கலைக்கழகங்களும் உயர்கல்வி நிறுவனங்களும் முதல் 100 இடங்களுக்குள் இடம் பிடித்துள்ளன. அதில் மூன்று இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் அந்தந்த பாடப்பிரிவில் முதல் 50 இடங்களுக்குள் இடம் பிடித்துள்ளன.
- மும்பை இந்தியத் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் (IIT), தில்லி IIT, மதராஸ் IIT, கரக்பூர் IIT, இந்திய அறிவியல் நிறுவனம் பெங்களூர், குவஹாத்தி IIT, பெங்களூர் இந்திய மேலாண்மை நிறுவனம் (IIM), அகமதாபாத் IIM, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், தில்லி பல்கலைக்கழகம் மற்றும் ஓ.பி. ஜிண்டால் பல்கலைக்கழகம் ஆகியவை இந்த 12 பல்கலைக் கழகங்களாகும்.
- இதில் பெட்ரோலிய பொறியியலுக்காக மதராஸ் IIT 30வது இடத்தையும் பம்பாய் IIT 41வது இடத்தையும் தாதுக்கள் மற்றும் சுரங்கப் பொறியியலுக்காக கரக்பூர் IIT 44வது இடத்தையும் மேம்பாட்டு ஆய்வுகளுக்காக தில்லி பல்கலைக்கழகம் 50வது இடத்தையும் பிடித்துள்ளன.

## கேட்புத்திறன் பற்றிய முதலாவது உலக அறிக்கை

- உலக கேட்புத்திறன் தினத்தன்று (மார்ச் 03) கேட்புத்திறன் குறித்த முதலாவது உலக அறிக்கையை உலக சுகாதார அமைப்பானது (WHO - World Health Organization) வெளியிட்டு உள்ளது.
- உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு நான்கு நபர்களில் ஒருவர் 2050 ஆம் ஆண்டிற்குள் லேசானது முதல் கடுமையானது வரை கேட்புத்திறன் இழப்பைச் சந்திப்பார் என்று உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.
- இது உலகம் முழுவதும் சுமார் 2.5 பில்லியன் மக்களைக் கொண்டுள்ளது.

***இந்த அறிக்கையின் முக்கிய அம்சங்கள்***

- இந்த அறிக்கையின் படி, குறைந்தது 700 மில்லியன் மக்கள் காது கேட்புத்திறன் குறைபாட்டால் பாதிக்கப்படுவார்கள், எனவே அவர்களுக்கு காது மற்றும் செவிப்புலன்

பராமரிப்புச் சாதனம் தேவைப்படும்.

- 12-35 வயதிற்குட்பட்ட பில்லியன் கணக்கிலான இளைஞர்களுக்கு பொழுதுபோக்கு அமைப்புகளினால் ஏற்படும் ஒலி மாசுபாடு காரணமாக கேட்புத்திறன் குறைபாடு ஏற்படும் என்று இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகின்றது.
- குழந்தைகளில் 60 சதவீத கேட்புத்திறன் குறைபாடானது தடுக்கக் கூடிய காரணங்களால் ஏற்படுகின்றது என்று WHO கூறுகின்றது.

## 78வது கோல்டன் குளோப் விருதுகள்

| Film Awards | |
|---|---|
| Award Category | Winner |
| Best Motion Picture — Drama | Nomadland |
| Best Director — Motion Picture | Chloé Zhao for Nomadland |
| Best Performance by an Actor in a Motion Picture — Drama | Chadwick Boseman for "Ma Rainey's Black Bottom" |
| Best Performance by an Actress in a Motion Picture — Drama | Andra Day for "The United States vs. Billie Holiday" |
| Best Motion Picture — Musical or Comedy | Borat Subsequent Moviefilm |
| Best Performance by an Actor in a Motion Picture — Musical or Comedy | Sacha Baron Cohen for "Borat Subsequent Moviefilm" |
| Best Performance by an Actress in a Motion | Rosamund Pike for "I Care A Lot" |
| Best Performance by an Actress in a Supporting Role in Any Motion Picture | Jodie Foster for "The Mauritanian" |
| Best Performance by an Actor in a Supporting Role in Any Motion Picture | Daniel Kaluuya for "Judas and the Black Messiah" |
| Best Motion Picture — Animated | Soul |
| Best Motion Picture — Foreign Language | Minari- USA |
| Best Screenplay — Motion Picture | "The Trial of the Chicago 7"— Aaron Sorkin |
| Best Original Score — Motion Picture | "Soul" – Trent Reznor, Atticus Ross, and Jon Batiste |
| Best Original Song — Motion Picture | "Io Si," from "The Life Ahead" |

- 78வது கோல்டன் குளோப் விருதுகள் வழங்கும் விழாவானது கலப்பின முறை மாதிரியில் நடந்தது. இது லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் நியூயார்க் நகரத்திலிருந்து திரையிடப் பட்டது.
- 2021 ஆம் ஆண்டின் கோல்டன் குளோப் விருதுகள் என்பது இந்த ஆண்டின் முதலாவது பெரிய தொலைக்காட்சி விருது வழங்கும் நிகழ்ச்சியாகும்.
- இந்த ஆண்டின் திரைப்படப் பிரிவுகளில் 22 பரிந்துரைகளுடன் நெட்ஃபிலிக்ஸ் (42) ஆனது அதிகப் பரிந்துரைகளைப் பெற்றுள்ளது.
- திரைப்படப் பிரிவுகளானது "மாங்க்" மற்றும் "தி ட்ரையல் ஆஃப் தி சிகாகோ 7" ஆகிய சிறந்த படம் (நாடகம்) சார்ந்த பரிந்துரைகளையும் "தி கிரவுன்" மற்றும் "ஷிட்ஸ் க்ரீக்" ஆகிய முன்னணிப் படங்களுடன் சேர்த்து தொலைக்காட்சி பிரிவுகளில் 20 படங்களுக்கான பரிந்துரைகளையும் உள்ளடக்கியுள்ளது.
- நோமட் லேண்ட் சிறந்த இயக்கப் படம் - நாடக விருதை வென்றுள்ளது. சிறந்த இயக்குனருக்கான விருது அதன் இயக்குனரான சோலோ ஜாவோவுக்கு அளிக்கப் பட்டு உள்ளது. இந்த விருதை வென்ற இரண்டாவது பெண்மணி என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.

- இந்த விருதைப் பெற்ற முதலாவது பெண்மணி பார்பரா ஸ்ட்ரைசாண்ட் (1984).
- மறைந்த அமெரிக்க நடிகரான சாட்விக் போஸ்மேன் என்பவர் 'மா ரெய்னியின் பிளாக் பாட்டம்' என்ற படத்தில் லீவி கிரீன் என்ற பாத்திரத்தில் நடித்ததற்காக 'ஒரு இயக்கப் படம் - நாடகத்தில் சிறந்த நடிகருக்கான கோல்டன் குளோப் விருதை' வென்றுள்ளார்.

| Television Awards | |
|---|---|
| Award Category | Winner |
| Best Television Series — Drama | The Crown |
| Best Performance by an Actor in a Television Series — Drama | Josh O'Connor — "The Crown" |
| Best Performance by an Actress in a Television Series — Drama" | Emma Corrin — "The Crown" |
| Best Television Limited Series or Motion Picture Made for Television | The Queen's Gambit |
| Best Performance by an Actress in a Limited Series or Motion Picture Made for Television | Anya Taylor-Joy for "The Queen's Gambit" |
| Best Performance by an Actor in a Limited Series or Motion Picture Made for Television | Mark Ruffalo for "I Know This Much is True" |
| Best Television Series — Musical or Comedy | Schitt's Creek |
| Best Performance by an Actor in a Television Series — Musical or Comedy | Jason Sudeikis for "Ted Lasso" |
| Best Performance by an Actress in a Television Series — Musical or Comedy | Catherine O Hara for "Schitt's Creek" |
| Best Performance by an Actor in a Supporting Role in a Series, Limited Series or Motion Picture Made for Television | John Boyega for "Small Axe" |
| Best Performance by an Actress in a Supporting Role in a Series, Limited Series or Motion Picture Made for Television | Gillian Anderson for "The Crown" |

# பொருளாதாரச் செய்திகள்

## முதலாவது வெளிநாட்டு நிதி

- ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா (SBI) பரஸ்பர நிதியமானது தனது முதலாவது வெளிநாட்டு நிதிச் சலுகையை அறிமுகப் படுத்தியுள்ளது.
- SBI சர்வதேச அணுகல் – அமெரிக்க முதலீட்டுப் பங்கு எஃப்ஓஎஃப் (FOF) என்ற பெயரில் இந்த நிதியானது ஒரு பரஸ்பர நிதி திட்டத்தில் / இடிஎப் (ETF) நிதிகளில் முதலீடு செய்யும் ஒரு திறந்தநிலை நிதித் திட்டமாகும். இது வெளிநாடுகளில் வசிக்கின்றவர்களால் அமெரிக்கச் சந்தைகளில் முதலீடு செய்யப்படுகின்றது.
- இந்தத் திட்டமானது அதன் நிகர சொத்துக்களில் 95-100 சதவீதத்தைப் பொதுவாக அமெரிக்க முன்னோடி நிதியமான (இடிஎப் உட்பட) அமுண்டி நிதியத்தில் முதலீடு செய்யும்.
- அது அமெரிக்கச் சந்தைகளில் முக்கியமாக முதலீடு செய்கின்றது.
- இத்திட்டத்தில் ஆர்வமுள்ள வாடிக்கையாளர்கள் முதல் முறையாக குறைந்தது ரூ 5,000 என்ற அளவிலான தொகையை முதலீடு செய்ய வேண்டும்.
- இருப்பினும், கூடுதலாக வாங்குவதற்கு, குறைந்தபட்ச விண்ணப்பத் தொகை ரூ 1,000 ஆகும்.
- இந்த நிதியில் முதலீடு செய்வதற்கு உச்ச வரம்பு என்றும் எதுவும் இல்லை.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஆர்யபட்டா கண்காணிப்பு அறிவியல் ஆராய்ச்சி மையம் – மயங்கு பொருள் நிறமாலை வரைவி

- இந்திய விஞ்ஞானிகள் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டு, குறைந்த விலையுடைய வகையில் ஒரு ஒளியியல் நிறமாலைவரைவியை உருவாக்கியுள்ளனர்.
- ARIES - தேவஸ்தால் மயங்கு பொருள் நிறமாலை வரைவி & கேமரா (ADFOSC) என பெயரிடப்பட்ட இந்த ஒளியியல் நிறமாலை வரைவியானது நைனிடாலில் உள்ள ஆர்யபட்டா கண்காணிப்பு அறிவியல் ஆராய்ச்சி மையத்தால் (ARIES - Aryabhatta Research Institute of Observational Sciences) உள்நாட்டிலேயே வடிவமைத்து, உருவாக்கப்பட்டுள்ளது.
- ஸ்பெக்ட்ரோஸ்கோப் என்பது நாட்டில் இது போன்று தற்போதுள்ள வானியல் நிறமாலை வரைவிகளில் மிகப்பெரிய நிறமாலை வரைவி ஆகும்.
- இது 3.6மீ தேவஸ்தால் ஒளியியல் தொலைநோக்கியின் (DOT) மீது வெற்றிகரமாக நிறுவப் பட்டது.
- DOT என்பது நாட்டிலும் ஆசியாவிலும் உள்ள மிகப்பெரிய ஒரு தொலைநோக்கி ஆகும்.
- இது தொலைதூர குவாசர்கள் மற்றும் விண்மீன் திரள்கள் போன்ற பகுதிகளிலிருந்து மங்கலான ஒளியின் மூலங்களைக் கண்டுபிடிக்க உதவும்.
- அந்த மூலங்கள் மிக இளம் வயது பிரபஞ்சம், கருந்துளைகளைச் சுற்றியுள்ள பெரு வெடிப்புப் பகுதிகள், விண்மீன் திரள்கள் மற்றும் அண்ட வெடிப்புகள் ஆகியவற்றைச் சுற்றியுள்ள பகுதிகள் ஆகியனவாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 10**

# TNPSC துளிகள்

- மத்தியக் கல்வித் துறை அமைச்சரான ரமேஷ் பொக்ரியால் அவர்கள் தேசியப் புத்தக நிறுவனத்தால் காணொலி வாயிலாக நடத்தப்பட்ட புதுதில்லி உலகப் புத்தகக் கண்காட்சி என்பதின் 2021 ஆம் ஆண்டுப் பதிப்பைத் தொடங்கி வைத்தார்.
  - இந்தப் புத்தகக் கண்காட்சியின் கருத்துரு, "தேசியக் கல்விக் கொள்கை - 2020" என்பதாகும்.
- அனைத்துப் பெண் உறுப்பினர்களைக் கொண்ட கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் ஒரு கப்பலான எம்டி ஸ்வர்ணா கிருஷ்ணா கப்பலானது, நவி மும்பையில் உள்ள ஜவஹர்லால் நேரு துறைமுக அறக்கட்டளை நிறுவனத்திலிருந்து தனது பயணத்தைத் தொடங்கி வரலாறு படைத்துள்ளது.
  - உலக கப்பல் போக்குவரத்துத் துறையில் அனைத்தும் பெண் அதிகாரிகளால் முழுவதும் ஒரு கப்பல் இயக்கப் படுவது இதுவே முதன் முறையாகும்.
- இந்திய மல்யுத்த வீராங்கனையான வினேஷ் போகாட் அவர்கள் உக்ரைனின் கீவ் நகரில் நடத்தப்பட்ட உக்ரைன் மல்யுத்தப் போட்டியில் பெண்களுக்கான 53 கிலோ எடைப் பிரிவில் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.
  - டோக்கியோ ஒலிம்பிக் விளையாட்டுகளுக்குத் தகுதி பெற்ற ஒரே இந்தியப் பெண் மல்யுத்த வீராங்கனை இவராவார்.
- வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகமானது சுவச் சர்வேக்சன் – 2021 என்பதற்கான பகுதிசார் ஆய்வைத் தொடங்கியுள்ளது.
  - இது நகரங்களின் மீதான ஒரு தரவரிசையை வெளியிடுவதற்கான வருடாந்திர தூய்மை ஆய்வறிக்கையாகும் (4242 நகரங்கள்).
- கர்நாடக மாநிலமானது நாட்டின் முதலாவது பொறியியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கையை வெளியிட்டுள்ளது.
- அனிந்தியா தத்தா அவர்கள் "பயனுரு இந்தியா : இந்திய டென்னிஸ் போட்டியின் கதை" என்று பெயரிடப்பட்ட இந்திய டென்னிஸ் குறித்து ஒரு காலக் குறிப்பேட்டை எழுதியுள்ளார்.
- இந்தியாவானது இலங்கையைப் பாதுகாப்புத் துறையில் "முதல் முன்னுரிமைப் பங்காளராக" அறிவித்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## மரபணு மாற்றப்பட்ட உயிரினப் பயிர்கள் (GMO) குறித்த FSSAI வழிகாட்டுதல்கள்

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது (FSSAI) இறக்குமதி செய்யப்படும் உணவுப் பயிர்களில் 1% அளவில் மரபணு மாற்றப்பட்ட உயிரிப் பொருட்கள் இருப்பதற்கான அனுமதிக்கப்பட்ட வரம்பை ஏற்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது.
- இது உணவு மற்றும் சில இதர நுகர்வுப் பொருட்களில் GMO கூறுகளின் சுழிய (பூஜ்ஜிய) இருப்பிற்கான விவாதத்திற்கு இடமளிக்கின்றது.
- இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்களில் GMO நிலைகளை ஒழுங்குபடுத்தும் பணியானது தொடக்கத்தில் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கீழ் உள்ள மரபணுப் பொறியியல் மதிப்பீட்டுக் குழுவின் கீழ் இருந்தது.

- தற்பொழுது இது 2006 ஆம் ஆண்டு முதல் மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள FSSAI அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.
- GMO மூலக்கூறில் மரபணுப் பொருளானது மரபணுப் பொறியியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மாற்றியமைக்கப்படும் அல்லது அவை செயற்கையான முறையில் உருவாக்கப்படும்.

fssai

सत्यमेव जयते

FOOD SAFETY AND STANDARDS AUTHORITY OF INDIA

*Inspiring Trust, Assuring Safe & Nutritious Food*

Ministry of Health and Family Welfare, Government of India

# சர்வதேசச் செய்திகள்

## பொருளாதார சுதந்திரக் குறியீடு 2021

Top 10 Countries

| RANK | COUNTRY | OVERALL | CHANGE |
|---|---|---|---|
| 1 | Singapore | 89.7 | 0.3 ^ |
| 2 | New Zealand | 83.9 | -0.2 v |
| 3 | Australia | 82.4 | -0.2 v |
| 4 | Switzerland | 81.9 | -0.1 v |
| 5 | Ireland | 81.4 | 0.5 ^ |
| 6 | Taiwan | 78.6 | 1.5 ^ |
| 7 | United Kingdom | 78.4 | -0.9 v |
| 8 | Estonia | 78.2 | 0.5 ^ |
| 9 | Canada | 77.9 | -0.3 v |
| 10 | Denmark | 77.8 | -0.5 v |

- அமெரிக்காவின் ஒரு பழமைவாத கொள்கை வகுக்கும் அமைப்பான ஹெரிட்டேஜ் என்ற அமைப்பானது சமீபத்தில் பொருளாதார சுதந்திரக் குறியீட்டை வெளியிட்டு உள்ளது.
- இந்தக் குறியீட்டில், தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக உலகத் தரவரிசையில் சிங்கப்பூர் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

- இதில் நியூசிலாந்து இரண்டாவது இடத்தையும் ஆஸ்திரேலியா மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.

## சுவர்னிம் விஜய் வர்ஷ்

- சுவர்னிம் விஜய் வர்ஷ் ஆனது 1971 ஆம் ஆண்டில் பாகிஸ்தானிற்கு எதிரான வங்க தேசத்தின் விடுதலைப் போரின் 50 ஆண்டுகளை அனுசரிக்கின்றது.
- ஐஎன்எஸ் சுபேதா என்பது உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட ஒரு கடற்கரையோர ரோந்துக் கப்பலாகும். குலிஷ் என்பது உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட ஒரு வழிகாட்டு ஏவுகணைப் பாதுகாப்புக் கப்பலாகும்.
- இந்தக் கப்பல்கள் தற்பொழுது நடைபெற்று வரும் "சுவர்னிம் விஜய் வர்ஷ்" என்ற நிகழ்வை அனுசரிப்பதற்காக வங்க தேசத்திற்குச் செல்கின்றன.
- 1971 ஆம் ஆண்டு விடுதலைப் போரின் போது உயிரிழந்த இந்திய மற்றும் வங்க தேசப் போர் வீரர்களுக்கு மரியாதை செலுத்துவதற்காக முதல்முறையாக மோங்லா துறைமுகத்திற்குப் பயணம் மேற்கொள்ளும் இந்தியக் கடற்படைக் கப்பல் இது ஆகும்.
- மேலும் இது சாகர் எனப்படும் பிராந்தியத்தில் அனைவருக்குமான பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி என்பதின் வரிசையில் இந்தப் பிராந்தியத்தில் அமைதி, நிலைப்புத் தன்மை, சிறந்த சூழலைப் பராமரிப்பதற்கான இந்தியாவின் பொறுப்புமிக்க தன்மை மற்றும் தீர்வு காணும் அணுகுமுறையை எடுத்துக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## டெசர்ட் ப்ளாக் போர்ப் பயிற்சி




- இந்திய விமானப் படையானது (IAF) ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற "டெசர்ட் ப்ளாக்" எனப்படும் ஒரு பன்னாட்டுப் போர்ப் பயிற்சியில் முதல்முறையாகக் கலந்து கொண்டு உள்ளது.
- இந்திய விமானப் படையானது ஐக்கிய அரபு அமீரகம், அமெரிக்கா, பிரான்சு, சவுதி

அரேபியா, தென் கொரியா மற்றும் பஹ்ரைன் ஆகிய நாட்டின் விமானப் படைகளுடன் இணைந்து கலந்து கொள்கின்றது.

❖ “டெசர்ட் பிளாக்” போர்ப் பயிற்சியானது பிரான்சு, அமெரிக்கா, பஹ்ரைன், தென்கொரியா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 10 நாடுகளின் பங்கேற்புடன் நடத்தப் படும் ஒரு பன்னாட்டுப் போர்ப் பயிற்சியாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சிந்து நேத்ரா செயற்கைக்கோள்

❖ இது ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் பிஎஸ்எல்வி-சி5 என்ற விண்கலனில் வைத்து விண்ணுக்குச் செலுத்தப்பட்டது.

❖ இது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் (DRDO) உருவாக்கப் பட்டுள்ளது.

❖ இது இந்தியக் கடற்பகுதியில் இராணுவப் போர்க் கப்பல்கள் மற்றும் வணிகக் கப்பல்களின் செயல்பாட்டு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக இந்தியாவின் கண்காணிப்புத் திறன்களுக்கு வலு சேர்க்க உள்ளது.

❖ இது தென் சீனக் கடல் பகுதி அல்லது ஏடன் வளைகுடா மற்றும் ஆப்பிரிக்கக் கடற்கரை போன்ற குறிப்பிட்ட பகுதிகளில் கண்காணிப்பை மேற்கொள்ள உதவ இருக்கின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## அயற் பண்புடைய மண்புழு

❖ அயற்பண்புடைய மற்றும் அதிக அளவில் ஊடுருவிய மண்புழுவான மெகாசோலிசிடே என்ற உயிரினக் குடும்பத்தை (Megascolecidae family) சேர்ந்த அமின்ந்தாஸ் அலெக்சாண்டிரி என்ற உயிரினமானது கர்நாடகாவிலிருந்து முதன்முறையாக சேகரிக்கப் பட்டு, பதிவு செய்யப் பட்டுள்ளது.

❖ இதன் உண்மையான வாழ்விடம் தென்கிழக்கு ஆசியா என்று நம்பப் படுகின்றது.

## மீன்பிடிப் பூனை குறித்த கணக்கெடுப்பு

❖ ஒடிசாவின் சிலிக்கா ஏரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் முதன்முறையாக நடத்தப்படும் மீன்பிடிப் பூனைகள் குறித்த கணக்கெடுப்பானது தொடங்கியது.

❖ மீன்பிடிப் பூனைகள் பிடிபடாமல் நழுவுகின்ற இரவில் நடமாடும் பாலூட்டி இனமாகும்.

❖ இது பொதுவாக வடக்கு மற்றும் கிழக்கு இந்தியாவின் சதுப்பு நில ஈர நிலங்கள் மற்றும் கிழக்குக் கடற்கரையின் சதுப்பு நிலங்களில் காணப்படுகின்றது.

❖ சிலிக்கா ஏரியானது ஒரு உவர்ப்பு வகையிலான நீர் உப்பங்கழியாகும்.

❖ இந்த ஏரியானது வங்காள விரிகுடாவில் பாயும் தயா நதியின் முகத்துவாரத்தில் அமைந்துள்ளது.

❖ இது நியூ கேலிடோனியன் பவளப் பாறையடுக்கிற்கு அடுத்து ஆசியாவின் மிகப்பெரிய மற்றும் உலகில் 2வது மிகப்பெரிய உப்பங்கழியாக விளங்குகின்றது.

- இந்த ஏரியானது இந்தியத் துணைக் கண்டத்தில் எங்கும் காணப்படும் புலம்பெயர்வு நீர்ப்பறவைக்கான மிகப்பெரிய குளிர்காலத் தளமாக விளங்குகின்றது.
- 1981 ஆம் ஆண்டில் ராம்சார் ஒப்பந்தத்தின் கீழ் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த முதலாவது இந்திய சதுப்பு நிலம் இதுவாகும்.
- சிலிக்கா ஏரியில் முக்கிய ஈர்ப்புத் தன்மையுள்ளதாக விளங்குவது ஐராவதி நதி டால்பின்களாகும்.



# மாநிலச் செய்திகள்

## திருநர் சமுதாய உதவி மையம்

- சைபராபாத் காவல் துறையானது இந்தியாவின் முதலாவது திருநர் சமுதாய உதவி மையத்தை தெலுங்கானாவின் ஹைதராபாத்தில் உள்ள கச்சிபௌலி காவல் நிலையத்தில் தொடங்கியுள்ளது.
- நாட்டில் இதே வகையைச் சேர்ந்த முதலாவது பாலின அடிப்படையில் ஏற்படுத்தப் பட்ட பிரத்தியேகமான கொள்கை முன்னெடுப்பு இதுவாகும்.
- இதற்கு முன்பு 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 அன்று, இந்திய உச்சநீதிமன்றமானது திருநர் சமூகத்தை ஆண் மற்றும் பெண்ணுடன் சேர்த்து மூன்றாவது பாலினமாக அங்கீகரித்துள்ளது.

# முக்கிய தினங்கள்

## ஜன் அவுசதி திவாஸ் – மார்ச் 07

- இந்தத் தினமானது மரபியல் மருந்துகளின் பயன்பாட்டிற்கு ஊக்கம் அளிப்பதற்காகவும் அது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் அனுசரிக்கப் படுகின்றது.
- முதலாவது ஜன் அவுசதி திவாஸ் ஆனது 2019 ஆம் ஆண்டு மார்ச் 07 அன்று அனுசரிக்கப் பட்டது.
- மார்ச் 01 ஆம் தேதி முதல் மார்ச் 07 ஆம் தேதி வரை நாடு முழுவதும் “ஜன் அவுசதி சேவா பிகி, ரோஜ்கர் பிகி” என்ற கருத்துருவுடன் “ஜன் அவுசதி வாரமானது” அனுசரிக்கப் படுகின்றது.

- ஜன் அவுசதி மையங்கள் உலகின் மிகப்பெரிய சில்லறை ரீதியிலான ஒரு மருந்துச் சங்கிலியாக விளங்குகின்றது.
- பிரதான் மந்திரி பாரதிய ஜன் அவுசதி பரியோஜனா என்ற முன்னெடுப்பானது பொது மக்களுக்குக் குறைந்த விலையில் தரமான மருந்துகளை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## சர்வதேசப் பெண்கள் தினம் – மார்ச் 08

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "தலைமைத்துவத்தில் பெண்கள் : கோவிட் – 19 உலகில் சமத்துவ எதிர்காலத்தை அடைதல்" என்பதாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையானது 1975 ஆம் ஆண்டு சர்வதேசப் பெண்கள் ஆண்டிலிருந்து சர்வதேசப் பெண்கள் தினத்தைக் கொண்டாடி வருகின்றது.
- 1977 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது மார்ச் 08 ஆம் தேதியை பெண்கள் உரிமைகள் மற்றும் உலக அமைதிக்கான ஐக்கிய நாடுகள் தினமாக அனுசரிக்குமாறு அதன் உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுத்தது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 11**

# TNPSC துளிகள்

- பிரதமர் மேகாலயாவின் ஷில்லாங்கில் உள்ள NEIGRIHMS (வடகிழக்கு இந்திரா காந்தி வட்டார சுகாதார மற்றும் மருத்துவ அறிவியல் நிறுவனம்) நிறுவன வளாகத்தில் அமைந்துள்ள 7500வது ஜன் அவுசதி மையத்தை நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார்.

# தேசியச் செய்திகள்

## முதலாவது முடிவுகள் அடிப்படையிலான நிதிநிலை அறிக்கை

- ஜார்க்கண்ட் மாநில அரசானது முதன்முறையாக முடிவுகள் அடிப்படையிலான நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.
- இந்த நிதிநிலை அறிக்கையில், அனைத்துத் துறைகளுக்கும் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்கப்பட வேண்டிய குறிப்பிடத்தக்க இலக்குகளும் பொறுப்புகளும் வழங்கப் பட்டுள்ளன.
- இந்த இலக்குகளை அடைய எடுக்கப் பட்ட முடிவுகள் 2022 ஆம் நிதியாண்டின் முடிவில் மதிப்பிடப் படும்.
- இந்த முறையில் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தலானது 2007-08 ஆம் நிதிநிலை அறிக்கையிலிருந்துப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- இந்த முறையின் கீழ், ஒவ்வொரு துறையைக் கையாளும் ஒவ்வொரு அமைச்சகமும் முதல்நிலை முடிவுகள் அடிப்படையிலான நிதிநிலை அறிக்கையை நிதி அமைச்சகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.
- இந்த நிதிநிலை அறிக்கையானது நிதிநிலை அறிக்கையின் (பட்ஜெட்) செலவினம், முடிவுகள் மற்றும் விளைவுகள் ஆகியவற்றிற்கிடையே ஒருங்கிணைப்புத் தன்மையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

## 3 தலைமைத் திட்டங்கள்

- மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது 3 தலைமைத் திட்டங்களின் கீழ் முக்கியமான திட்டங்களை வகைப்படுத்தியுள்ளது.
- இந்த அமைச்சகமானது சக்தித் திட்டம், போஷான் 2.0 திட்டம், வாத்சல்யா திட்டம் ஆகிய 3 தலைமைத் திட்டங்களின் கீழ் தனது அனைத்து முக்கியமான திட்டங்களையும் வகைப்படுத்த முடிவு செய்துள்ளது.
- போஷான் 2.0 என்ற திட்டமானது ஊட்டச்சத்துப் பொருட்கள், வரம்புகள், விநியோகம் மற்றும் முடிவுகளை வலுப்படுத்துவதற்கான வழிகள் மற்றும் நடவடிக்கைகளின் மீது கவனம் செலுத்த இருக்கின்றது.
- வாத்சல்யா திட்டமானது நாடு முழுவதும் குழந்தை நலப் பணிகள் மற்றும் குழந்தைப் பாதுகாப்புப் பணிகளை மேற்பார்வையிட உள்ளது.
- சக்தித் திட்டத்தின் கீழ் உள்ளடங்கியுள்ள திட்டங்கள் பின்வருமாறு
    - ஒற்றைத் தகவல் மையம்
    - மகிளா காவல் துறைத் தன்னார்வலர்
    - பேட்டி பச்சாவோ பேட்டி பதாவோ

- பெண்கள் உதவி எண்
- பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா

## நகராட்சி செயல்பாட்டுக் குறியீடு – 2020

- நகராட்சி செயல்பாட்டுக் குறியீடானது (MPI) எளிதில் வாழ்வதற்கான குறியீட்டுடன் சேர்த்து வெளியிடப் பட்டுள்ளது.
- இது சேவைகள், நிதி, கொள்கை, தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றில் நகராட்சிகளில் உள்ளாட்சி அரசாங்கங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்யக் கோருகின்றது.
- இது உள்ளாட்சி நிர்வாகச் செயல்பாடுகளில் கடினத் தன்மையை மதிப்பீடு செய்யவும் அதனை எளிமைப்படுத்தவும் கோருவதோடு வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமை ஆகியவற்றையும் ஊக்குவிக்கச் செய்கின்றது.
- எளிதில் வாழ்வதற்கான குறியீடானது முடிவுகள் அடிப்படையிலான குறிகாட்டிகளை இணைக்கச் செய்யும் வேளையில் நகராட்சி செயல்பாட்டுக் குறியீடானது உள்ளீட்டுக் குறிகாட்டிகள் குறித்த விளக்கங்களை எடுத்துரைக்கின்றது.
- MPI – 2020 குறியீடானது நகராட்சிகளின் மக்கள் தொகையின் அடிப்படையில் மில்லியன்+ மக்கள் தொகை கொண்ட நகராட்சிகள் (மில்லியன் மக்கள் தொகைக்கு மேல் கொண்ட நகராட்சிகள்) மற்றும் மில்லியன் மக்கள் தொகைக்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்ட நகராட்சிகள் என வகைப்படுத்துகின்றது.
- மில்லியன்+ பிரிவில், இந்தூர் நகராட்சியானது முதலிடத்தில் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது. அதற்கடுத்து சூரத் மற்றும் போபால் ஆகிய நகராட்சிகள் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளன.
- மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்ட பிரிவில், புது தில்லி நகராட்சி ஆணையமானது முதலிடத்தைப் பிடித்துள்ளது. அதற்கடுத்து திருப்பதி மற்றும் காந்தி நகர் ஆகிய நகராட்சிகள் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.


| Rank | Municipal Performance Index | | | |
|---|---|---|---|---|
| | Population Million+ | | Population Less than Million | |
| | Municipality | Score | Municipality | Score |
| 1 | Indore | 66.08 | New Delhi MC | 52.92 |
| 2 | Surat | 60.82 | Tirupati | 51.69 |
| 3 | Bhopal | 59.04 | Gandhinagar | 51.59 |
| 4 | Pimpri Chinchwad | 59.00 | Karnal | 51.39 |
| 5 | Pune | 58.79 | Salem | 49.04 |
| 6 | Ahmedabad | 57.60 | Tiruppur | 48.92 |
| 7 | Raipur | 54.98 | Bilaspur | 47.99 |
| 8 | Greater Mumbai | 54.36 | Udaipur | 47.77 |
| 9 | Visakhapatnam | 52.77 | Jhansi | 47.04 |
| 10 | Vadodara | 52.68 | Tirunelveli | 47.02 |

### காட்டுத் தீ குறித்த இந்தியாவின் வன ஆய்வறிக்கை (FSI)

- இந்தியாவில் வன ஆய்வு நிறுவனமானது நாட்டில் ஏற்பட்டு வரும் காட்டுத் தீ குறித்த ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- காட்டுத் தீ ஆனது உலக அளவில் முக்கியத்துவம் பெற்று வரும் ஒரு பிரச்சினையாகும்.
- பல்வேறு நாடுகளில், காட்டுத் தீ ஆனது பல்வேறு பகுதிகளில் பரவி எரிந்து கொண்டு இருக்கின்றது. தீ ஏற்படும் காலமானது புவி வெப்பமயமாதல் காரணமாக அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது.

*முக்கிய அம்சங்கள்*

- 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 22 மற்றும் மார்ச் 1 ஆகிய தினங்களுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் ஒடிசாவில் குறைந்தது 5,291 காட்டுத் தீ நிகழ்வுகள் பதிவு செய்யப் பட்டு உள்ளன. இது நாட்டில் ஏற்பட்ட மிக அதிக அளவிலான நிகழ்வு ஆகும்.
- மகுவா மலர்கள் மற்றும் கெண்டு இலைகளின் சேகரிப்பு, இடப்பெயர்வு வேளாண்மை மற்றும் வனப் பகுதிகளில் கால்நடைகளை மேய்த்தல் ஆகியவை ஒடிசாவில் காட்டுத் தீ ஏற்படுவதற்கான முக்கியக் காரணங்களாகும்.
- FSI தரவின் படி இதே காலக் கட்டத்தில் தெலுங்கானாவானது 1527 நிகழ்வுகளுடன் 2வது அதிக தீ விபத்துகளைப் பதிவு செய்துள்ளது.
- அதற்கடுத்து மத்தியப் பிரதேசம் (1507) மற்றும் ஆந்திரப் பிரதேசம் (1292) ஆகியவற்றில் அதிக தீ விபத்துகள் ஏற்பட்டுள்ளன.




## சர்வதேசச் செய்திகள்

### மைத்ரி சேது

- மைத்ரி சேது பாலமானது பெனி நதியின் மீது கட்டப்பட்டு வருகின்றது.
- பெனி நதியானது திரிபுரா மாநிலம் மற்றும் வங்க தேசத்திற்கு இடையிலான இந்திய எல்லைப் பகுதியில் பாய்கின்றது.
- 1.9 கிலோ மீட்டர் நீளமுடைய இந்தப் பாலமானது இந்தியாவில் உள்ள சப்ரூம் என்ற பகுதியினை வங்க தேசத்தில் ராம்கார்க் என்ற பகுதியுடன் இணைக்கின்றது.
- இது தொடங்கி வைக்கப் பட்டதின் மூலம், திரிபுராவானது வங்க தேசத்தில் உள்ள சிட்டகாங் துறைமுகத்தை அணுகுவதுடன் "இந்தியாவிற்கான வடகிழக்கின் நுழைவு வாயில்" (Gateway of North East) என்ற பெருமையைப் பெற உள்ளது.




## முகத்தை மறைத்தல் மீதான தடை – சுவிட்சர்லாந்து

- சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு பொது ஜன வாக்கெடுப்பில் முஸ்லீம் பெண்களால் புர்கா மற்றும் நிக்காப் உள்ளிட்டவற்றை அணிந்து பொது இடங்களில் தங்கள் முகத்தை மறைத்தல் மீதான தடைக்கு சுவிட்சர்லாந்து ஆதரவாக வாக்களித்துள்ளது.
- அந்நாட்டின் நேரடி மக்களாட்சி அமைப்பின் கீழ் தங்களது சொந்த விவகாரங்களில் முடிவெடுக்க அந்நாட்டு மக்களுக்கு நேரடி முடிவெடுக்கும் அதிகாரமானது வழங்கப் பட்டுள்ளது.
- இவர்கள் தேசிய மற்றும் பிராந்திய அளவிலான பொது ஜன வாக்கெடுப்புகளில் பல்வேறு விவகாரங்கள் குறித்து முடிவெடுப்பதற்காக வாக்களிக்க வேண்டி தொடர்ந்து அழைக்கப் படுகின்றனர்.
- 2011 ஆம் ஆண்டில் பொது இடங்களில் புர்காக்கள் மற்றும் நிக்காப்கள் ஆகியவற்றை அணிவதற்குத் தடை விதித்த முதலாவது ஐரோப்பிய நாடு பிரான்சு ஆகும்.

## Women Will (பெண்களால் முடியும்)

- கூகுள் நிறுவனமானது 2021 ஆம் ஆண்டு மார்ச் 08 அன்று கொண்டாடப்பட்ட சர்வதேசப் பெண்கள் தினத்தன்று "Women Will" என்ற ஒரு புதிய இணைய தளத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் தளமானது ஊக்குவிப்புத் திட்டங்கள், வணிகம் சார்ந்த பாடங்கள் மற்றும் வழி நடத்து வகுப்புகள் ஆகியவற்றின் உதவியுடன் இந்தியாவில் உள்ள 1 மில்லியன் கிராமப்புறப் பெண்கள் தொழில்முனைவோராக உருவெடுக்க தனது ஆதரவை அளிக்க உள்ளது.

## குற்றத் தடுப்பு மற்றும் குற்றவியல் நீதி குறித்த ஐக்கிய நாடுகள் மாநாடு

- 14வது குற்றத் தடுப்பு மற்றும் குற்றவியல் நீதி குறித்த ஐக்கிய நாடுகள் மாநாடானது ஜப்பானில் உள்ள கியோட்டோ நகரில் நடைபெற்று வருகின்றது.
- இந்த ஆண்டு இந்த நிகழ்வானது கலப்பின முறையில் நடத்தப்படுகின்றது.

- இந்த மாநாட்டில் குற்றவியல் நீதி, குற்றத் தடுப்பிற்கான உத்திகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை ஊக்குவிப்பதில் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் அனைத்து விதமான குற்றங்களையும் தடுத்தல் ஆகியவை விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- 1970 ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்படும் இந்த மாநாட்டை ஜப்பான் நாடு தற்போது முதன்முறையாக நடத்துகின்றது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அறிக்கை – 2021

| | Country | Overperformance (positions) |
|---|---|---|
| 1 | India | 65 |
| 2 | Philippines | 57 |
| 3 | Ukraine | 47 |
| 4 | Viet Nam | 45 |
| 5 | China | 40 |
| 6 | Jordan | 34 |
| 7 | Brazil | 33 |
| 8 | Republic of Moldova | 33 |
| 9 | South Africa | 29 |
| 10 | Tunisia | 29 |

- இந்த அறிக்கையானது தற்பொழுதுள்ள சமத்துவமின்மையை அதிகரிக்கின்ற மற்றும் புதியனவற்றை உருவாக்கின்ற முன்னோடித் தொழில்நுட்பங்கள் குறித்து ஆய்வு செய்கின்றது.
- மேலும் இது எந்த ஒரு நபரையும் விட்டு விடாமல், அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை உருவாக்குவதற்குத் தேவையான பொருள் மற்றும் நிறுவன சீர்திருத்தங்கள், தேசிய மற்றும் சர்வதேசக் கொள்கைகள் ஆகியவை குறித்தும் விவாதிக்கின்றது.
- இந்த அறிக்கையானது ஐக்கிய நாடுகள் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக் கருத்தரங்கு என்ற அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தியாவானது பரிந்துரைக்கப்பட்ட நாட்டின் தனிநபர் தலா வருமான மொத்த


உள்நாட்டு உற்பத்தியை விட முன்னோடித் தொழில்நுட்பங்களில் மிக உயரிய "அதிகப் படியான செயல்பாட்டாளராக" விளங்குகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## டைனோசர்களின் புதை படிமங்கள் – அர்ஜென்டினா


- ஆராய்ச்சியாளர்கள் 140 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த டைனோசர்களின் புதைபடிமங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.
- டைனோசரின் முழுமையடையாத பகுதியளவு கிடைத்த எலும்புக்கூடு ஆனது அர்ஜென்டினாவில் உள்ள நியூகென் நகரத்தின் தென் பகுதியில் கண்டுபிடிக்கப் பட்டு உள்ளது.
- இந்தப் புதை படிமங்கள் "நிஞ்சாடைட்டன் சபாடாய்" எனப் பெயரிடப்பட்ட டைனோசர் இனத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாக ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.
- இவர்கள் நிஞ்சாடைட்டனை ஒரு டைட்டனோசராக (Titanosaur) அடையாளம் கண்டு உள்ளனர்.
- டைட்டனோசர்கள் என்பது 4 தூண்கள் போன்ற கால்களைக் கொண்டு நடக்கும் வகையிலான, நீளமான கழுத்து கொண்ட, தாவரங்களை உண்ணும் டைனோசர்களின் மிகப்பரந்த ஒரு வகையாகும்.

## உலகின் மறக்கப்பட்ட மீன்கள் குறித்த அறிக்கை




- இது சமீபத்தில் WWF மற்றும் உலகளாவிய வனவுயிர்ப் பாதுகாப்பு அமைப்பு உள்ளிட்ட 16 உலகப் பாதுகாப்பு அமைப்புகளால் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையாகும்.
- இந்த அறிக்கையின் படி ஏறத்தாழ 3 நன்னீர் மீன்களில் 1 மீன் இனமானது மறைந்து போகும் அச்சுறுத்தல் நிலையில் உள்ளது.
- உலகின் மறக்கப்பட்ட மீன்கள் என்ற அறிக்கையானது, நன்னீர் மீன்கள் ஆசியா, ஆப்பிரிக்கா, மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகியவற்றில் உள்ள 200 மில்லியன் மக்களுக்கு முக்கிய ஊட்டச்சத்து ஆதாரத்தை அளிக்கின்றது என்று கூறுகின்றது.
- இந்த தொழில்துறையானது ஏறத்தாழ 60 மில்லியன் மக்களுக்கும் அதிலும் குறிப்பாக அந்த 60 மில்லியன் தொகையில் பாதிக்கும் மேற்பட்ட அளவிலான பெண்களுக்கு வேலைவாய்ப்புகளுக்கும் வாழ்வாதாரங்களுக்கும் வாய்ப்பு அளிக்கின்றது.
- ஒட்டு மொத்த அளவில் நன்னீர் மீன்பிடிப்புப் பணியில் உள்ள வேலை

வாய்ப்புகளானது உலக வேளாண் பணி வாய்ப்புகளில் 2.5% மற்றும் 6% என்ற அளவிற்கு இடைப்பட்டதாக விளங்குகின்றது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 12**

# TNPSC துளிகள்

- சீனாவானது சர்வதேசப் பயணத்தை ஊக்குவிப்பதற்காக முதலாவது "வைரஸ் கடவுச் சீட்டுகளை" அறிமுகப்படுத்தியுள்ளது.
    - இந்த டிஜிட்டல் சான்றிதழானது பயனாளியின் தடுப்பூசி குறித்த நிலை மற்றும் வைரஸ் சோதனை முடிவுகள் ஆகியவற்றைக் காட்டுகின்றது.
- சர்வதேசப் பெண்கள் தினக் கொண்டாட்டத்தன்று, மத்தியப் பிரதேச உள்துறை அமைச்சரான நரோத்தம் மிஸ்ரா அவர்கள் ஒரு பெண் காவல் துறை அலுவலரை (மீனாட்சி வர்மா) அந்த மாநிலத்தின் உள்துறை அமைச்சராக நியமித்தார்.
    - இத்தினத்தன்று மீனாட்சி வர்மா அவர்கள் அம்மாநிலத்தின் உள்துறை அமைச்சராகப் பணியாற்றியதோடு சில முக்கிய முடிவுகளை எடுத்து, பொது மக்களின் குறைகளையும் களைந்தார்.

# தேசியச் செய்திகள்

## அம்ரித் மகா உற்சவம்

- "அம்ரித் மகா உற்சவமானது" இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டு காலம் ஆனதை அனுசரிப்பதற்காகக் கொண்டாடப்படுகின்றது.
- இது நாடு முழுவதும் 75 இடங்களில் 75 வாரங்களுக்குக் கொண்டாடப்பட இருக்கின்றது.
- இந்த சிறப்புமிகு திருவிழாவானது மார்ச் 12 ஆம் தேதி முதல் குஜராத்தின் அகமதாபாத்தில் உள்ள சபர்மதி ஆசிரமத்திலிருந்து தொடங்கப்பட இருக்கின்றது.

## பிரதான் மந்திரி சுவஸ்திய சுரக்சா நிதி

- மத்திய அமைச்சரவையானது பிரதான் மந்திரி சுவஸ்திய சுரக்சா என்ற நிதியை ஒரே காலாவதியாகாத ஒரு ஒதுக்கப்பட்ட நிதியாகப் பயன்படுத்தப் படுவதற்கு ஒப்புதல் வழங்கி உள்ளது.
- இதன் முக்கியப் பயன்பாடுகள் தற்பொழுது இருக்கின்ற வளங்களின் மூலம் நாடு தழுவிய மற்றும் குறைந்த விலையில் சுகாதார நலத்தை அணுகுவதை மேம்படுத்தச் செய்வதோடு, இந்தத் தொகையை அந்த நிதியாண்டின் முடிவில் காலாவதியாகாமல் இருப்பதை உறுதி செய்வது ஆகியனவாகும்.
- இந்த நிதியானது மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தினால் நிர்வகிக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றது.
- இந்த நிதியின் மூலம் கிடைக்கும் வருமானமானது சுகாதாரத் துறை அமைச்சகத்தின் பின்வரும் முதன்மைத் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட இருக்கின்றது.
    - தேசிய சுகாதாரத் திட்டம்
    - ஆயுஷ்மான் பாரத் – சுகாதார மற்றும் நல மையங்கள்
    - ஆயுஷ்மான் பாரத் – பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா
- மேலும் இந்த நிதியானது சுகாதார அவசர நிலைகளின் போது அவசர கால & பேரிடர் காலத் தயார்நிலை மற்றும் மீட்பு ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

- மேலும் இது நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை நோக்கியச் செயல்பாடுகளை அடைதல் மற்றும் தேசிய சுகாதாரக் கொள்கை – 2017 என்பதின் இலக்குகளை அடைதல் ஆகியவற்றையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## சீனா-ரஷ்யா கிரகங்களுக்கான ஒப்பந்தம்

- ரஷ்யா மற்றும் சீனா ஆகியவை கூட்டு நிலவு (சந்திரன்) விண்வெளி நிலையம் அமைப்பதிற்கானத் திட்டங்களை அறிவித்துள்ளன.
- ரஷ்யாவானது சந்திரனின் நிலப்பரப்பில் அல்லது நிலவின் சுற்றுவட்டப் பாதையில் உருவாக்கப்பட இருக்கும் சோதனை ஆராய்ச்சி வசதிகளின் ஒரு வளாகத்தை மேம்படுத்துவதற்காக சீனாவின் தேசிய விண்வெளி நிர்வாகத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- இதன் மூலம், மாஸ்கோ (ரஷ்யா) ஆனது விண்வெளி ஆராய்ச்சிப் போட்டியில் மீண்டும் முன்னனி வகிக்கத் தொடங்கியுள்ளது.
- இந்த ஆண்டானது, 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ரஷ்யாவின் முதலாவது ஆளில்லா விமானத்தின் மூலம் விண்வெளிக்கு யூரி காகரின் சென்ற 60வது ஆண்டின் நினைவு தினத்தைக் குறிக்கின்றது.

## 139

- புதிய இரயில்வே உதவி மைய எண் 139 ஆகும்.
- இந்திய இரயில்வேயானது பயணிகளின் பயணத்தின் போது அனைத்து விதமான தகவல்கள், புகார்கள், உதவிகள் மற்றும் குறைகளுக்கு விரைவில் தீர்வு காணல் ஆகியவற்றிற்காக இரயில்வேயின் அனைத்து உதவி மைய எண்களையும் இணைத்து, ஒரே எண்ணாக, அதாவது 139 ஆக அறிவித்துள்ளது.




## தெற்கு ஆசியாவின் கிழக்குப் பகுதியில் போக்குவரத்து ஒருங்கிணைப்பு

- சமீபத்தில் உலக வங்கியானது “செழித்து வளரும் பகுதிகளுடன் இணைத்தல் : தெற்கு ஆசியாவின் கிழக்குப் பகுதியில் போக்குவரத்து ஒருங்கிணைப்பின் சவால்கள் மற்றும் வாய்ப்புகள்” எனப்படும் தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, இந்தியா மற்றும் வங்கதேசம் ஆகியவற்றிற்கிடையே அதிக அளவிலான போக்குவரத்து இணைப்பானது இரு நாடுகளின் தேசிய வருமானத்தை அதிகரிக்கும்.
- இந்தியா மற்றும் வங்கதேசம் ஆகியவற்றிற்கிடையே தடையற்ற போக்குவரத்து இணைப்பானது வங்கதேசத்தின் தேசிய வருமானத்தை 17% என்ற அளவிற்கும் இந்தியாவின் தேசிய வருமானத்தை 8% என்ற அளவிற்கும் உயர்த்தும் திறன் கொண்டது என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- மேலும், இந்த அறிக்கையானது, இந்த இரு நாடுகளுக்கு இடையிலான தடையற்ற போக்குவரத்து இணைப்பானது இந்தியாவின் ஏற்றுமதியை 172% என்ற அளவிற்கு உயர்த்தும் என்றும் இந்தியாவிற்கான வங்கதேசத்தின் ஏற்றுமதியானது ஏறத்தாழ 3 மடங்கு அளவிற்கு அதிகரிக்கச் செய்யும் என்றும் கூறுகின்றது.

# பொருளாதாரச் செய்திகள்

## OECD அமைப்பின் இடைக்கால “பொருளாதாரக் கண்ணோட்டம்”


- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பு (OECD - Organization for Economic Co-operation and Development), 2021-22 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதக் கணிப்பானது 4.7% என்ற அளவில் அதிகரித்து, 12.6% புள்ளிகளாக இருக்கும் என்று கணித்துள்ளது.
- இது உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் மிகப்பெரிய பொருளாதார நாடு என்ற நிலையை மீண்டும் அடைய வழிவகை செய்கின்றது.
- எனினும் இது 2022-23 ஆம் ஆண்டில் இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி விகிதமானது 5.4% என்ற அளவிற்குக் குறையும் என்றும் கூறியுள்ளது.
- இந்தியாவின் பொருளாதாரமானது தற்போதைய நிதியாண்டில் 8% என்ற அளவிற்குக் குறையும் என்று அதிகாரப் பூர்வமாகக் கணக்கிடப்பட்டது.
- எனினும், OECD அமைப்பானது இந்தக் குறைதலானது 7.4% என்ற அளவிற்கும் குறைவாக இருக்கும் என்று நம்புகின்றது.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பூமியை ஒத்த செவ்வாய்


- நாசாவானது ஜெசீரோ பள்ளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் காணப்படும் தாதுக்கள் மற்றும் கல் படிவுகள் பூமியில் சால்டா பகுதியில் உள்ள படிவுகளுடன் ஏறத்தாழப் பொருந்தியுள்ளதாகக் கூறியுள்ளது.
- ஜெசீரோ பள்ளம் என்பது பெர்சிவரன்ஸ் விண்கலம் தரையிறங்கிய ஒரு இடமாகும்.
- மேலும் ஜெசீரோ பள்ளமானது ஒரு காலத்தில் நீரால் சூழப்பட்டது என்றும் நம்பப் படுகின்றது.
- துருக்கியில் உள்ள சால்டா ஏரிப் பகுதியில் காணப்படும் பாறைகள் நீரில் இருக்கும் தாதுக்கள் மற்றும் படிவுகளைப் பிடித்து வைத்துள்ள, பூமியில் ஒரு காலத்தில் இருந்த ஒரு முதன்மையான உயிர் வடிவமான நுண்ணுயிரிகளால் உருவானதாகும்.
- செவ்வாய்க் கிரகத்தில் தற்போது தரையிறங்கியுள்ள நாசாவின் பெர்சிவரன்ஸ் விண்கலமானது (நடமாடும் கலம்) ஜெசீரோ பள்ளத்தில் நுண்ணுயிரிகள் உள்ளனவா என்பது குறித்து ஆய்வு செய்யும்.
- மேலும் இது சால்டா ஏரியில் சேகரிக்கப்பட்ட படிவுகளைச் செவ்வாய் கிரகத்தில் எடுக்கப்பட்ட படிவு எச்சங்களுடன் பொருத்திப் பார்க்கும்.
- இது செவ்வாய்க் கிரகப் படிவுகள் மற்றும் சால்டா ஏரிப் படிவுகள் ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடுகளைப் புரிந்து கொள்ள உதவும்.




## வளிமண்டல ஆக்ஸிஜன் இல்லா உந்து விசைத் தொழில்நுட்பம்

- சமீபத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (DRDO - Defence Research and Development Organisation) வளிமண்டல ஆக்ஸிஜன் பயன்பாடு இல்லாத உந்து விசைத் தொழில்நுட்பத்தைச் சோதனை செய்துள்ளது.
- இந்த வடிவமைப்பானது மும்பை நிலப் பகுதியில் சோதனை செய்யப்பட்டது.
- இது இந்தியக் கடற்படையைச் சேர்ந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் நிலப் பகுதிகளுக்குச் சென்று தங்களது மின்கலத்திற்கு மின்னேற்றம் செய்யாமலேயே 3 வார காலத்திற்கு இயங்க அனுமதிக்கின்றது.
- AIP (Air Independent Propulsion) தொழில்நுட்பத்தின் மேம்பாடானது ஆத்ம நிர்பர் பாரத் பிரச்சாரத்திற்கான ஒரு மிகப்பெரிய ஊக்கமளிப்பாகும்.

- அமெரிக்கா, பிரான்ஸ், சீனா, ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் ரஷ்யா, ஆகிய நாடுகள் மட்டுமே இந்த முக்கியத் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளன.
- DRDOவின் AIP தொழில்நுட்பமானது பாஸ்பாரிக் அமில எரிபொருள் கலத்தை (Phosphoric Acid Fuel Cell) அடிப்படையாகக் கொண்டதாகும்.
- கடைசி 2 கல்வாரி வகுப்பைச் சேர்ந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் இதனால் இயக்கப் பட இருக்கின்றன.



## பூமியின் மறைந்துள்ள அடுக்கு

- சமீபத்தில் விஞ்ஞானிகள் பூமியின் கருப் பகுதிக்குள் மறைந்த ஓர் அமைப்பின் அடையாளத்தைக் கண்டறிந்துள்ளது.
- ஒரு நீண்ட கால கூற்றின் படி தற்பொழுது 4 அடுக்குகள் பூமிக்குள் உள்ளன. அவையாவன
  - மேல் ஓடு
  - கலசம்
  - வெளிக் கரு
  - உட்கரு
- ஆனால் இந்த அடையாளமானது பூமியின் மையப் பகுதியில் என்ன உள்ளது என்று நீண்ட காலமாக நம்பப்பட்டு வரும் உண்மையை மாற்றும் திறன் கொண்டது.
- சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த அடுக்கானது 5வது அடுக்கு என்று குறிப்பிடப் படுகின்றது.
- மேலும் ஆராய்ச்சியாளர்கள் உட்கருவிற்குள் இருக்கும் இரும்பின் அமைப்பில் ஏற்பட்டுள்ள சில மாறுபாடுகளையும் கண்டறிந்துள்ளனர்.
- இந்த மாறுபாடுகள் ஒரு புதிய “எல்லைக் கோடானது” பூமியின் மையத்திலிருந்து 650 கிலோ மீட்டர் வரை செல்வதாகக் கூறுகின்றது.

## டஸ்ட்லிக் II

- இந்தியா-உஸ்பெகிஸ்தான் கூட்டு இராணுவப் பயிற்சியான “டஸ்ட்லிக் II” என்ற பயிற்சியானது உத்தரகாண்ட்டின் ராணிகேட்டில் உள்ள ஒரு வெளிநாட்டுப் பயிற்சி மையமான சௌபாட்டியா முனையத்தில் தொடங்கியது.

- இந்த 2 இராணுவங்களின் வருடாந்திர இருதரப்பு கூட்டுப் பயிற்சியின் 2வது பதிப்பு இதுவாகும்.
- இந்தப் பயிற்சியில் உஸ்பெகிஸ்தான் மற்றும் இந்திய இராணுவம் ஆகியவற்றிலிருந்து தலா 45 வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.
- இந்தக் கூட்டு இராணுவப் பயிற்சியின் முதலாவது பதிப்பானது 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தாஷ்கண்ட்டில் நடத்தப்பட்டது.
- டஸ்ட்லிக் II என்ற பயிற்சியின் முக்கிய நோக்கமானது மலை சார்ந்த, ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் தீவிரவாதத்திற்கு எதிரான கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும்.

# மாநிலச் செய்திகள்

## பாலின அடிப்படையிலான முதலாவது நிதிநிலை அறிக்கை

- 2021-22 ஆம் நிதியாண்டிற்கான தனது வருடாந்திர நிதிநிலை அறிக்கையில் “பாலின அடிப்படையிலான நிதிநிலை அறிக்கை” என்ற கருத்தாக்கத்தைச் சேர்த்த இந்தியாவின் முதலாவது மாநிலம் ஆந்திரப் பிரதேசம் ஆகும்.
- இது பெண்களுக்குச் சிறந்த முறையில் சேவைகளை அளிப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- பாலின அடிப்படையிலான இந்த நிதிநிலை அறிக்கையானது அம்மாநிலத்தின் பல்வேறு திட்டங்களின் கீழ் பெண்கள் நலத்திற்கான செலவினங்களைப் பட்டியல் போகின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 13**

# TNPSC துளிகள்

- உத்தரப் பிரதேச மாநிலமானது பரேலியில் அதன் 8வது விமான நிலையத்தைப் பெற்றுள்ளது.
  - அதிக எண்ணிக்கையிலான விமான நிலையங்களைக் கொண்டுள்ள முதலாவது மாநிலமாக இது உருவெடுத்துள்ளது.
- சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவரான தாமஸ் பச் அவர்கள் போட்டி ஏதுமின்றி இரண்டாவது முறையாக அப்பதவிக்கு வெற்றி பெற்றுள்ளார். இவர் 2025 ஆம் ஆண்டு வரை இப்பதவியில் இருப்பார்.
  - இணையவழியில் நடைபெற்ற இந்தத் தேர்தலில் தகுதியுள்ள 94 வாக்குகளில் 93 வாக்குகளை இவர் பெற்றார்.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவில் மின்சார வாகன நிதியைத் திரட்டுதல் குறித்த அறிக்கை

- நிதி ஆயோக் மற்றும் இந்திய ராக்கி மலைப் பயிற்சி நிறுவனம் ஆகியவை இணைந்து "இந்தியாவின் மின்சார வாகனத்திற்கான நிதியைத் திரட்டுதல்" என்ற ஒரு புதிய அறிக்கையை வெளியிட்டுள்ளன.
- இந்த அறிக்கையானது மின்சார வாகனங்களை நோக்கிய இந்தியாவின் நகர்வில் நிதியாதாரத்தின் பங்கை எடுத்துக் காட்டுகின்றது.

## மிகப்பெரிய மிதக்கும் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம்

- இந்தியாவின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையமானது தெலுங்கானாவில் பெட்டபள்ளி மாவட்டத்தில் உள்ள ராமகுண்டத்தில் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இது தேசிய அனல் மின் கழகத்திற்குச் சொந்தமானதாகும் (NTPC - National Thermal Power Corporation).
- ராமகுண்டத்தில் உள்ள இந்த மின் ஆலையின் திறன் 100 மெகாவாட் ஆகும்.
- இதைத் தவிர, இந்தக் கழகமானது கேரளாவில் உள்ள காயம்குளம் எரிவாயு ஆலையில் 92 மெகா வாட் மிதக்கும் அலகு மற்றும் விசாகப் பட்டினத்தில் சிம்ஹாத்திரி மின் ஆலையில் 25 மெகா வாட் மின் அலகு ஆகிய இரண்டையும் அமைத்துக் கொண்டு இருக்கின்றது.


### *NTPC*

- NTPC நிறுவனம் ஆனது மின்சார உற்பத்தி மற்றும் அது தொடர்பான வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்தியப் பொதுத் துறை நிறுவனமாகும்.
- இது நிறுவனங்கள் சட்டம், 1956 என்ற சட்டத்தின் கீழ் இணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். இது இந்திய அரசினால் ஊக்குவிக்கப்படுகின்றது.
- இதன் தலைமையகம் புது தில்லியில் அமைந்துள்ளது.
- இது இந்தியாவில் உள்ள மிகப்பெரிய மின் நிறுவனமாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## 2030 டிஜிட்டல் காம்பஸ் திட்டம்

- ஐரோப்பிய ஒன்றியமானது (EU - European Union) “2030 டிஜிட்டல் காம்பஸ் திட்டம்” (2030 Digital Compass Plan) எனப்படும் தனது திட்டத்தை வெளியிட்டுள்ளது.
- இந்த நடவடிக்கையானது ஐரோப்பா அல்லாத நாடுகளில் இருந்து வரும் தொழில்நுட்பங்களின் மேல் தாங்கள் சார்ந்திருப்பதைக் குறைக்கும் நோக்கத்துடன் எடுக்கப் பட்டுள்ளது.
- EU ஒன்றியத்தின் டிஜிட்டல் பத்தாண்டிற்கான இந்தத் தொலைநோக்கானது 4 முக்கியக் கூறுகளைக் கொண்டுள்ளது.
    - திறன்கள்
    - கட்டமைப்புகள்
    - வணிகம்
    - அரசு




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நாசாவுடன் இஸ்ரோவின் நிசர்

- நாசா-இஸ்ரோ நிசர் (NISAR) என்பது புவிக் கண்காணிப்பிற்கான இரட்டை அதிர்வெண் L மற்றும் S பட்டை சார் அமைப்பிற்கான ஒரு கூட்டு முன்னெடுப்பாகும்.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது (ISRO) செயற்கையான ஒரு துணை ரேடாரின் மேம்பாட்டை நிறைவு செய்துள்ளது.
- இது தேசிய வானூர்தியியல் மற்றும் விண்வெளி நிர்வாகத்துடன் (NASA) இணைந்து கூட்டுப் புவிக் கண்காணிப்புச் செயற்கைக்கோள் திட்டத்திற்காக உயர் தெளிவுத் திறன் கொண்ட படங்களை உருவாக்கும் திறன் கொண்டது.
- சென்டிமீட்டருக்கும் குறைவான அளவில் நமது புவியின் மேற்பரப்பில் நிகழும் மாற்றங்களை அளவிடுவதற்காக 2 வெவ்வேறு ரேடார் அதிர்வெண்களை (L பட்டை மற்றும் S பட்டை) பயன்படுத்தும் முதலாவது செயற்கைக் கோள் திட்டம் இதுவாகும்.
- நாசா மற்றும் பெங்களுருவில் அமைந்துள்ள இஸ்ரோவானது நிசாரைச்

செலுத்துவதற்கு ஒன்றிணைவதற்காக 2014 ஆம் ஆண்டில் ஒரு பங்காண்மை ஒப்பந்ததில் கையெழுத்திட்டுள்ளன.

- ❖ நாசாவானது அத்திட்டத்தின் L பட்டை, அறிவியல் தரவிற்கான உயர் விகித தகவல் துணை அமைப்பு, புவியிடங்காட்டிக் கூறுகளைப் பெறும் கருவி, திட நிலையில் உள்ள சேமிப்பகம், தாங்கு சுமை தரவு துணை அமைப்பு ஆகியவற்றை அளிக்கின்றது.
- ❖ இஸ்ரோவானது விண்வெளி வாகனம், S பட்டை ரேடார், ஏவு வாகனம் மற்றும் ஏவுதல் திட்டத்திற்குத் தொடர்புடைய சேவைகளை அளிக்கின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## கஹிர்மாதா கடற்கரையில் ஆலீவ் ரிட்லி ஆமைகள்

- ❖ ஆலீவ் ரிட்லி ஆமைகள் ஒடிசாவின் கேந்திரபரா மாவட்டத்தில் உள்ள கஹிர்மாதா கடற்கரையில் இருக்கும் தங்கள் அடைகாக்கும் தளத்திற்கு மீண்டும் திரும்பியுள்ளன.
- ❖ இந்த இடமானது முட்டை இடுவதற்காக இந்த உயிரினங்களின் உலகின் மிகப்பெரிய முட்டையிடும் இடமாகக் கருதப்படுகின்றது.
- ❖ இந்தக் கூறானது "அரிபடா" (ஸ்பெயின் மொழி) என்று அழைக்கப்படுகின்றது.
- ❖ "அரிபடா" ஆனது முட்டைகள் இடுவதற்காக அடைகாக்கும் தளத்திற்கு ஒன்றாக வரும் மில்லியன் கணக்கிலான இந்தக் கடல்சார் இனங்களின் தனித்துவ இயற்கைப் பாரம்பரியத் தளம் என்பதைக் குறிப்பிடுகின்றது.
- ❖ ஆலீவ் ரிட்லி ஆமைகள் பொதுவாக 120 முதல் 150 முட்டைகளை இடும். இந்த முட்டைகளிலிருந்து 45 முதல் 50 நாட்களில் குஞ்சுகள் வெளிவரும்.

# மாநிலச் செய்திகள்

## Xcelerator பெங்களுரு

- ❖ கர்நாடக மாநில முதல்வரான எடியூரப்பா அவர்கள் சமீபத்தில் "Xcelerator பெங்களுரு" என்ற ஒரு முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளார்.
- ❖ "Xcelerator பெங்களுரு" முன்னெடுப்பானது மாநிலம் முழுவதும் உள்ள 50,000 பெண் தொழில்முனைவோர்கள், அடுத்த 3 ஆண்டுகளில் தங்களது வர்த்தகத்தை வளரச் செய்வதற்கு உதவ இருக்கின்றது.
- ❖ "Xcelerator பெங்களுரு" ஆனது பின்வருவனவற்றுடன் சேர்த்து கூட்டாக மேம்படுத்தப் பட்டுள்ளது,
  - ○ மிகப்பெரிய அளவிலான தொழில்முனைவிற்கான உலகளாவியக் கூட்டமைப்பு
  - ○ உபுந்து கூட்டமைப்பு (Ubuntu Consortium)
  - ○ கர்நாடக மாநில வர்த்தக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பு

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 2020 ஆம் ஆண்டு இப்ராஹிம் பரிசு

- ❖ நைஜரின் தற்போதைய அதிபரான மகமாடோவ் இசோஃபோவ் (Mahamadou Issoufou) அவர்கள் ஆப்பிரிக்கத் தலைமைத்துவத்தில் சாதனை பெற்றதற்காக 2020 ஆம்

ஆண்டிற்கான இப்ராஹிம் பரிசை வென்றுள்ளார்.

- இந்தப் பரிசானது 2006 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப் பட்டது. அது முதல் இப்பரிசை வென்ற 6வது வெற்றியாளர் இவராவார்.
- 69 வயதான இசோபோவ் அவர்கள் நைஜரில் இரண்டு முறை அதிபராகப் பதவி வகித்த பின்பு, 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அப்பதவியில் இருந்து வெளியேற உள்ளார்.
- இவர் முதன்முறையாக 2011 ஆம் ஆண்டில் அந்நாட்டின் அதிபராகப் பொறுப்பேற்றார். அதன் பிறகு 2016 ஆம் ஆண்டில் மீண்டும் அந்நாட்டின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

## WEF பட்டியலில் தீபிகா படுகோன்

- நடிகை தீபிகா படுகோன் அவர்கள் இளம் உலகத் தலைவர்களின் பட்டியலில் இடம் பிடித்துள்ளார்.
- இது உலகப் பொருளாதார மன்றத்தினால் (WEF - World Economic Forum) தொகுக்கப் பட்டது.
- மேலும் இந்தப் பட்டியலானது பல்வேறு இந்தியக் குடிமக்கள் மற்றும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்களையும் உள்ளடக்கியுள்ளது.
- இளம் உலகத் தலைவர்களின் மன்றமானது 2005 ஆம் ஆண்டில் WEF அமைப்பின் நிறுவனர் மற்றும் நிர்வாகத் தலைவரான க்ளாஸ் செச்வாப் அவர்களால் தொடங்கப் பட்டது.

## ஐக்கிய நாடுகளின் அயலகத் தணிக்கையாளர்களின் குழுவின் தலைவர் – கிரிஷ் சந்திர முர்மு

- இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளரான கிரிஷ் சந்திர முர்மு அவர்கள் 2021 ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாக ஐக்கிய நாடுகளின் அயலகத் தணிக்கையாளர்களின் குழுவின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- 1959 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது அயலகத் தணிக்கையாளர்களின் குழுவை ஏற்படுத்தியது.


*குறிப்பு*

- கிரிஷ் சந்திர முர்மு அவர்கள் ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம், 2019 என்ற சட்டத்தின் கீழ் ஜம்மு காஷ்மீர் உருவாக்கப்பட்ட பின்பு 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தின் முதலாவது துணைநிலை ஆளுநராகப் பொறுப்பேற்றார்.
- தற்பொழுது, இவர் பின்வரும் ஐக்கிய நாடுகள் நிறுவனங்களின் அயலகத் தணிக்கையாளராக உள்ளார்.
    - உலக சுகாதார அமைப்பு (2020-2023)
    - உணவு மற்றும் வேளாண் அமைப்பு (2020 – 2025)
    - நாடாளுமன்றங்களுக்கிடையேயான ஒன்றியம் (2020 – 2022)

# முக்கிய தினங்கள்

## உலக சிறுநீரக தினம் – மார்ச் 11

- உலக சிறுநீரக தினம் என்பது நமது சிறுநீரகங்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படும் ஒரு உலகளாவியப் பிரச்சாரம் ஆகும்.
- உலக சிறுநீரக தினமானது சர்வதேச சிறுநீரகவியல் சமூகம் மற்றும் சர்வதேச சிறுநீரகக் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஒரு கூட்டு முன்னெடுப்பாகும்.
- உலக சிறுநீரக தினமானது 2006 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Living Well with Kidney Disease” (சிறுநீரக நோயுடன் நன்கு வாழ்தல்) என்பதாகும்.




## CISF எழுச்சி தினம் – மார்ச் 10

- மத்தியத் தொழில் பாதுகாப்புப் படையின் எழுச்சி தினமானது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 10 அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினமானது நாட்டில் தொழிற்துறை நிறுவனங்களின் சிறந்த முறையிலான பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்டுள்ளது.
- CISF ஆனது நாடு முழுவதும் அமைந்துள்ள 300 தொழில் துறை அலகுகள், அரசுக் கட்டுமானத் திட்டங்கள் மற்றும் வசதிகள் மற்றும் அமைப்புகள் ஆகியவற்றிற்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக அறியப்படுகின்றது.
- CISF எழுச்சி தினமானது பொதுத் துறை நிறுவனங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக 2800 பணியாளர்களுடன் 1964 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- அதனைத் தொடர்ந்து, CISF ஆனது 1983 ஆம் ஆண்டு ஜுன் 15 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு சட்டத்தின் மூலம் இந்திய ஆயுதப் படையாக மாற்றப் பட்டது.

***CISF***

- CISF ஆனது நாட்டில் உள்ள 6 துணை இராணுவப் படைகளில் ஒன்றாகும்.
- இது இந்தியாவில் உள்ள ஒரு மத்திய ஆயுதக் காவல் துறையாகும்.
- இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- இதன் தலைமையகம் புது தில்லியில் அமைந்துள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 14**

# தேசியச் செய்திகள்

## பிபிசி விருதுகள்

- ❖ கேரளாவைச் சேர்ந்த நீளம் தாண்டும் வீரர் மற்றும் ஒலிம்பிக் வீரரான அஞ்சு பாபி ஜார்ஜ் அவர்கள் இந்தியாவில் சிறந்த தடகள வீரருக்கான பிபிசி வாழ்நாள் சாதனையாளர் விருதினை வென்றுள்ளார்.
- ❖ அஞ்சு பாபி ஜார்ஜ் அவர்கள் கேரளாவின் கோட்டயத்தில் உள்ள சங்கனாச்சேரியைப் பூர்வீகமாகக் கொண்டவராவார்.
- ❖ இவர் பாரீஸில் 2003 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகத் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் நீளம் தாண்டுதலில் 6.70 மீட்டரைத் தாண்டி வெள்ளிப் பதக்கத்தை வென்று உள்ளார்.
- ❖ உலகத் தடகள சாம்பியன்ஷிப்பில் ஒரு பதக்கத்தை வென்ற முதலாவது இந்தியத் தடகள வீரர் இவராவார்.
- ❖ செஸ் சாம்பியன் கிராண்ட் மாஸ்டரான கோனேரு ஹம்பி அவர்கள் 2021 ஆம் ஆண்டிற்கான பிபிசி இந்திய விளையாட்டு வீரர் என்ற விருதினை வென்றுள்ளார்.
- ❖ துப்பாக்கி சுடும் வீரரான மானு பேக்கர் அவர்கள் பிபிசியின் இந்த ஆண்டிற்கான வளர்ந்து வரும் வீரர் என்ற விருதினை வென்றுள்ளார்.
- ❖ 2020 ஆம் ஆண்டில் பிபிசியானது கேரளாவைச் சேர்ந்த ஒலிம்பிக் வீராங்கனையான பி.டி. உஷாவிற்கு வாழ்நாள் சாதனையாளர் விருதினை வழங்கி கௌரவித்தது.

## ஐஎன்எஸ் கரன்ஞ்



- ❖ இந்தியக் கடற்படையின் ரேடாரில் புலப்படாமல் மறையவல்ல தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள ஸ்கார்பீன் வகையைச் சேர்ந்த மூன்றாவது நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன்எஸ் கரன்ஞ் என்ற கப்பலானது மும்பையில் பணியில் சேர்க்கப்பட்டது.
- ❖ இது கடலின் மேற்பரப்பில் அல்லது கடலுக்கடியில் எந்தவோர் அச்சுறுத்தலையும் சமாளிப்பதற்கான திறனுள்ள ஆயுதங்கள் மற்றும் உணர்விகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- ❖ 6 ஸ்கார்பீன் வகுப்பைச் சேர்ந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் பிரான்சு நாட்டு நிறுவனமான

'Direction des Constructions Navales' என்ற நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் மும்பையில் உள்ள மசகான் கப்பல் கட்டும் நிறுவனத்தினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

- ஐஎன்எஸ் கரன்ஞ் ஆனது இந்தியக் கடற்படையில் சேர்க்கப்பட்டுள்ள மூன்றாவது கல்வாரி வகுப்பைச் சேர்ந்த நீர்மூழ்கிக் கப்பலாகும்.
- 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பணியில் சேர்க்கப்பட்டுள்ள ஸ்கார்பீன் வகுப்பைச் சேர்ந்த முதலாவது நீர்மூழ்கிக் கப்பல் ஐஎன்எஸ் கல்வாரி ஆகும்.
- அதனைத் தொடர்ந்து ஐஎன்எஸ் கந்தேரி ஆனது 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பணியில் சேர்க்கப்பட்டுள்ளது.
- ஐஎன்எஸ் கல்வாரி மற்றும் ஐஎன்எஸ் கந்தேரி ஆகிய இரண்டும் தற்பொழுது பணிச் சேவையில் உள்ளன.
- இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ள மீதமுள்ள அனைத்து நீர்மூழ்கிக் கப்பல்களும் 2022-23 ஆம் ஆண்டிற்குள் கட்டப்பட்டு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- ஐஎன்எஸ் வேலா மற்றும் ஐஎன்எஸ் வாகிர் ஆகியவை தற்பொழுது கடற்பணிச் சோதனையில் உள்ளன.
- ஐஎன்எஸ் வாக்சீர் ஆனது தற்பொழுது கட்டமைக்கப்பட்டு வருகின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## ஆஸ்டர் எக்ஸ் – இராணுவப் பயிற்சி

- பிரான்சு ஆனது விண்வெளியில் முதலாவது இராணுவப் பயிற்சியை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.
- இது தனது செயற்கைக்கோள்கள் மற்றும் இதரப் பாதுகாப்பு உபகரணங்களைத் தாக்குதல்களிலிருந்து தற்காத்துக் கொள்வதற்காகத் தனது திறனை மதிப்பிடுவதற்கு வேண்டி அந்நாட்டிற்கு உதவ இருக்கின்றது.
- இந்தப் பயிற்சிக்கு "ஆஸ்டர்எக்ஸ்" என்று குறியீட்டுப் பெயர் இடப்பட்டுள்ளது.
- இதில் ஜெர்மனியின் விண்வெளிப் படை மற்றும் அமெரிக்காவின் விண்வெளிப் படை ஆகிய இரண்டும் கலந்து கொள்கின்றன.
- அமெரிக்கா மற்றும் சீனாவிற்குப் பிறகு உலகில் மூன்றாவது விண்வெளி வல்லரசு நாடாக பிரான்சு விரும்புகின்றது.

## டிஜிட்டல் கட்டண மதிப்பீட்டு அட்டை

- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது டிஜிட்டல் கட்டண மதிப்பீட்டு அட்டையின் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில், ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவானது (SBI) தொடர்ந்து 3 மாதங்களாக முதலிடத்தில் உள்ளது.
- இந்த மதிப்பீட்டு அட்டையானது பல்வேறு டிஜிட்டல் கூறுகள் குறித்த வணிக வங்கிகளின் செயல்பாடுகளைக் கண்காணிக்கின்றது.
- SBI ஆனது 640 மில்லியன் மதிப்பிலான அதிக அளவிலான யுபிஐ பாரிமாற்றத்தைப் பதிவு செய்ததன் மூலம் முன்னணியில் உள்ள பணம் அனுப்பும் வங்கியாக தொடர்ந்து திகழ்கின்றது.

- பற்று அட்டைகளை அதிக அளவில் வழங்கிய வங்கிகளில் SBI வங்கியும் ஒன்றாகும்.

### அர்ஜுனா சஹாயக் நீர்ப்பாசனத் திட்டம்

- அர்ஜுனா சஹாயக் நீர்ப்பாசனத் திட்டமானது உத்தரப் பிரதேசத்தில் தொடங்கப்பட உள்ளது.
- இந்தத் திட்டமானது பிரதமரால் தொடங்கி வைக்கப்படவுள்ளது.
- இந்த நீர்ப்பாசனத் திட்டமானது விவசாயிகளுக்கு நேர்மறை மாற்றங்களைக் கொண்டு வர உள்ளது.
- இது தசான் நதியின் மீது கட்டப்பட்டு வருகின்றது.
- இந்தத் திட்டமானது உத்தரப் பிரதேசத்தில் உள்ள பாண்டா, மஹோபா மற்றும் ஹமீர்பூர் ஆகிய பகுதிகளின் 168 கிராமங்களில் உள்ள 1.5 இலட்சம் விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதியை அளிக்க இருக்கின்றது.
- இந்தத் திட்டம் நிறைவு செய்யப்பட்ட பின்பு, ஏறத்தாழ 4 இலட்சம் மக்கள் தூய்மையான குடிநீரைப் பெற உள்ளனர்.
- இந்தத் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசன வசதியானது 15,000 ஹெக்டேர் நிலப் பகுதிக்கு வழங்கப்பட உள்ளது.

### தேசிய இரயில் திட்டம்

- தேசிய இரயில் திட்டமானது 2030 ஆம் ஆண்டில் எதிர்காலத் தயார்நிலை இரயில்வே அமைப்பை ஏற்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது.
- மத்திய இரயில்வே துறை அமைச்சர் அவர்கள் தேசிய இரயில் திட்டமானது செயல்பாட்டுத் திறன்கள் மற்றும் வணிகக் கொள்கை முன்னெடுப்புகள் ஆகிய இரண்டின் அடிப்படையில் உத்திகளை வடிவமைக்கும் நோக்கத்தில் தயாரிக்கப் பட்டு உள்ளதாக அறிவித்துள்ளார்.
- மேலும் இந்தத் திட்டமானது நாட்டில் உள்ள தேவையை முன்னிட்டுத் திறனை உருவாக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.
- மேலும் இது 2050 ஆம் ஆண்டு வரை எதிர்கால வளர்ச்சித் தேவையைப் பூர்த்தி செய்யும்.
- மேலும் இது சரக்குப் போக்குவரத்தில் இரயில்வேயின் முதன்மையான பங்கை 45% பங்கு என்ற அளவிற்கு அதிகரிக்க எண்ணுகின்றது.

## பொருளாதாரச் செய்திகள்

### ஐடிபிஐ வங்கி மீதான உடனடி சரிபார்ப்பு நடவடிக்கை (PCA) கட்டுப்பாடுகள் நீக்கம் – RBI

- இந்திய ரிசர்வ் வங்கியானது RBI தனது மேம்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை மேற்பார்வை அல்லது PCA கட்டமைப்பிலிருந்து ஐடிபிஐ வங்கியை நீக்கியுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியுடன் முடிவுடையும் காலாண்டிற்கான வெளியிடப் பட்டுள்ள முடிவுகளின்படி, இந்த வங்கியானது ஒழுங்குமுறை மூலதனம், நிகர வாராக் கடன், அந்நிய கடன் விகிதம் குறித்த PCA கூறுகளை மீறவில்லை.
- ஐடிபிஐ ஆனது வலுவற்ற நிதி நெருக்கடியின் காரணமாக 2017 ஆம் ஆண்டு மே

மாதத்தில் PCA கட்டமைப்பின் கீழ் வைக்கப்பட்டது.

- PCA என்பது வலுவற்ற நிதித் தன்மை மற்றும் சரியாக மேலாண்மை செய்யப்படாத வங்கிகள் ஆகியவை RBI வங்கியின் கீழ் கண்காணிப்பில் வைக்கப்படும் ஒரு கட்டமைப்பாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட கடற்கணை – சய்னியா

- உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட "மேம்படுத்தப்பட்ட இலகுரக கடற்கணை - சய்னியா" என்பதின் (Advanced Light Torpedo (TAL) Shyena) முதலாவது சோதனையானது வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது.
- இது இந்தியக் கடற்படையில் இலியுஷின் I1-38 (Ilyushin Il-38) என்ற ரோந்து விமானத்திலிருந்துச் செலுத்தப் பட்டது.
- TAL – சய்னியா என்பது கடல்சார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வகத்தினால் (NSTL - Naval Science and Technological Laboratory) மேம்படுத்தப்பட்ட ஒரு நீர்மூழ்கி எதிர்ப்புக் கடற்கணையாகும்.
- NSTL என்பது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் ஒரு ஆய்வகம் ஆகும்.
- இந்தியாவில் இதுபோன்ற ஒரு சோதனை நடத்தப்படுவது இதுவே முதன்முறையாகும்.
- TAL சய்னியா ஆனது பொருத்தப்பட்ட இலகுரக விமானத்திலிருந்துச் செலுத்தப்பட்டது.

# மாநிலச் செய்திகள்

## காடுகளின் மூலம் நலமாக்கும் முதலாவது மையம்

- நாட்டில் காடுகளின் மூலம் நலமாக்கும் முதலாவது மையமானது உத்தரகாண்டின் கலிக்காவில் உள்ள ராணிகேட்டிற்கு அருகில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.
- காடுகளின் மூலம் நலமாக்கும் மையமானது உத்தரகாண்ட் மாநில வனத் துறையின் ஆராய்ச்சிப் பிரிவினால் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த மையமானது காடுகளின் நடைபயணம், மரங்களைக் கட்டித் தழுவுதல், காடுகளில் தியானம் மற்றும் வான் பரப்பைக் கூர்ந்து நோக்கல் போன்ற பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபட உள்ளது.

## காஷ்மீரில் முதல் பால் ஏடிஎம்

- பால் தானியங்கி வழங்கு மையம் (ஏடிஎம்) ஆனது உள்ளூர் வணிகர் ஒருவரால் தெற்குக் காஷ்மீரில் உள்ள புல்வாமா நகரில் பொருத்தப் பட்டுள்ளது.
- இது கால்நடை வளர்ப்புத் துறையின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.
- அரசானது ஒருங்கிணைந்த பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இயந்திரத்தை அமைப்பதற்காக உள்ளூர்த் தொழில்முனைவோருக்கு உதவியுள்ளது.
- இந்த இயந்திரமானது எந்தவொரு பண ஏடிஎம் இயந்திரத்தைப் போல் மக்கள் தங்களது விருப்பப்படி பாலைப் பெறுவதற்கு நகரில் உள்ள மக்களுக்கு உதவ இருக்கின்றது.


# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## உலகளாவிய பெண்கள் சிறப்புமிகு விருது

- தெலுங்கானா மாநில ஆளுநரான டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் அவர்களுக்கு, 'முன்னிலையில் உள்ள 20 உலகளாவியப் பெண்கள் சிறப்புமிகு விருது 2021' (9வது பதிப்பு) ஆனது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- இது அமெரிக்காவில் உள்ள இலினாய்ஸ் மாகாணத்திலிருந்து காணொலி முறையில் வழங்கப் பட்டுள்ளது.
- அமெரிக்காவின் துணை அதிபரான கமலா ஹாரிஸ் அவர்களும் இந்த விருதைப் பெறுபவர்களில் ஒருவராவார்.

## ஆங்கிலத்தில் எல்லைக் காந்தியின் சுயசரிதை

- விடுதலைப் போராட்ட வீரரான கான் அப்துல் கபார் கானின் சுயசரிதையானது 1983 ஆம் ஆண்டில் பஷ்தோ மொழியில் முதன்முதலில் வெளியிடப்பட்டது.
- இது தற்பொழுது பாகிஸ்தானின் முன்னாள் குடிமைப் பணி அதிகாரி மற்றும் எழுத்தாளரான இமிதியாஸ் அகமது சஹிபசாடா என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளது.
- இது "எல்லைக் காந்தி : என்னுடைய வாழ்க்கை மற்றும் போராட்டம்" என்று தலைப்பிடப் பட்டுள்ளது.
- ஆங்கிலத்தில் கான் அப்துல் கபார் கானின் சுயசரிதை கிடைப்பது இதுவே முதல்முறையாகும்.
- கான் அப்துல் கபார் கான் அவர்கள் பாட்சா கான் அல்லது பாதுஷா கான் என்று அழைக்கப் படுகின்றார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 15**

# TNPSC துளிகள்

- ஐரோப்பிய நாடாளுமன்றமானது "ஐரோப்பிய ஒன்றியம்" முழுவதையும் "எல்ஜிபிடிஐக்யூ சுதந்திர மண்டலமாக" (LGBTIQ) அறிவித்துள்ளது.
- திரிவேந்திர சிங் ராவத் அவர்கள் உத்தரகாண்ட் மாநிலத்தின் முதல்வர் பதவியிலிருந்து விலகி உள்ளார்.
  - திராத் சிங் ராவத் அவர்கள் உத்தரகாண்ட் மாநிலத்தின் புதிய முதல்வராகப் பதவியேற்றுக் கொண்டார்.
- மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சகமானது 'மேரா ரேசன்' என்ற ஒரு கைபேசி செயலியைத் தொடங்கியுள்ளது
  - இது வாழ்வாதாரத்தைத் தேடி புதிய இடங்களுக்குச் சென்றுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்குப் பயனளிக்க உள்ளது.

# தேசியச் செய்திகள்

## இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) இடஒதுக்கீடு

- OBC வகுப்பினருக்கான இடஒதுக்கீடானது பட்டியல் இனத்தவர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கு (ST) என்று அரசியலமைப்பு மூலமாக வழங்கப் பட்ட இடஒதுக்கீட்டைப் போல் அல்லாமல், சட்டப்பூர்வமாக மட்டுமே இருக்கும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.
- மேலும் இது தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளில் SC/ST/OBC பிரிவினரில் 50% இடங்கள் முழுவதையும் SC மற்றும் ST பிரிவினருக்கு ஒதுக்கப்பட்டால்/எடுத்துக் கொண்டால் OBC பிரிவினருக்கு மேலும் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற கேள்வி எதுவும் எழாது என்றும் கூறியுள்ளது.
- OBC பிரிவினர்களுக்கான இடஒதுக்கீட்டு அளவானது குறிப்பிடப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு மட்டுமே அளிக்கப்பட வேண்டும்.
- ஒரு மாநிலத்திற்குள், உள்ளாட்சி அமைப்புகளில் பிற்படுத்தப்பட்டவர்களின் நிலை மற்றும் அவர்களின் தாக்கங்கள் குறித்து ஒரு விரிவான ஆய்வினை மேற்கொள்ளச் செய்வதற்காக ஒரு பிரத்தியேக ஆணையம் ஒன்றை அமைக்க வேண்டும்.
- ஒதுக்கப்பட்டுள்ள அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவையான இடஒதுக்கீட்டு விகிதமானது அந்த ஆணையத்தின் பரிந்துரைகளின் படி குறிப்பிடப்படும்.

## 12 பொதுத்துறை நிறுவனங்கள் (PSU) – தனியார்மயமாக்கம்

- நிதி ஆயோக்கானது தனியார்மயமாக்கம் செய்யப்பட வேண்டிய PSU நிறுவனங்கள் குறித்த தனது முதலாவது பட்டியலைச் சமர்ப்பித்துள்ளது.
- இந்தப் பட்டியலானது முதலீடு மற்றும் பொதுச் சொத்துகள் மேலாண்மைத் துறை (DIPAM - Department of Investment and Public Asset Management) மற்றும் முதலீட்டு விலக்கல் குறித்த செயலாளர்களின் முக்கியக் குழு (Core Group of Secretaries on Divestment) ஆகியவற்றால் ஆய்வு செய்யப்பட உள்ளது.
- முதலீட்டு விலக்கல் குறித்த செயலாளர்களின் முக்கியக் குழுவானது அமைச்சரவைச்

செயலாளரினால் தலைமை தாங்கப்படும்

# சர்வதேசச் செய்திகள்

## NDC தொகுப்பு அறிக்கை

- காலநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு ஒப்பந்தமானது (UNFCCC - United Nations Framework Convention on Climate Change) தனது முதலாவது தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் தொகுப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளது (NDC - Nationally Determined Contributions).
- ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை மட்டுமே தங்களது பசுமை இல்ல வாயுக் குறைப்பு இலக்குகளை அதிக அளவில் உயர்த்தியுள்ள உலகின் மிகப்பெரிய 18 வெளியீட்டாளர்களில் இடம்பெற்ற பிராந்தியங்களாகும்.
- NDC ஆனது பாரீஸ் ஒப்பந்தத்தின் ஒரு மையக் கருவாகும், மேலும் இது பாரீஸ் ஒப்பந்தத்தின் நீண்ட கால இலக்குகளின் மீதான ஒரு சாதனையாகும்.
- NDC என்பது தேசிய அளவில் உமிழ்வுகளைக் குறைக்கவும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை ஏற்றுக் கொள்ளவும் ஒவ்வொரு நாட்டினாலும் ஏற்படுத்தப்பட்ட ஒரு முயற்சி ஆகும்.

## 5வது வருடாந்திர மக்களாட்சி அறிக்கை

- "Autocratisation goes viral'" என்ற தலைப்பு கொண்ட 5வது வருடாந்திர மக்களாட்சி அறிக்கையானது சுவீடனின் 'Varieties of Democracy (V-Dem)' எனும் ஒரு அமைப்பால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது முந்தைய பத்தாண்டுகளில் நிகழ்ந்த வளர்ச்சியின் பின்னணிக்கு எதிராக உலகின் மக்களாட்சியின் நிலை குறித்து விவரிக்கின்றது.
- இந்தியாவின் நிலையானது "உலகின் மிகப்பெரிய மக்களாட்சி" என்ற நிலையிலிருந்து "தேர்ந்தெடுக்கப்பட்ட ஏகாதிபத்தியம்" என்ற நிலைக்கு தரம் குறைக்கப்பட்டுள்ளது.

**TOP-10 AUTOCRATIZING COUNTRIES, 2010–2020**

| | | CHANGE | LDI 2010 | LDI 2020 | REGIME TYPE 2010 | REGIME TYPE 2020 |
|---|---|---|---|---|---|---|
| 1 | Poland | −0.34 | 0.83 | 0.49 | Liberal Democracy | Electoral Democracy |
| 2 | Hungary | −0.32 | 0.68 | 0.37 | Electoral Democracy | Electoral Autocracy |
| 3 | Turkey | −0.29 | 0.40 | 0.11 | Electoral Democracy | Electoral Autocracy |
| 4 | Brazil | −0.28 | 0.79 | 0.51 | Electoral Democracy | Electoral Democracy |
| 5 | Serbia | −0.27 | 0.51 | 0.24 | Electoral Democracy | Electoral Autocracy |
| 6 | Benin | −0.26 | 0.55 | 0.29 | Electoral Democracy | Electoral Autocracy |
| 7 | India | −0.23 | 0.57 | 0.34 | Electoral Democracy | Electoral Autocracy |
| 8 | Mauritius | −0.23 | 0.73 | 0.50 | Liberal Democracy | Electoral Democracy |
| 9 | Bolivia | −0.18 | 0.41 | 0.231 | Electoral Democracy | Electoral Autocracy |
| 10 | Thailand | −0.17 | 0.34 | 0.17 | Electoral Autocracy | Closed Autocracy |

# பொருளாதாரச் செய்திகள்

## B2C மின் – வணிகக் குறியீடு 2021

- ஐக்கிய நாடுகள் வர்த்தக மற்றும் மேம்பாட்டுக் கருத்தரங்கின் B2C மின் – வணிகக்

குறியீடானது இணைய வழி ரீதியிலான வர்த்தகத்திற்கு ஆதரவளிக்கும் விதமாக பொருளாதாரத்தின் தயார் நிலையை அளவிடுகின்றது.

- இந்தக் குறியீட்டில் சுவிட்சர்லாந்து முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தக் குறியீட்டில் இந்தியாவானது 71வது இடத்தில் தர வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

**Top 10 economies in the UNCTAD B2C E-commerce Index 2020**

| 2020 Rank | Economy | Share of individuals using the Internet (2019 or latest) | Share of individuals with an account (15+, 2017) | Secure Internet servers (normalized, 2019) | UPU postal reliability score (2019 or latest) | 2020 Index value) | Index value change (2018-19 data) | Rank 2019 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Switzerland | 97 | 98 | 92 | 97 | 95.9 | 0.6 | 2 |
| 2 | Netherlands | 96 | 100 | 94 | 93 | 95.8 | 0.1 | 1 |
| 3 | Denmark | 97 | 100 | 100 | 81 | 94.5 | 0.1 | 6 |
| 4 | Singapore | 89 | 98 | 94 | 97 | 94.4 | -0.3 | 3 |
| 5 | United Kingdom | 96 | 96 | 84 | 98 | 93.6 | 0.1 | 4 |
| 6 | Germany | 93 | 99 | 90 | 91 | 93.4 | -0.1 | 9 |
| 7 | Finland | 95 | 100 | 88 | 91 | 93.4 | -0.1 | 5 |
| 8 | Ireland | 88 | 95 | 92 | 98 | 93.4 | 0.7 | 7 |
| 9 | Norway | 98 | 100 | 84 | 88 | 92.6 | -0.1 | 8 |
| 10 | China, Hong Kong SAR | 92 | 95 | 88 | 92 | 91.8 | 0.3 | 14 |

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஃபுகாகு அதிவேகக் கணினி

- ரிக்கென் எனப்படும் ஜப்பான் அறிவியல் ஆராய்ச்சி மையம் மற்றும் ஃபுஜிட்சு நிறுவனம் ஆகியவை இணைந்து 6 ஆண்டுகளுக்கு முன்பு இதனை மேம்படுத்தத் தொடங்கியது.
- இது உலகின் மிகவும் திறன் வாய்ந்த ஒரு அதிவேகக் கணினியாகும்.
- ஃபுகாகு ஆனது ஃபுஜி மலையின் நினைவாகப் பெயரிடப்பட்டுள்ளது.
- இந்த அதிவேகக் கணினியானது ஜப்பானின் கணினிக் கட்டமைப்பின் முக்கியச் சாதனத்தை உருவாக்கும் நோக்கத்துடன் மேம்படுத்தப் பட்டுள்ளது.


## பழுப்பு நிற நிலக்கரியிலிருந்து ஹைட்ரஜன்

- ஜப்பான் – ஆஸ்திரேலியக் கூட்டு நிறுவனமானது பழுப்பு நிற நிலக்கரியிலிருந்து ஹைட்ரஜனை உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது நீர்ம ஹைட்ரஜனை வணிக முறையில் உற்பத்தி செய்ய முடியும் என்பதையும் அவை பாதுகாப்பாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட முடியும் என்பதையும் காட்டுகின்றது.
- நீர்ம ஹைட்ரஜனுக்காக வேண்டி முதலாவதான ஒரு சர்வதேச விநியோகச் சங்கிலியை உருவாக்குவதே இதன் ஆரம்ப காலத் திட்டமாகும்.
- பழுப்பு நிலக்கரியானது அதன் குறைந்த ஆற்றல் கூறின் காரணமாக குறைந்த தரம் கொண்ட நிலக்கரியாகக் கருதப்படுகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## விண்வெளி ஹரிக்கேன் (புயல்)

- வட துருவத்திற்கு மேலே அதிக உயரத்தில் விண்வெளி ஹரிக்கேன் இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் உறுதி செய்துள்ளனர்.
- சீனாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் முதன்முறையாக இதனைக் கண்டுபிடித்து உள்ளனர்.
- இதற்கு முன்பு, விண்வெளி ஹரிக்கேன்கள் என்பது ஒரு கோட்பாட்டு அளவிலேயே இருந்ததாக நம்பப் பட்டது.
- விண்வெளி ஹரிக்கேன் என்பது காற்று மற்றும் மழைக்குப் பதிலாக எலக்ட்ரான் மற்றும் பிளாஸ்மா ஆகியவை பெருமளவில் புயலினை ஏற்படுத்தும் ஒரு சுற்றுச்சூழல் நிகழ்வாகும்.




# மாநிலச் செய்திகள்

## முத்திரைத் தீர்வையில் 1% சலுகை

- 2021 – 22 ஆம் ஆண்டிற்கான மகாராஷ்டிராவின் நிதிநிலை அறிக்கையானது, பெண்கள் அல்லது பெண்களின் பெயரில் சொத்து மாற்றப்பட்டால் அதற்காக முத்திரைத் தீர்வையில் 1% சலுகையை வழங்குகின்றது.
- ஒரு கூட்டு உரிமையாளராக இருக்கும் பட்சத்தில், ஒரு பெண்ணுடன் ஒரு ஆண் கூட்டு உரிமையாளராக இருந்தால் அதற்கு முத்திரைத் தீர்வையில் சலுகையானது வழங்கப்பட மாட்டாது, அதாவது இருவரும் பெண்களாக இருத்தல் வேண்டும்.

## உலகின் முதலாவது திறன் மையம்

- உலகின் முதலாவது திறன் மையமானது புவனேஸ்வரில் தொடங்கி வைக்கப் பட்டு உள்ளது.
- இந்த உலகத் திறன் மையமானது சிங்கப்பூரில் உள்ள ஐடிஇ எனும் கல்விச் சேவை மையத்தை ஒரு அறிவுப் பங்காளராகச் சேர்த்து, ஆசிய வளர்ச்சி வங்கியினால்

ஆதரிக்கப்படும் ஒடிசா திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொடங்கப் பட்டுள்ளது.

- உலகத் திறன் மையமானது தொழிற்சாலைகளின் வேலைவாய்ப்புத் தேவைகளுக்காக தொழிற்சாலைகளுக்கான பணி வழங்கும் இடம் மற்றும் தொழிற்துறைப் பங்காளருக்கான மையமாகச் செயல்பட உள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## கிங் பூமிபால் உலக மண் தின 2020 ஆம் ஆண்டு விருது

- போபாலில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி ஆணையத்தின் (ICAR - India Council of Agricultural Research) இந்திய மண் அறிவியல் நிறுவனத்திற்குப் புகழ்பெற்ற கிங் பூமிபால் உலக மண் தின 2020 ஆம் ஆண்டு விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதானது ரோம் நகரில் உள்ள உணவு மற்றும் வேளாண் அமைப்பினால் வழங்கப் பட்டுள்ளது.
- புகழ்பெற்ற இந்த உலகளாவிய விருதானது வளமான மண்ணின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்திய தனது பொறுப்புமிக்க தன்மைக்காக ICAR நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## 10,000 சர்வதேச ரன்கள்

- சர்வதேசக் கிரிக்கெட்டில் அனைத்து வகையான ஆட்டங்களிலும் 10,000 ரன்களைக் கடந்த முதலாவது இந்தியப் பெண் கிரிக்கெட் வீரர் மிதாலி ராஜ் ஆவார்.
- இவர் லக்னோவில் இந்தியா மற்றும் தென் ஆப்பிரிக்காவிற்கு இடையே நடைபெற்ற மூன்றவாது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் போது இச்சாதனையை நிகழ்த்தினார்.
- இச்சாதனையை நிகழ்த்திய இரண்டாவது பெண் கிரிக்கெட் வீராங்கனை மிதாலி ராஜ் ஆவார்.
- இச்சாதனையை நிகழ்த்திய முதலாவது பெண் கிரிக்கெட் வீராங்கனை இங்கிலாந்தைச் சேர்ந்த சாரலேட் எட்வர்ட்ஸ் (Charlotte Edwards) என்பவராவார்.

# முக்கிய தினங்கள்

## உலக கண்விழி விறைப்பு நோய் வாரம் 2021

- உலகளவில் பார்வையற்ற தன்மைக்கு இரண்டாவது முக்கியக் காரணமாகக் கண்விழி விறைப்பு நோய் (Glaucoma) உள்ளது.
- உலக கண்விழி விறைப்பு நோய் வாரமானது உலக கண்விழி விறைப்பு நோய்க் கட்டமைப்பு மற்றும் உலக கண்விழி விறைப்பு நோய் நோயாளிகள் அமைப்பு ஆகியவற்றின் ஒரு கூட்டு முன்னெடுப்பாகும்.
- இந்த வாரத்தின் முக்கிய நோக்கம் கண்விழி விறைப்பு நோயை ஆரம்ப காலத்திலேயே கண்டறிவதற்காக வேண்டி தொடர் கண் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக அனைவரையும் வற்புறுத்துவதாகும்.
- உலக கண்விழி விறைப்பு நோய் தினமானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 12 அன்று அனுசரிக்கப் படுகின்றது.

- கண்விழி விறைப்பு நோய் என்பது மீளாத வகையிலான பார்வையற்றத் தன்மைக்குக் காரணமான நோய்களில் ஒன்றாகும்.
- ஆனால் ஆரம்பத்திலேயே இதற்கு சிகிச்சை அளிக்கப்பட்டால், குறைபாடானது குறைக்கப்பட்டு, பார்வையானது பாதுகாக்கப்படும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 16**

# TNPSC துளிகள்

- சுவாமி சித்பவானந்தா எழுதிய 'பகவத் கீதை' நூலின் கிண்டில் பதிப்பை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் வெளியிட்டுள்ளார்.
    - சுவாமி சித்பவானந்தாஜி என்பவர் தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளியில் உள்ள திருப்பரைத்துரை என்ற இடத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணா தபோவனம் ஆசிரமத்தை நிறுவியவர் ஆவார்.
- ஈக்வடாரின் சங்காய் எரிமலையானது சமீபத்தில் வெடித்துச் சிதறியது.
- பொருளாதார மற்றும் வர்த்தகப் பிரச்சினைகள் குறித்த பிரிக்ஸ் தொடர்பு குழுவின் தலைவர்கள் இந்தியாவின் தலைமையின் கீழ் தங்கள் முதல் சந்திப்பை மேற்கொண்டு உள்ளனர்.
    - இந்த ஆண்டிற்கான பிரிக்ஸின் கருத்துரு "BRICS@15: Intra BRICS Cooperation for Continuity, Consolidation, and Consensus" என்பதாகும்.
- சாலைகளில் உள்ள அனைத்து மதக் கட்டுமானங்களையும் அகற்ற உத்தரப் பிரதேச அரசு உத்தரவிட்டுள்ளது.
- ஜார்க்கண்ட் அமைச்சரவையானது தனியார் துறையில் 75 சதவீத வேலைகளை உள்ளூர் மக்களுக்கு ஒதுக்கும் ஒரு வேலைவாய்ப்புக் கொள்கைக்கு ஒப்புதல் அளித்து உள்ளது.
    - ஜார்க்கண்டிற்கு முன்பு, ஹரியானா மாநில அரசாங்கமும் இதே போன்ற ஒரு கொள்கைக்கு ஒப்புதல் அளித்திருந்தது.

# தமிழ்நாடு செய்திகள்

## கௌசல்யா சங்கர்

- அமெரிக்கத் தூதரகமானது தமிழ்நாட்டைச் சேர்ந்த சாதி எதிர்ப்பு ஆர்வலரும் மனித உரிமைப் பாதுகாவலருமான கௌசல்யா சங்கருக்கு சர்வதேச துணிச்சலான பெண்மணிக்கான விருதை வழங்கி கௌரவித்தது.
- கௌசல்யா அவர்கள் 2021 ஆம் ஆண்டிற்கான அமெரிக்க உள்துறையின் சர்வதேச துணிச்சலான பெண்மணிக்கான விருதிற்கு அமெரிக்காவின் இந்தியத் தூதரகத்தால் பரிந்துரைக்கப்பட்டவர் ஆவார்.

# தேசியச் செய்திகள்

## 4வது உலகளாவிய ஆயுர்வேத விழா 2021

- இது ஆயுர்வேதத்தை ஒரு உலகளாவிய சிகிச்சைத் திட்டமாக காண்பிக்கிறது.
- இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பானது இதற்கான திருவிழா மற்றும் தொழில்துறைப் பங்காளியாகும்.
- சர்வதேச ஆயுர்வேத கருத்தரங்கானது "Strengthening Host Defence System – Ayurveda A Potential Promise" என்ற கருத்துருவின் கீழ் ஏற்பாடு செய்யப்படும்.
- "Globalizing Ayurveda – Scope, Challenges and Solutions" என்ற கருத்துருவின் கீழ் சர்வதேச

பிரதிநிதிகள் சபை ஏற்பாடு செய்யப்படும்.

- உலகளாவிய வணிகச் சந்திப்பானது "Global Ayurveda Pharmacy – Practices, Possibilities and Policies" என்ற கருத்துருவின் கீழ் ஏற்பாடு செய்யப்படும்.

## சாகித்ய அகாடமி விருது 2020

- சாகித்ய அகாடமி "2020 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி விருது" வென்ற நபர்களின் பெயர்களை அறிவித்துள்ளது.
- இந்த விருது இலக்கியப் பின்னணியில் மிகச் சிறந்த புத்தகங்களுக்கு வழங்கப் படுகிறது.
- 24 முதன்மை இந்திய மொழிகளில் ஏதேனும் ஒரு மொழியில் வெளியிடப்பட்ட இலக்கியப் படைப்புகளுக்கு இது வழங்கப் படுகிறது.
- ஆங்கிலம், இந்தி மற்றும் அரசியலமைப்பின் எட்டாவது பட்டியலில் இருக்கும் 22 மொழிகளும் இதில் அடங்கும்.
- ஆங்கிலத்தில் "When God is a Traveller" என்ற கவிதைத் தொகுப்பிற்காக சுப்பிரமணியம் அவர்கள் இந்த விருதை வென்றுள்ளார்.
- கன்னட மொழியில் "ஸ்ரீ பாஹுபலி அஹிம்சா திக்விஜயம்" என்ற காவியக் கவிதைக்கு வேண்டி வீரப்ப மொய்லி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- தமிழ் எழுத்தாளர் இமயம் தனது 'செல்லாத பணம்' என்ற புதினத்திற்காக 2020 ஆம் ஆண்டின் சாகித்ய அகாடமி விருதை வென்றுள்ளார்.
- அவர் தன்னை திராவிட இயக்கத்தின் எழுத்தாளர் என்று அழைத்துக் கொள்கிறார்.
- இந்த விருதை வென்ற தமிழ்நாட்டின் 'நடு நாடு' எனப்படும் கடலூர், விழுப்புரம் மற்றும் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் இருந்து வந்த முதல் எழுத்தாளர் இவராவார்.

# சர்வதேசச் செய்திகள்

## சீனாவின் புதிய ஐந்தாண்டு திட்டம்

- சீனா தனது 14வது ஐந்தாண்டு திட்டத்தின் (2021-2025) சுருக்கத்தை முறையாக அங்கீகரித்துள்ளது.
- திபெத்தின் யர்லங் ஜாங்போ (Yarlung Zangbo) அல்லது பிரம்மபுத்ராவின் கீழ் பகுதிகளில் முதல் அணையை அமைப்பதும் மற்றும் இந்திய எல்லைக்கு அருகில் சிச்சுவான்-திபெத் ஆகியவற்றுக்கு இடையில் ஒரு இரயில் பாதையை அமைப்பதும் இதில் அடங்கும்.
- இது விரிவான பட்டை மற்றும் சாலை என்ற முன்னெடுப்பின் ஓர் அங்கமாக துருவப் பட்டுச் சாலையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## தலைமை நிர்வாக அதிகாரிகளின் உலகளாவிய ஆய்வு

- இந்த கண்டுபிடிப்புகள் முன்னணி ஆலோசனை நிறுவனமான 'PwC' என்பதின் (PricewaterhouseCoopers) 24வது ஆண்டிற்கான உலகளாவிய தலைமை நிர்வாக அதிகாரி கணக்கெடுப்பின் ஒரு பகுதியாகும்.

- இதில் ஐந்தாவது மிகவும் ஈர்க்கக் கூடிய அளவில் ஒரு வளர்ந்து வரும் இடமாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- இதில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.
- அதனையடுத்து சீனாவானது இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இதில் ஜெர்மனி மற்றும் ஐக்கிய ராஜ்ஜியம் முறையே 3வது மற்றும் 4வது இடங்களைப் பிடித்துள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஜான்சன் & ஜான்சனின் கோவிட்-19 தடுப்பூசி

- உலக சுகாதார அமைப்பு (WHO - World Health Organization) ஜான்சன் & ஜான்சன் நிறுவனத்தின் கொரோனா வைரஸ் தடுப்பூசிக்கு வேண்டி அவசரகாலப் பயன்பாட்டு அங்கீகாரத்தைக் கொடுத்துள்ளது.
- ஜான்சன் அண்ட் ஜான்சனின் கொரோனா வைரஸ் தடுப்பூசியானது WHO அமைப்பால் பட்டியலிடப்பட்ட முதல் ஒற்றை வழங்குத் தடுப்பூசி ஆகும்.
- இந்தத் தடுப்பூசியை -20 டிகிரியில் சேமிக்க வேண்டும்.
- WHO முன்னதாக ஃபைசர் / பயோஎன்டெக், அஸ்ட்ராஜெனெகா-எஸ்.கே. பயோ மற்றும் இந்திய சீரம் நிறுவனம் ஆகியவற்றின் தடுப்பூசிகளை அவசரகாலப் பயன்பாட்டிற்கு என்று பட்டியலில் வைத்திருந்தது.

# மாநிலச் செய்திகள்

## கலா நமக் அரிசி விழா


- உத்தரப் பிரதேச அரசானது உத்தரப்பிரதேசத்தில் உள்ள சித்தார்த் நகர் மாவட்டத்தில் கலா நமக் அரிசி விழாவை ஏற்பாடு செய்துள்ளது.
- கலா நமக் அரிசியானது இந்தப் பகுதியில் பயிர் செய்யப் பட்டு அறுவடை செய்யப் படுகிறது.
- இந்த அரிசி புவிசார் குறியீட்டைப் பெற்ற ஒரு அரிசி வகையாகும்.

# முக்கிய தினங்கள்

## பை (Pi) தினம் - மார்ச் 14

- பை என்பது ஒரு வட்டத்தின் சுற்றளவு மற்றும் விட்டம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு விகிதமாகும்.
- பை இன் மதிப்பு 3.14 என்பதோடு அந்த எண்ணின் ஆரம்பம் 3 ஆகும்.
- எனவே ஆண்டின் மூன்றாவது மாதமான மார்ச் மாதத்தில் இது அனுசரிக்கப் படுகிறது.
- பை இன் மதிப்பானது முதன் முதலில் சைரக்யூஸைச் சேர்ந்த கணிதவியலாளரான ஆர்க்கிமிடிஸ் என்பவரால் கணக்கிடப்பட்டது.
- யுனெஸ்கோ 2019 ஆம் ஆண்டிலிருந்து பை தினத்தை 'சர்வதேச கணித தினமாக' கடைபிடிக்கத் தொடங்கியது.

- பை தோராய தினமானது ஜூலை 22 அன்று அனுசரிக்கப்படுகிறது (நாள் / மாத வடிவில் 22/7).




## உலக நுகர்வோர் உரிமை தினம் - மார்ச் 15




- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "Tackle Plastic Pollution" (நெகிழி மாசுபாட்டைக் கையாளுதல்) என்பதாகும்.
- உலக நுகர்வோர் உரிமை தினத்தின் வரலாறு அமெரிக்க அதிபர் ஜான் எஃப் கென்னடியுடன் தொடங்குகிறது.
- 1962 ஆம் ஆண்டு மார்ச் 15 அன்று, அவர் நுகர்வோர் உரிமைகள் பிரச்சினைக்குத் தீர்வு காண அமெரிக்கப் பாராளுமன்றத்திற்கு ஒரு சிறப்புச் செய்தியை அனுப்பினார்.
- இவ்வாறு செய்த முதல் உலகத் தலைவர் இவராவார்.
- முதல் உலக நுகர்வோர் உரிமை தினமானது 1983 ஆம் ஆண்டு 15 மார்ச் அன்று அனுசரிக்கப் பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 17**

# TNPSC துளிகள்

- தமிழகத்தைச் சேர்ந்த சதலவாதா ஆனந்த பவானி தேவி, ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தேர்வான முதல் இந்திய வாள்வீச்சு வீராங்கனை ஆவார்.
  - ஹங்கேரி உலகக் கோப்பைப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்கான ஒரு வாய்ப்பினை இவர் பெற்று உள்ளார்.
- இந்தியாவிற்கு அதிகளவில் எண்ணெய் வழங்கும் இரண்டாவது நாடு எனும் நிலையில் இருந்த சவுதி அரேபியாவைப் பின்னுக்குத் தள்ளி ஐக்கிய அமெரிக்க நாடுகள் இரண்டாமிடத்திற்கு முன்னேறியுள்ளது.
  - ஈராக் இந்தியாவிற்கு எண்ணெய் வழங்குவதில் முதல் இடத்தில் உள்ளது.

# தேசியச் செய்திகள்

## புவிசார் குறியீடு மகோத்சவ்

- மத்தியப் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரான அர்ஜீன் முண்டா, உத்தரகாண்டில் உள்ள முசோரியில் அமைந்துள்ள லால்பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாகப் பயிற்சி மையத்தில், பழங்குடியின இந்தியா (Tribes India) புவிசார் குறியீடு மகோத்சவ் என்ற நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.
- இந்த மகோத்சவத்தில் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இருந்து புவிசார் குறியீடு பெற்ற உற்பத்திப் பொருட்கள் காட்சிக்குக் கொண்டு வரப்பட்டு அதன் மூலம் இதன் முக்கிய நோக்கம் இந்தியக் குடிமைப் பணிக்கு தேர்வானவர்களிடையே இத்தகைய உற்பத்திப் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கவும் இந்தியாவின் வளமான கலாச்சார மரபுகளைப் பற்றி உணர்வுகளை ஏற்படுத்துவதும் ஆகும்.
- “உள்ளூர் உற்பத்திக்குக் குரல் கொடுத்தல்” எனும் குறிக்கோளுடன் “ஆத்ம நிர்பர் பாரத்தை” கட்டமைப்பதையும் இது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

## நீரின் தரத்தை சோதித்தல் மற்றும் கண்காணித்தலுக்கான கட்டமைப்பு

- நீரின் தரத்தைச் சோதனையிடவும் அதன் கண்காணிப்பினை மேற்கொள்வதற்குமான ஒரு கட்டமைப்பினை ஜலசக்தி அமைச்சகம் தொடங்கியுள்ளது.
- இது மத்திய அரசின் ஒரு தலைமைத்துவத் திட்டமான ஜல்ஜீவன் திட்டத்தின் ஒரு பகுதி ஆகும்.
- இதன்கீழ், வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள், தேசிய சோதனை மற்றும் ஆய்வக மதிப்பீட்டு அங்கீகார வாரியத்தின் அங்கீகாரம் பெற்ற ஆய்வகங்களை உள்ளடக்கிய ஒரு கட்டமைப்பை உருவாக்குவதை கட்டாயமாக்கியுள்ளன.
- அடுத்த ஆண்டில் நாட்டின் ஒவ்வொரு மாநிலத்திலும், மாவட்டத்திலும் வட்டத்திலும் இத்தகைய ஆய்வகங்கள் அமைக்கப்படும்.
- பஞ்சாயத்து நிர்வாக அளவில் கிராம தண்ணீர் மற்றும் துப்பரவுக் குழுவில் உள்ள பெண்களைக் கொண்ட குழுவிற்கு வேண்டிய தள ஆய்வு கருவிகள் வழங்கப்படும்.
- இந்தச் சோதனையின் அனைத்து முடிவுகளும் தண்ணீர் தரத்தின் தரவு மேம்பாட்டு முறை அமைப்பில் உள்ளீடு செய்யப்படும்.




## ஐஎன்எஸ் ஜலஷ்வா

- இந்தியக் கடற்படைக் கப்பலான ஜலஷ்வா கொமோரோசில் உள்ள அஞ்சுவான் என்ற துறைமுகத்தைச் சென்றடைந்துள்ளது.
- இக்கப்பல் 1000 மெட்ரிக் டன் எடை கொண்ட அரிசி மூட்டைகளை ஏற்றிச் சென்று உள்ளது.
- கொமோரோசில் சரக்குகளை ஒப்படைத்தப் பிறகு ஐஎன்எஸ் ஜலஷ்வா இஹோவ்லா (Ehoala) என்ற துறைமுகத்தை நோக்கிப் பயணம் மேற்கொள்ளும்.
- அங்கு 1000 மெட்ரிக் டன் எடையுள்ள அரிசி மற்றும் 1,00,000 ஹைட்ராக்சி குளோரோகுயின் மாத்திரைகளைக் கொண்ட சரக்குகளை அது வழங்கும்.
- ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்துப் பெறப்பட்ட ஒரே இந்திய கடற்படைக் கப்பல் ஐஎன்எஸ் ஜலஷ்வா ஆகும்.

## சரஸ்வதி ஆறு – ஆய்வுக் குழுமம்

- சரஸ்வதி ஆறு பற்றிய பல்துறை சம்பந்தப்பட்ட ஆய்வினை மேற்கொள்வதற்காக ஒரு ஆலோசனைக் குழுவினை புனரமைத்துள்ளதாக இந்தியத் தொல்லியல் துறை கூறி உள்ளது.
- சரஸ்வதி ஆறு காகர் – ஹாக்ரா ஆறு எனவும் அழைக்கப்படுகிறது.
- இக்குழு அடுத்த இரண்டு ஆண்டுக் காலத்திற்கு (2021-2023) செயல்படும் வகையில் புனரமைக்கப் பட்டுள்ளது.
- மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் பிரகலாத் சிங் படேல் இக்குழுவின் தலைவர் ஆவார்.
- சுற்றுச்சூழல் மாற்றங்கள், சரஸ்வதி ஆற்றின் தொடக்க கால வரலாறு குறித்த ஆழ்ந்த தரவுகளைக் கொண்ட தொல்லியல் கலாச்சார வரலாறு போன்றவற்றைப் பற்றிய ஆய்வு செய்ய இக்குழுவானது தொலை நுண்ணுணர்வு பதிமங்களைப் பயன்படுத்த உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## குவாட் அமைப்பின் முதல் உச்சி மாநாடு – 2021

- பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் ஜோ பிடன், ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன் மற்றும் ஜப்பானிய பிரதமர் யோஷிஹைட் சுகா ஆகியோர் குவாட் (நான்கு) நாடுகளின் முதல் உச்சி மாநாட்டில் பங்கேற்கின்றனர்.
- இந்த நாற்கரப் பாதுகாப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள நாடுகளான இவை சீனாவை எதிர்கொள்வதற்கான திட்டங்களை வகுக்க உள்ளன.
- குவாட் ஆனது ஆசிய நேட்டோ (NATO - North Atlantic Treaty Organization) எனவும் அழைக்கப் படுகிறது.
- இது இந்தியா, ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவற்றை உள்ளடக்கிய ஓர் அலுவல் சாராத யுக்தி சார் குழு ஆகும்.
- ‘குவாட்’ எனும் கருத்து முதன்முதலில் 2007 ஆம் ஆண்டில் முன்னாள் ஜப்பானிய பிரதமரான சின்ஷோ அபே என்பவரினால் கொண்டு வரப்பட்டது.

## ஆற்றல் அலுவலகம் – மாஸ்கோ

- டெல்லி-மாஸ்கோ ஆகிய இரண்டும் ஆற்றல் துறையில் அதிக ஈடுபாடு செலுத்தி வருவதால் மாஸ்கோவில் இந்தியா ஓர் ஆற்றல் அலுவலகத்தினைத் திறந்து உள்ளது.
- இந்த ஆற்றல் அலுவலகம் இந்தியாவின் ஐந்து புகழ்பெற்ற திறன் வழங்கீட்டு நிறுவனங்களை உள்ளடக்கி இருக்கும்.
- அந்த ஐந்து பொதுத் துறை நிறுவனங்கள்
  - ONGC விதேஷ் நிறுவனம்,
  - இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்
  - கெயில் நிறுவனம் (இந்தியா)
  - ஆயில் இந்தியா நிறுவனம்
  - இன்ஜினியர்ஸ் இந்தியா நிறுவனம்

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## RH - 560

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பானது RH-560 எனப்படும் ஆய்வு விண்கலம் (sounding rocket) ஒன்றை விண்ணில் ஏவியுள்ளது.
- இந்த விண்கலம் ஸ்ரீஹரிகோட்டாவில் அமைந்துள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது.
- இந்த விண்கலம் புவிப்பரப்பு மேலுள்ள உயரடுக்குகளில் வீசக்கூடிய நடுநிலைக் காற்று, பிளாஸ்மா அயனிகளின் செயல்பாடு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பான ஆய்வுக்காக அனுப்பப் பட்டுள்ளது.
- ஆய்வு விண்கலன்கள் ஒன்று (அ) இரண்டு நிலை கொண்ட திட எரிபொருள் விண்கலங்களாகும்.

- இத்தகைய விண்கலன்கள் உயர் வளிமண்டல அடுக்கு பற்றிய ஆய்வு மற்றும் விண்வெளி ஆய்வு போன்றவற்றிற்காகப் பயன்படுத்தப் படுகின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மரபணு வரைபடமிடல் – இந்தியப் பெருங்கடல்

- இந்தியப் பெருங்கடலில் பெருங்கடலியலுக்கான தேசிய நிறுவனம் தனது இத்தகைய முதல் வகை திட்டமான மரபணு வரைபடமிடல் திட்டத்தினைத் தொடங்க உள்ளது.
- இதன் முக்கிய நோக்கம் இந்தியப் பெருங்கடலில் உள்ள நுண்ணுயிரிகளின் மரபணு படங்களின் மாதிரிகளைச் சேகரித்தலாகும்.
- அது மட்டுமின்றி, காலநிலை மாற்றம், ஊட்டச் சத்திற்கான நெருக்கடி, அதிகரிக்கும் மாசுபாடு போன்றவற்றில் இந்தியப் பெருங்கடலின் எதிர்வினை மற்றும் அதன் உயிரி வேதியியல் பற்றி புரிந்து கொள்வதும் இன்றியமையாத ஒன்றாகும்.
- இதன் நன்மைகள் பின்வருமாறு
    - இது சூழலியல் அமைப்புகளைப் புரிந்து கொள்ள உதவும்
    - இது காலநிலை மாற்றங்களை ஏற்படுத்தும் காரணிகளைப் புரிந்து கொள்ள உதவும்.
    - இது இந்தியப் பெருங்கடலின் கனிம வளங்கள் பற்றி அறிய உதவும்.
- மொத்த புவிப்பரப்பில் இந்தியப் பெருங்கடல் 20% பரப்பளவைக் கொண்டுள்ளது.
- இது உலகின் மூன்றாவது பெரிய நீர்நிலையாகும்.

## காட்டுத்தீ – சேத்ருஞ்சாய் மலைக்குன்றுகள்

- குஜராத்தின் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியான சேத்ருஞ்சய் மலைக் குன்றுகளில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது.
- இக்காட்டுப் பகுதியானது பாவ்நகர் பிராந்திய வனப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ஆசிய சிங்கங்களின் வாழ்விடம் ஆகும்.
- சேத்ருஞ்சய் மலைக்குன்றுகள்
    - குஜராத்திலுள்ள பாவ்நகர் மாவட்டத்தின் பாலிடானா எனும் நகரில் அமைந்து உள்ளது.
    - சேத்ருஞ்சி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது.
    - சமணர்களால் ஒரு புனித மலையாக கருதப் படுகிறது.

# மாநிலச் செய்திகள்

## உச்சநீதிமன்றம் மற்றும் மகாராஷ்டிரா உள்ளாட்சி அமைப்பு இடஒதுக்கீடு

- மகாராஷ்டிராவின் உள்ளாட்சி அமைப்புகளில் OBC பிரிவினருக்கு வழங்கப்பட்ட இட ஒதுக்கீடானது SC/ST/OBC ஆகிய பிரிவினருக்கு ஒருங்கே வழங்கப்பட்ட 50% இடஒதுக்கீட்டிற்கு மிகாமல் இருக்க வேண்டும் என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- இந்தக் கட்டளையானது நிறைவான நீதியை வழங்குவதற்கான இந்திய அரசியலமைப்பின் சரத்து 142 என்பதின் கீழான முழு அதிகாரத்தின் கீழ் வழங்கப்

பட்டுள்ளது.

❖ OBC பிரிவினருக்கான இடஒதுக்கீடு சட்டப் பூர்வமானதே அன்றி, SC & ST பிரிவினர்களுக்கான இடஒதுக்கீடு போல் அரசியலமைப்பு சார்ந்தது அல்ல எனவும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## கிராமி விருதுகள் 2021

❖ 63வது வருடாந்திர கிராமி விருதுகள் அமெரிக்காவில் லாஸ் ஏஞ்செல்சின் சமூக மையத்தில் வழங்கப் பட்டது.

❖ பில்லி எய்லிஷ் தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆண்டின் சாதனையாளர் விருது பெற்ற முதல் தனிப்பாடகர் ஆவார்.

❖ கிராமி விருதுகளின் வரலாற்றிலேயே அதிக விருதுகளைப் பெற்ற பெண் என்று போற்றப் படும் வகையில் 28 விருதுகளைப் பெற்று பியான்ஸ் வரலாறு படைத்து உள்ளார்.

❖ இந்த வருட விழாவின் போது, பியான்ஸ் நான்கு விருதுகளைப் பெற்றுள்ளார்.
  - ராப் பாடகர் மேகன் தி ஸ்டாலினுடன் இணைந்து இரண்டு விருதுகள்
  - அவருடைய சொந்தப் பாடலுக்காக ஒரு விருது.
  - Blown Skin Oil என்பதற்காக மற்றுமொரு விருது.

❖ டெய்லர் ஸ்விஃப்ட் அவர்கள் இந்த ஆண்டின் பாடல் தொகுப்பிற்காக மூன்று முறை விருதை வென்ற முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றார்.

❖ இந்த சாதனையானது "Folkrole" எனும் அவரது எட்டாவது இசைத் தொகுப்பிற்கு கிடைத்த விருதின் மூலம் படைக்கப் பட்டது.

| Award Category | Winner | Artist Name |
|---|---|---|
| Record of the Year | Everything I Wanted | Billie Eilish |
| Album of the Year | Folklore | Taylor Swift |
| Song of the Year | I Can't Breathe | Dernst Emile II, H.E.R., and Tiara Thomas, songwriters (H.E.R.) |
| Best New Artist | Megan Thee Stallion | |
| Best Pop Solo Performance | Watermelon Sugar | Harry Styles |
| Best Pop Vocal Album | Future Nostalgia | Dua Lipa |
| Best Pop Duo/Group Performance | Rain on Me | Lady Gaga with Ariana Grande |
| Best Traditional Pop Vocal Album | American Standard | James Taylor |
| Best Dance Recording | 10% | Kaytranada featuring Kali Uchis |
| Best Dance/Electronic Album | Bubba | Kaytranada |
| Best Contemporary Instrumental Album | Live at the Royal Albert Hall | Snarky Puppy |
| Best Rock Album | The New Abnorm | The Strokes |
| Best Rock Performance | Shameika | Fiona Apple |

# விளையாட்டுச் செய்திகள்

## 3000 ரன்களை குவித்த முதல் மட்டை வீரர்

- T20 சர்வதேசப் போட்டிகளில் 3000 ரன்களை குவித்த முதல் மட்டை வீரர் விராட் கோலி ஆவார்.
- அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் அவர் இங்கிலாந்து அணிக்கு எதிராக இந்த சாதனையைப் படைத்து உள்ளார்.
- இந்தியப் பீரிமியர் லீக் போட்டிகளில் மொத்தம் 5878 ரன்களை குவித்து முன்னணியில் உள்ள வீரரும் அவரே ஆவார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 18**

# TNPSC துளிகள்

- ரஷ்யாவை விஞ்சி மிகப் பெரிய அந்நியச் செலாவணி இருப்பினைக் கொண்ட உலகின் 4வது நாடாக இந்தியா முன்னேறியுள்ளது.
    - உலகிலேயே அதிக அந்நியச் செலாவணி இருப்பினைக் கொண்ட நாடாக சீனா உள்ளது. அதனைத் தொடர்ந்து ஜப்பான் மற்றும் ஸ்விட்சர்லாந்து ஆகியவை இடம் பெற்று உள்ளன.
- அமெரிக்க தேசிய சுகாதார நிறுவனத்தின் விஞ்ஞானிகள், AEG 12 எனப்படும் ஒரு கொசுவின் புரதமானது மஞ்சள் காய்ச்சல், டெங்கு, ஜிகா மற்றும் வெஸ்ட் நைல் போன்ற நோய்களை ஏற்படுத்தும் வைரஸ் குடும்பத்தின் பரவலைக் கடுமையாக தடுத்து நிறுத்துகிறது எனக் கண்டறிந்துள்ளனர்.
    - மேலும், அவை கொரோனா வைரஸ்களையும் வெகுவாக பலவீனப்படுத்துகிறது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.
- புதுதில்லியிலுள்ள பெரோஸ்ஷா கோட்லா மைதானத்தில் நடைபெற்ற விஜய் ஹசாரே கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி ஆறு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் உத்தரப் பிரதேச அணியை வீழ்த்தி கோப்பையை வென்றுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## சிறந்த குழந்தைநல மருத்துவமனை

- காஞ்சி காமகோடி குழந்தைகள் அறக்கட்டளை மருத்துவமனையானது நாட்டின் சிறந்த குழந்தைநல மருத்துவ வசதிகள் கொண்ட மருத்துவமனை என்று போற்றப் பட்டுள்ளது.
- இந்த கணக்கெடுப்பு 'News Week' எனும் இதழினால் மேற்கொள்ளப் பட்டது.
- இந்த கணக்கெடுப்பு 'Statista Inc.' என்ற இணைய தளத்துடன் இணைந்து மேற்கொள்ளப் பட்டது.
- இந்த கணக்கெடுப்பு ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐக்கிய ராஜ்ஜியம், ஜெர்மனி, கனடா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் உள்பட 25 நாடுகளில் மேற்கொள்ளப்பட்டது.

## கீழடி அகழாய்வு – 7வது கட்டம்

- கீழடியின் 7வது கட்ட அகழாய்வில் சிதிலமடைந்த களிமண்ணால் ஆன மூடி ஒன்று கண்டெக்கப் பட்டுள்ளது.
- இது 2600 வருடங்கள் பழமையானது எனக் கூறப்படுகிறது.
- இது தண்ணீரைப் பிடிக்க பயன்படும் குமிழியுடன் கூடிய மூடி போன்ற அமைப்பை உடைய மண்பாண்டத்தை ஒத்துள்ளது.
- இது மிகவும் சிறிதாக இருப்பதனால் 2600 வருடங்களுக்கு முன்பு இது விளையாட்டுப் பொருளாகப் பயன்படுத்தப் பட்டிருக்கலாம்.

## மட்பாண்ட ஓடுகள் – ராமநாதபுரம்

- சிந்து சமவெளி நாகரிகத்தின் எழுத்துப் படிவத்தை ஒத்த வெட்டெழுத்துக்களைக் கொண்ட மட்பாண்ட ஓடுகள் ராமநாதபுரத்தில் உள்ள உத்திரகோசமங்கை என்னுமிடத்தில் கண்டெடுக்கப் பட்டுள்ளன.
- இதற்கு முன்பு, ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கீழக்கரையில் சேதுபதி காலத்தைச் சேர்ந்த திரிசூல முத்திரையுடன் சீன மட்பாண்ட ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டு பதிவு செய்யப் பட்டுள்ளன.
- தற்பொழுது, உத்திரகோசமங்கைக்கு அருகில் மரியாபுரத்தில் உள்ள ஒரு குளத்திற்கு அருகே 20 புதிய மட்பாண்ட ஓடுகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.



# தேசியச் செய்திகள்

## தேசியப் புயல் அபாயத் தணிப்பு திட்டம்

- நாட்டில் புயலால் ஏற்படும் அபாயங்களை எதிர்கொள்வதற்காக மத்திய அரசால் இது தொடங்கப் பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் நோக்கம், இந்தியாவில் கடலோர மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் புயலால் ஏற்படும் தாக்கங்களைத் தணிப்பதற்காக கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பு சாரா நடவடிக்கைகளை மேற்கொள்வதே ஆகும்.

### *இத்திட்டத்தை பற்றிய தகவல்கள்*

- இத்திட்டம் அந்தந்த மாநில அரசுகள் மற்றும் தேசியப் பேரிடர் மேலாண்மை நிறுவனம் (NIDM) ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தினால் (NDMA) அமல்படுத்தப் படும்.
- வெவ்வேறு வகையில் புயலால் பாதிப்புக்குள்ளாகக் கூடிய 13 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை இத்திட்டம் அடையாளம் கண்டுள்ளது.
- இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதி உதவிகளை வழங்கும்.
- இந்த மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளது.
- பிரிவு – I : அதிக பாதிப்புக்குள்ளாகும் மாநிலங்கள் – ஆந்திரப் பிரதேசம், குஜராத், ஒடிசா, தமிழ்நாடு, மேற்கு வங்காளம்.

- பிரிவு – II : குறைவாக பாதிப்புக்குள்ளாகும் மாநிலங்கள் – மகாராஷ்டிரா, கர்நாடகா, கேரளா, கோவா, பாண்டிச்சேரி, லட்சத்தீவுகள், டாமன் மற்றும் டையூ, அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகள்.

## பாராலச்சா கணவாய்

- இமாச்சலப் பிரதேசத்திலுள்ள பாராலச்சா கணவாயினை மீண்டும் திறப்பதற்கான பணியினை முதன்முறையாக எல்லையோரச் சாலை நிறுவனம் தொடங்கியுள்ளது.
- லடாக்கிலுள்ள லே பகுதியுடன் சாலை இணைப்பை மீண்டும் புனரமைப்பதற்காக இது மேற்கொள்ளப் படுகிறது.
- பாராலச்சா கணவாய் ஜான்ஸ்கர் மலைத்தொடரில் அமைந்த ஒரு உயரிய மலை கணவாய் ஆகும்.
- இது லே-மணாலி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இமாச்சலப் பிரதேசத்தின் லகௌல் மாவட்டத்தையும் லடாக்கின் லே மாவட்டத்தையும் இணைக்கிறது.
- இது பாகா ஆறு மற்றும் யமுனை ஆறு ஆகியவற்றைப் பிரிக்கும் நீர் முகடாகவும் உள்ளது.




## இந்தியா – மாலத்தீவுகள் புரிந்துணர்வு ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் மாலத்தீவுகள் ஆகியவற்றுக்கு இடையே விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத் துறை ஆகியவற்றில் ஒத்துழைப்பிற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- விளையாட்டு அறிவியல், விளையாட்டு மருத்துவம், பயிற்சி நுட்பங்கள் ஆகியவற்றுடன் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சி முகாம்களில் இளம் வீரர்களின் பங்கேற்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய அனுபவம் மற்றும் அறிவு போன்றவற்றை விரிவுபடுத்த இது உதவும்.

## இந்தியா – பின்லாந்து காணொலி உச்சி மாநாடு

- இந்தியா – பின்லாந்து ஆகியவற்றுக்கிடையேயான ஒரு காணொலி உச்சி மாநாடு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பின்லாந்து குடியரசின் பிரதமர் சனா மரின் ஆகியோருடன் பங்கேற்புடன் நடத்தப் பட்டது.

- இந்த மாநாடு ஒருமித்த ஆர்வத்துடன் இருதரப்பு விவகாரங்களின் அனைத்து அங்கங்களையும், மற்ற பிற பிராந்திய மற்றும் பலதரப்பு விவகாரங்களையும் விவாதிப்பதற்காக நடத்தப்பட்டது.

## அனைத்திந்தியச் சுற்றுலா வாகனங்களுக்கான அங்கீகாரம் மற்றும் அமைதி வழங்கும் விதிகள்

- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகமானது "அனைத்திந்தியச் சுற்றுலா வாகனங்களுக்கான அங்கீகாரம் மற்றும் அனுமதி வழங்கும் விதிகள், 2021" எனும் புதிய விதிகளை அறிவித்துள்ளது.
- இந்தப் புதிய விதிகள் மாநில வருவாய் மற்றும் சுற்றுலாவினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அறிவிக்கப் பட்டுள்ளது.
- இது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் அமலுக்கு வரும்.
- இத்திட்டத்தின் கீழ் எந்தவொரு பயணியர் வாகன ஓட்டுநரும் அனைத்திந்தியச் சுற்றுலா அங்கீகாரம் (அ) அனுமதியினைப் பெற இணைய தளம் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கலாம்.

# சர்வதேசச் செய்திகள்

## SIPRI அறிக்கை – ஆயுத ஏற்றுமதி மற்றும் இறக்குமதி

- இவ்வறிக்கை ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI - Stockholm International Peace Research Institute) எனும் ஸ்வீடனைச் சேர்ந்த சிந்தனைக் குழு அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- சவுதி அரேபியாவை அடுத்து, இரண்டாவது பெரிய அளவில் ஆயுத இறக்குமதி செய்யும் நாடாக இந்தியா உள்ளது.
- 2011-15 ஆகிய ஆண்டுகளில் இந்தியாவிற்கு ஆயுதங்களை வழங்கும் இரண்டாவது பெரிய நாடாக ஐக்கிய அமெரிக்க நாடுகள் இருந்தது.
- ஆனால் 2016-20 ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு மேற்கொள்ளப் பட்ட ஆயுத இறக்குமதியின் அளவு அதற்கு முந்தைய ஐந்தாண்டுகளை விட 46% என்ற அளவிற்கு குறைந்துள்ளது, எனவே 2016-20 ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்க நாடு 4வது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.
- உலகில் அதிகளவில் ஆயுதங்களை ஏற்றுமதி செய்யும் நாடு ரஷ்யா ஆகும்.
- 2016-20 ஆண்டுகளில் ஆயுத ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் முறையே பிரான்சும் இஸ்ரேலும் உள்ளன.

# மாநிலச் செய்திகள்

## முதல் பிரத்தியேக விரைவு சரக்கு முனையம்

- சர்வதேச நாடுகளின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளுக்காக என்று பிரத்தியேகமான முதல் விரைவு சரக்கு முனையமானது இந்தியாவின் பெங்களூருவிலுள்ள கெம்பகௌடா சர்வதேச விமான நிலையத்தில் அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- இது பெங்களூரு சர்வதேச விமான நிலையம் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.

- இந்தப் புதிய வசதி 1,50,000 மெட்ரிக் டன் அளவிற்கான சரக்குகளைக் கையாளும் அளவிற்கு வசதிகளை மேம்படுத்தும்.


# முக்கிய தினங்கள்

## நதிகளுக்கான நடவடிக்கை மேற்கொள்ளும் சர்வதேச தினம் - மார்ச் 14

- இந்த வருடம் நதிகளுக்கான செயல்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தினத்தின் 24வது பதிப்பு ஆகும்.
- இத்தினம் மக்களிடையே நமக்கு வாழ்வாதாரமாக விளங்கும் நீரைப் பற்றி விழிப்புணர்வை உருவாக்குவதற்கும், நீரைச் சேமிப்பதற்கும் கொண்டாடுவதற்கும் வேண்டி அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- இந்த வருடத்திற்கான கருத்துரு, "ஆறுகளின் உரிமைகள்" (Rights of Rivers) என்பதாகும்.




## தேசிய தடுப்பூசி தினம் – மார்ச் 16




- இந்தியாவில் தேசிய தடுப்பூசி தினமானது ஒவ்வொரு வருடமும் மார்ச் 16 ஆம் நாள்

கொண்டாடப் படுகிறது.

- ❖ இத்தினம் தேசிய நோய்த் தடுப்பாற்றல் தினம் எனவும் அழைக்கப்படுகிறது.
- ❖ இத்தினம் ஒட்டு மொத்த நாட்டிற்கும் தடுப்பூசியின் முக்கியத்துவத்தினை தெரிவிக்கிறது.
- ❖ இத்தினம் முதன்முதலில் 1995 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- ❖ 1995 ஆம் ஆண்டில் போலியோ சொட்டு மருந்து திட்டத்தை இந்தியா தொடங்கியது
- ❖ முதல் போலியோ சொட்டு மருந்தானது வாய்வழியில் அளிக்கப்பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 19**

# TNPSC துளிகள்

- மாடர்னா நிறுவனமானது தனது கொரோனா தடுப்பூசியினை குழந்தைகள் மீதும் 6 மாதங்கள் மற்றும் 12 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் மீதும் செலுத்தி பரிசோதனையைத் தொடங்கியுள்ளது.
    - கிட்கோவ் (KidCOVE) ஆய்வு எனப்படும் இந்த மருத்துவச் சோதனையானது கனடா மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் தோராயமாக 6,750 குழந்தைகளிடம் மேற்கொள்ளப் பட உள்ளது.
- இந்தியப் பாராளுமன்றம், தனது நட்பு நாடுகளுடன் இணைந்து ஒரு பாராளுமன்ற நட்புக் குழுவினை உருவாக்குவதற்கான முன்மொழிவு பற்றி விவாதித்து வருகிறது.
    - இது நாடுகளுக்கிடையேயான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகும்.
- ஒலிநாடாப் பேழைகளைக் கண்டுபிடித்த டச்சு அறிவியலாளரான லூ ஒட்டென்ஸ் சமீபத்தில் இயற்கை எய்தினார்.
    - மேலும் அவர் காந்தநாடாப் பேழையினையும் கணினி குறுவட்டுகளையும் (magnetic tape players and the computer discs) உருவாக்கி உள்ளார்.
- முரளி ஸ்ரீசங்கர் அவர்கள் நீளம் தாண்டுதல் பிரிவில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தேர்வாகியுள்ளார்.
    - ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்கான தகுதி வரம்பு 8.22 மீட்டராகும். ஸ்ரீசங்கர் பெடரேஷன் கோப்பைப் போட்டிகளில் தனது இறுதி முயற்சியில் 8.26 மீட்டர் நீளம் தாண்டி தேசிய அளவில் சாதனை படைத்துள்ளார்.

# தேசியச் செய்திகள்

## சொட்டுநீர்ப் பாசனத்தில் முன்னணியில் உள்ள மாநிலங்கள்

- இதன் தொடர்பான தரவுகள் விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகத்தினால் மக்களவையில் வழங்கப்பட்டது.
- இதன்படி சிக்கிம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் நிகர விவசாய நிலங்களில் பாதிக்கும் மேற்பட்டவை சொட்டு நீர்ப் (நுண்ணீர்) பாசனத்தின் கீழ் நீர்ப்பாசனம் செய்யப் படுகின்றன.
- இதுமட்டுமின்றி இத்தரவுகள், 27 மாநிலங்கள் (ஒன்றியப் பிரதேசங்கள் உட்பட) 30% என்ற அளவிற்கும் குறைவான சொட்டுநீர் (நுண்ணீர்) பாசன முறையைக் கொண்டு உள்ளன எனவும், அவற்றுள் 23 மாநிலங்கள் 15% என்ற அளவிற்கும் குறைவான சொட்டுநீர் (நுண்ணீர்) பாசன முறையைக் கொண்டுள்ளன எனவும் கூறுகின்றன.

## மருத்துவ ரீதியிலான கருக்கலைப்புச் சட்ட மசோதா, 2020

- இம்மசோதா மருத்துவ ரீதியிலான கருக்கலைப்புச் சட்டம் 1971 என்ற சட்டத்தினைத் திருத்தியமைக்க உள்ளது.
- இது சிறப்புப் பிரிவின் கீழ் பெண்களுக்கு கருக்கலைப்பு செய்வதற்கான உச்ச வரம்பை 20 முதல் 24 வாரங்களாக உயர்த்துவதற்கான விதிகளைக் கொண்டுள்ளது.

- ஆனால் இம்மசோதா சிறப்பு பிரிவினைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.
- இப்போது நடைமுறையில் இருக்கும் சட்டத்தில் 12 வாரங்களுக்குள் கருக்கலைப்பது என்றால் ஒரு மருத்துவரின் ஆலோசனை போதுமானது, 12-20 வாரங்களாக இருந்தால் இரண்டு மருத்துவர்களின் முடிவுகள் தேவை என்று கூறப்படுகிறது.
- இந்த மசோதா ஒரு மருத்துவரின் ஆலோசனையின் பேரில் 20 வாரங்கள் வரை கருக் கலைப்பு செய்யவும், மேலும் 20 முதல் 24 வாரங்களுக்கு இரண்டு மருத்துவர்கள் சேர்ந்து முடிவு செய்யவும் அனுமதிக்கிறது.
- மேலும் கருவைச் சுமக்கும் பெண்ணின் உயிருக்கு ஆபத்தானச் சூழலிலும், கருவிலிருக்கும் குழந்தை குறைபாடுகளுடன் இருக்கும் போது, மனிதாபிமான அடிப்படையிலும் பாதுகாப்பான மற்றும் சட்டரீதியான கருக்கலைப்பு வசதியை பெறுவதற்கும் இந்த மசோதா உறுதி கூறுகிறது.

Table 1: Changes proposed in conditions for terminating a pregnancy at different gestational periods

| Time since conception | Requirement for terminating pregnancy | |
|---|---|---|
| | MTP Act , 1971 | MTP (Amendment) Bill, 2020 |
| Up to 12 weeks | Advice of one doctor | Advice of one doctor |
| 12 to 20 weeks | Advice of two doctors | Advice of one doctor |
| 20 to 24 weeks | Not allowed | Two doctors for some categories of pregnant women |
| More than 24 weeks | Not allowed | Medical Board in case of substantial foetal abnormality |
| Any time during the pregnancy | One doctor, if immediately necessary to save pregnant woman's life | |

## டாக்டர் ஹர்ஷ் வர்தன் – Stop TB Partnership வாரியத்தின் தலைவர்

- மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் (Stop TB Partnership) ‘காசநோயை ஒழிப்பதற்கான பங்குதார வாரியத்தின்’ தலைவராக நியமிக்கப் பட்டு உள்ளார்.
- இப்பொறுப்பு 2025 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் இருந்து காசநோயை ஒழிப்பதற்காக அவர் மேற்கொண்டு வரும் பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையில் வழங்கப் பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து 3 வருடங்களுக்கு இந்த உலக அமைப்பிற்கு அவர் தலைமையேற்றுப் பணி புரிவார்.
- இது ஒரு சர்வதேச அமைப்பாகும். இது காசநோய்க்கு எதிராக போராடுவதற்காக பல நாடுகளை ஒன்று திரட்டும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.
- இந்த அமைப்பு “காசநோய் இல்லாத உலகம்” எனும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரியமின்சக்தி உற்பத்தி ஆலை – சிங்கப்பூர்

- உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின்சக்தி உற்பத்தி ஆலையானது சிங்கப்பூரில் அமைக்கப்பட்டு வருகிறது.
- அந்நாடு கடலில் மிதக்கும் ஆற்றல் உற்பத்தி ஆலைகளையும் கடலின் குறுக்கே நீர்த் தேக்கங்களையும் உருவாக்கத் தொடங்கியுள்ளது.
- உலகிலேயே அதிகளவில் கார்பன் டை ஆக்ஸைடை வெளியிடும் நாடுகளில் சிங்கப்பூரும் ஒன்றாகும்.
- காலநிலை மாற்ற இலக்குகளை நோக்கிப் பயணிப்பதற்காகவும் பசுமை இல்ல வாயுக்களின் வெளியீட்டினைக் குறைப்பதற்காகவும் சிங்கப்பூர் நாடானது மிதக்கும் சூரிய மின்சக்தி உற்பத்தி ஆலைகளை அமைத்து வருகிறது.
- இந்தப் பணியினை செம்ப்கார்ப் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

## இந்தியா – பிரேசில் – தென் ஆப்பிரிக்கா நாடுகளின் பெண்கள் மன்றத்தின் சந்திப்பு

- 6வது இந்தியா – பிரேசில் – தென் ஆப்பிரிக்கா நாடுகளின் பெண்கள் (IBSA - India-Brazil-South Africa) மன்றத்தின் சந்திப்பு காணொலி மூலம் நடைபெற்றது.
- இச்சந்திப்பிற்கு இந்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தைநல மேம்பாட்டுத் துறை அமைச்சர் தலைமை தாங்கினார்.
- இம்மன்றமானது பெண்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கப் பங்காற்றிய பிரச்சினைகள் குறித்து விவாதித்தது.
- IBSA என்பது இந்தியா, பிரேசில் மற்றும் தென் ஆப்பிரிக்கா என்ற நாடுகளை ஒன்றிணைக்கும் ஒரு தனித்துவமிக்க முத்தரப்பு ஒத்துழைப்பு மன்றமாகும்.
- இந்த நாடுகள் வெவ்வேறு கண்டங்களில் அமைந்து மூன்று பெரிய மக்களாட்சி மற்றும் பொருளாதார அளவில் முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளாகும்.

## ஐ.க்யூ ஏர் (IQ Air) ஆய்வு

- உலக காற்றுத் தர அறிக்கையின்படி, 2020 ஆம் ஆண்டில், தொடர்ந்து மூன்றாவது முறையாக உலகின் மிகவும் மாசுபட்ட தலைநகரமாக புதுதில்லி உள்ளது.
- உலக அளவில் புது தில்லி உலகில் 10வது மிகவும் மாசுபட்ட நகரமாக தரவரிசை படுத்தப்பட்டு இருக்கின்றது.
- உலகின் மாசுபடுத்தப்பட்ட நகரமாக சீனாவின் ஷின்ஜியாங் நகரம் இருக்கின்றது.
- உலக காற்றுத் தர அறிக்கையானது ஐ.க்யூ ஏர் (IQ Air) என்ற அமைப்பில் வெளியிடப் பட்டது.
- சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஐ.க்யூ ஏர் (IG Air) என்ற அமைப்பு pm2.5 எனப்படும் நுண்மத் துகள்களின் அளவின் அடிப்படையில் காற்றின் தரநிலையை அளவிடுகிறது.
- இவ்வறிக்கை உலகளவில் மாசுபட்ட 30 நகரங்களில் 22 நகரங்கள் இந்தியாவை சேர்ந்தவை எனக் கூறுகிறது.
- நீண்டகாலமாக pm2.5க்கு ஆட்படுவது புற்றுநோய் மற்றும் இருதய நோய்கள் போன்ற

உயிர்க்கொல்லி நோய்களை ஏற்படுத்தும்.

### புதிய 5G ரேடியோ தீர்வுகள்

- ❖ பின்லாந்தைச் சேர்ந்த நோக்கியா நிறுவனமானது புதிய மேகக் கணிமை (Cloud based) அடிப்படையிலான 5G ரேடியோ தீர்வுகள் அமைப்பை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.
- ❖ மைக்ரோசாஃப்ட், அமேசான் வலைதளச் சேவை நிறுவனம் மற்றும் கூகுளுடன் இந்நிறுவனம் இணைந்து செயல்படவுள்ளது.
- ❖ இந்தத் தீர்வுகள் அமைப்பானது அதன் ரேடியோ அணுகல் வலையமைப்பு (RNA - radio access network) தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்படும்.

### குளோபல் லைட்ஹவுஸ் நெட்வொர்க்கில் ரினியூ பவர்

- ❖ ரினியூ பவர் நிறுவனமானது உலகப் பொருளாதார மன்றத்தின் குளோபல் லைட் ஹவுஸ் நெட்வொர்க்கில் இணைக்கப் பட்டுள்ளது.
- ❖ சுற்றுச்சூழல் ரீதியாக நீடித்த, ஆதரவளிக்கும் சமுதாய அமைப்பு, லாபமிக்க வளர்ச்சி ஆகியவற்றை அடைய புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் நிறுவனங்களை இது அங்கீகரிக்கிறது.
- ❖ ரினியூ பவர் என்பது இந்தியாவைச் சேர்ந்த ஒரு புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் உற்பத்தி நிறுவனமாகும்.
- ❖ இந்த ஆண்டில் குளோபல் லைட்ஹவுஸ் நெட்வொர்க்கின் அங்கீகாரத்தைப் பெற்ற இரண்டு இந்திய நிறுவனங்களில் ரினியூ பவர் நிறுவனமும் ஒன்றாகும்.

## பொருளாதாரச் செய்திகள்

### இந்தியாவின் முதல் லைபர் (LIBOR) மாற்று விகித ஒப்பந்தம்

- ❖ ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் ஆகியவை SOFR (Secured Ovenight Financing Rate) விகிதத்துடன் இணைக்கப்பட்ட அயல்நாட்டு வணிகக் கடன் ஒப்பந்தத்தில் (ECB - External Commercial Borrowing) முதன்முறையாக கையெழுத்திட்டுள்ளன.
- ❖ இது (LIBOR) இலண்டன் வங்கிகளுக்கிடையேயான கடன் விகிதத்திற்கு மாற்றாக அமைகிறது.
- ❖ LIBOR என்பது பல முக்கிய உலக வங்கிகள், சர்வதேச வங்கிகளுக்கிடையேயான சந்தை அமைப்பில் குறுகிய கால கடன்களைப் பரிமாறி கொள்வதற்கான ஒரு உலகளாவிய வட்டி வீதமாகும்.

*குறிப்பு*

- ❖ இது இந்தியாவிலேயே SOFR இணைக்கப்பட்ட முதல் அயல்நாட்டு வணிகக் கடன் ஒப்பந்தமாகும்.

### சந்தை மதிப்பில் உலகின் முதல் 10 நாடுகளில் இந்தியா

- ❖ 2021-22 நிதி ஆண்டில் சந்தை மதிப்பில் உலகின் முதல் 10 நாடுகளில், இந்தியப் பங்குகளின் மதிப்பு கூடியுள்ளது.

- இது கோவிட் காரணமாக உருவான பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்படாத மீட்சியினைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இந்தத் தரவுகள் ப்ளூம்பெர்க்கினால் வழங்கப்பட்டுள்ளன.
- இத்தரவுகள் நடப்பு நிதிநிலையில் இந்தியாவினுடைய ஒருங்கிணைந்தச் சந்தை மூலதனம் டாலர் மதிப்பில் 88% என்ற அளவினை அடைந்துள்ளதை குறிப்பிட்டுக் காட்டுகின்றன.
- இது 2011 ஆம் நிதி ஆண்டிலிருந்து ஒருங்கிணைந்தச் சந்தை மூலதனத்தில் ஏற்பட்ட வலுவான உயர்வாகக் கருதப்படுகிறது.




# மாநிலச் செய்திகள்

## RE-HAB திட்டம்

- இத்திட்டம் கர்நாடகாவிலுள்ள குடகுவின் செல்லூர் கிராமத்தில் தொடங்கப்பட்ட ஒரு சோதனை திட்டமாகும். .
- தேனீக்களைப் பயன்படுத்தி யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையே நிலவும் மோதலைக் குறைத்தல் (Reducing Elephant – Human Attacks using Bees) என்பது தான் RE-HAB திட்டம் ஆகும்.
- இத்திட்டத்தில் நகர்ஹோலே தேசியப் பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தை (Nagarahole National Park and Tiger Reserve) சுற்றிலும் தேனீக்களைக் கொண்ட பெட்டிகள் வைக்கப் படும்.
- இது மனிதனுக்கும் யானைகளுக்கும் இடையேயான மோதல்களைத் தணிக்க உதவும்.
- இத்திட்டம் காதி மற்றும் கிராமப்புற தொழில்துறை ஆணையத்தின் கீழ் உள்ள தேசிய தேன் திட்டத்தின் ஒரு துணைத் திட்டமாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 20**

# TNPSC துளிகள்

- சமூக நல வீட்டுவசதி கட்டிடக் கலைஞர்களான அனி லகடான் மற்றும் ஜீன் பிலிப்பே வசால் ஆகியோர் 2021 ஆம் ஆண்டிற்கான பிரைட்ஸ்கர் கட்டிடக்கலைப் பரிசின் வெற்றியாளர்களாக அறிவிக்கப் பட்டு உள்ளனர்.
  - இவர்கள் லகடான் & வசால் எனப்படும் ஒரு பிரான்சு நிறுவனத்தை நிறுவிய நபர்கள் ஆவர்.
- வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியப் பெண்களின் மன உளைச்சலைப் போக்கும் வகையில் அவர்களுக்கு உதவிட மத்திய அரசாங்கம் வெளிநாடுகளில் மகளிர் உதவி மையங்களை அமைக்க உள்ளது.
  - இந்த மையங்கள் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் உதவியுடன் வெளிநாடுகளில் அமைக்கப்பட்டு வருகின்றன.
- கதகளி நடனக் கலைஞரான குரு செம்மஞ்சேரி குஞ்ஹி ராமன் நாயர் அவர்கள் தனது 105வது வயதில் இயற்கை எய்தினார்.
  - இவருக்கு 2017 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.
- ஜவஹர்லால் நேரு மேம்படுத்தப்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த அறிவியலாளர்கள் ஒளிச்சேர்க்கை முறையைப் போன்றே செயல்படும் ஒரு செயற்கை முறையைக் கண்டறிந்துள்ளனர்.
  - இம்முறை சூரிய ஒளியைப் பயன்படுத்தி, உள்ளிழுக்கப்பட்ட கார்பன்டை ஆக்சைடை கார்பன் மோனாக்சைடாக மாற்றுகிறது.

# தேசியச் செய்திகள்

## சாஹி திஷா பிரச்சாரம்

- ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு திட்ட அமைப்பு "சாஹி திஷா" எனப்படும் ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இப்பிரச்சாரம் இந்தியாவின் கிராமப்புறப் பகுதிகளில் வாழும் பெண்கள் தங்களது வாழ்வாதாரங்களைப் பெறுவதிலும் வேலை வாய்ப்புகளைப் பெறுவதிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் பிரச்சினைகள் மற்றும் தடைகள் பற்றி குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- திஷா திட்டம் என்பது IKEA பவுண்டேசன் என்ற ஒரு நிறுவனத்திற்கும் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு திட்ட அமைப்பிற்கும் இடையேயான ஒரு ஐந்தாண்டு கால கூட்டு முயற்சி ஆகும்.
- இது ஆலோசனைகள் மூலமாகவும் செயல்திறன் சேவைகள் மூலமாகவும் சுமார் 1 மில்லியன் பெண்களுக்குப் பலன்களை வழங்கியுள்ளது.
- இப்பிரச்சாரம் (திட்டம்) இந்தியாவின் ஐந்து மாநிலங்களைச் சேர்ந்த பெண்களுக்குப் பலன்களை வழங்கியுள்ளது. அவை
  - ஹரியானா
  - தில்லி (தேசிய தலைநகரப் பகுதி)
  - மஹாராஷ்டிரா
  - கர்நாடகா

- தெலுங்கானா

## இந்தியப் போர்க்கப்பல் – LCU L58

- இந்தியப் போர்க் கப்பலான LCU L58 (Landing Craft Utility) என்ற கப்பாலானது அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளிலுள்ள போர்ட் பிளேயரில் இந்தியக் கப்பற்படையில் இணைக்கப் பட்டது.
- இது LCU மார்க் IV ரக கப்பல்களில் எட்டாவது மற்றும் கடைசி கப்பலாகும்.
- இது உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு, கொல்கத்தாவிலுள்ள கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் & இன்ஜினியர்ஸ் லிமிடெட் (GRSE - Garden Reach Shipbuilders & Engineers Ltd) என்ற நிறுவனத்தால் கட்டமைக்கப் பட்டுள்ளது

## பழைய வாகனங்களை அழிப்பதற்கான கொள்கை

- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி அவர்கள் பழைய வாகனங்களை அழிப்பதற்கான கொள்கையினை 2021 ஆம் ஆண்டு மார்ச் 18 அன்று மக்களவையில் அறிமுகப்படுத்தினார்.
- இக்கொள்கை 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் அமலுக்கு வரும்.
- இக்கொள்கையானது 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 அன்று நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், 2021-2022 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினைச் சமர்ப்பிக்கும் போது அவர் ஆற்றிய உரையில் முதன்முதலாக அறிவிக்கப்பட்டது.




*குறிப்பு*

- 20 வருடங்களுக்கும் மேலான பழைய 51 லட்சம் மற்றும் அதற்கும் மேற்பட்ட இலகுரக மோட்டார் வாகனங்கள் இக்கொள்கையின் கீழ் அகற்றப்படும்.
- 34 லட்சம் இலகுரக மோட்டார் வாகனங்கள் 15 ஆண்டுகளுக்கும் மேலானவை. மேலும் 51 லட்சம் இலகுரக மோட்டார் வாகனங்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலானவை.
- 17 லட்சம் நடுத்தர மற்றும் கனரக வணிகத்திற்குப் பயன்படும் வாகனங்கள் 15 வருடங்களுக்கும் மேலானவை ஆகும்.

*சிறப்பம்சங்கள்*

- இக்கொள்கை, வாகனங்கள் வெளியிடும் மாசுப் பொருட்களைக் குறைப்பதன் மூலம் ஆட்டோமொபைல் துறையில் ஒரு பெரும் மாற்றத்தைக் கொண்டு வரும்.

- இக்கொள்கையானது தரம் குறைந்த, பழைய மற்றும் மாசுபடுத்தும் வாகனங்கள் இல்லாத ஒரு சூழலை உருவாக்கும் நோக்கில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- இக்கொள்கையின் கீழ், 20 வருடங்களுக்குப் பிறகு சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தப் படும் வாகனங்கள் ஆட்டோமொபைல் மையங்களில் தரநிர்ணய சோதனைக்கு உட்படுத்தப்படும்.
- 15 வருடங்களுக்குப் பிறகு வணிகத் தேவைக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் தரநிர்ணயச் சோதனைக்கு உட்படுத்தப்படும்.
- ஒரு வாகனம் மூன்று முறை தரநிர்ணய சோதனையில் தகுதி பெறவில்லையெனில் அதன் உரிமையாளர் அந்த வாகனத்தை சாலையில் பயணிக்க உபயோகிக்கக் கூடாது.

### போஷன் பக்வாடா 2021

- மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது 2021 ஆம் ஆண்டின் மார்ச் 16 முதல் மார்ச் 31 வரை போஷன் பக்வாடா என்ற பிரச்சாரத்தினைக் வினை கடைபிடிக்கிறது.
- போஷன் பக்வாடா தொடர்பான விவகாரங்களைக் கண்காணிப்பதற்கான ஒரு முதன்மைத் துறையாக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை (அ) சமூக நலத்துறை செயல்படும்.
- இது அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலும் கடைப்பிடிக்கப் படுகிறது.
- உணவுப் பொருட்கள் வழங்கும் காடுகளை (Food Forestry) பயன்படுத்தி ஊட்டச்சத்து தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நிலவும் சவால்களை எதிர்கொள்வதும், போஷன் பஞ்சாயத்துகளை அமைப்பதும் பக்வாடாவின் முதன்மை நோக்கமாகும்.
- ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய மருத்துவ குணமிக்க தாவரங்கள் வாரியமானது ஒவ்வோர் அங்கன்வாடி நிலையங்களுக்கும் மருத்துவ குணமிக்க 4 தாவரச் செடிகளை வழங்கும்.

## சர்வதேசச் செய்திகள்

### PASSEX / இந்தியா – பஹ்ரைன் கடற்படைப் பயிற்சி

- இந்தியக் கடற்படையானது பஹ்ரைன் கடற்படை போர்க் கப்பல்களுடன் பாரசீக வளைகுடாவில் உள்ள அல் முஹாரக்கில் PASSEX என்ற பயிற்சியினை (Passage exercise – PASSEX) மேற்கொண்டது.
- இப்பயிற்சி சங்கல்ப் என்ற நடவடிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.
- PASSEX என்பது வழக்கமாக நட்பு நாடுகளுடன் இந்தியா நடத்தும் ஒரு கடற்படைப் பயிற்சியாகும்.

### சர்வதேச சூரிய ஒளிசக்தி கூட்டிணைவில் இத்தாலி

- இத்தாலி அரசு சர்வதேச சூரிய ஒளிசக்தி கூட்டிணைவில் (ISA - International Solar Alliance) இணைவதற்காக இந்தியாவுடன் கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- சர்வதேச சூரிய ஒளிசக்தி கூட்டிணைவு (International Solar Alliance – ISA) ஆனது கட்டமைப்பு ஒப்பந்தத்தில் சில திருத்தங்கள் செய்ததை அடுத்து இத்தாலியக் குடியரசு ISA கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இத்திருத்தம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அனைத்து உறுப்பினர் நாடுகளும் ISA அமைப்பின் உறுப்பினர் நிலையைப் பெறும் வகையில் வழிவகை செய்துள்ளது.

***ISA: சர்வதேச சூரிய ஒளிசக்தி கூட்டிணைவு***

- இது 121 நாடுகளை உள்ளடக்கிய ஒப்பந்த அடிப்படையிலான நாடுகளுக்கு இடையேயான ஒரு கூட்டிணைவு ஆகும்.
- இந்தக் கூட்டிணைவு இந்தியாவினால் தொடங்கப்பட்டது.
- பெரும்பாலான உறுப்பினர் நாடுகள் சூரிய ஒளியை அதிகம் பெறும் நாடுகளாகும்.
- அதிக சூரிய ஒளியைப் பெறும் நாடுகள் என்பவை முழுவதுமாக (அ) பகுதியளவாக கடகரேகைக்கும் மகர ரேகைக்கும் இடையே அமைந்துள்ள நாடுகள் ஆகும்.

## சினாத்ரா கோட்பாடு

- பிரித்து ஆளும் கொள்கையின் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையில் செயல்படும் சீனாவின் நடவடிக்கைகளை எதிர் கொள்வதற்காக "சினாத்ரா கோட்பாட்டினை" மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் குழுவின் உறுப்பினர் நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.
- சினாத்ரா கோட்பாடு இரு தூண்களை (கோட்பாடுகளை) அடிப்படையாகக் கொண்டு உள்ளது. அவை,
    - கோவிட் – 19, காலநிலை மாற்றம் மற்றும் பிராந்தியப் பிரச்சினைகள் போன்ற உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்காக சீனாவுடனான ஒத்துழைப்பினை தொடர்தல்.
    - பொருளாதாரத்தில் தொழில்நுட்ப துறைகளைப் பாதுகாப்பதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தின் யுக்தி சார் இறையாண்மையை வலுப்படுத்துதல்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## மாபெரும் விண்வெளி தொலைநோக்கி – ரஷ்யா

- தெற்கு சைபீரியாவில் உள்ள பைக்கால் ஏரியில் ஒரு மாபெரும் தொலைநோக்கியினை ரஷ்யா அமைத்துள்ளது.
- இது பேரண்டத்தில் உள்ள புலப்படும் நுண் பொருட்களை (துகள்களை) கண்டறிவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.
- பைக்கால் – கைகடோன் வால்யூம் டிடக்டர் எனும் தொலைநோக்கி (Baika – Gigaton Volume Detector) நியூட்ரினோக்களைக் கண்டறிவதற்காக வடிவமைக்கப்பட்டது ஆகும்.
- நியூட்ரினோக்கள், கிட்டத்தட்ட நிறையற்ற, மின்னூட்டமற்ற துணைநிலை அணுத் துகள்கள் ஆகும்.
- பைக்கால் ஏரியானது புவியில் உள்ள ஆழமான மற்றும் மிகப்பெரிய நன்னீர் ஏரி ஆகும்.

# முக்கிய தினங்கள்

## வசந்தகால சம இரவு நாள் – மார்ச் 20

- வசந்தகால சம இரவு நாள், “இளவேனிற்கால சம இரவு நாள்” எனவும் அழைக்கப் படுகிறது.
- இந்த வருடத்தில் (2021), இத்தினம் 2021 ஆம் ஆண்டின் மார்ச் 20, என்ற தினத்தில் வருகிறது.
- வழக்கமாக மார்ச் 20 ஆம் நாள் வசந்தகால சம இரவு நாள் ஏற்படும் நாளாகும்.
- எனினும், இந்நாள் மார்ச் 19 முதல் மார்ச் 21 வரையிலான எந்த ஒரு தேதியிலும் வரலாம்.
- வானியலாளர்களின் பருவகால கணிப்பின்படி மார்ச் 20 ஆம் நாள் வசந்தகாலத்தின் முதல் நாளாக கருதப்படுகிறது.
- இத்தினம் இரண்டு சம இரவு நாள்கள் மற்றும் நீண்ட பகல்-இரவு நாள்களை (equinoxes and solstices) பொருத்து அமைகிறது.
- வசந்தகாலம் 2021 ஆம் ஆண்டு ஜீன் 21, அன்று முடிவடையும், மேலும் இந்நாள் கோடைகாத்தின் நீண்ட பகல்நாள் என்றழைக்கப்படுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 21**

# TNPSC துளிகள்

- மகாராஷ்டிராவிலுள்ள கௌதாலா ஆத்ரம்காட் வனவிலங்குச் சரணாலயத்தில் 1940 ஆம் ஆண்டிலிருந்து முதல் முறையாக தற்போது தான் ஒரு புலியானது தென்பட்டு உள்ளது.
- மறைமுகமான கருணைக் கொலையை அதிகாரப் பூர்வமாக்கும் ஒரு சட்டத்திற்கு ஸ்பெயின் நாட்டின் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
    - இத்துடன் நெதர்லாந்து, பெல்ஜியம் மற்றும் லக்சம்பர்க் ஆகிய நாடுகளின் வரிசையில் மறைமுக கருணைக் கொலையை அதிகாரப் பூர்வமாக்கிய நான்காவது ஐரோப்பிய நாடாக ஸ்பெயின் மாறியுள்ளது.
- டிஜிட்டல் க்ரீன் என்ற சான்றிதழானது ஐரோப்பிய ஆணையத்தின் ஒரு முன்மொழிவு ஆகும்.
    - பெருந்தொற்று காலங்களில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இடையில் பாதுகாப்புடன் கூடிய தடையற்ற சுதந்திரமான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தருவதே இதன் நோக்கமாகும்.
- இராஜஸ்தானின் முதல்வர் அசோக் கெஹ்லாட் அவர்கள், "முக்கிய மந்திரி சிரஞ்சீவி யோஜனா" எனப்படும் பொது சுகாதாரத் திட்டத்தை தொடங்க உள்ளதாக அறிவித்து உள்ளார்.
    - இத்திட்டத்தின் கீழ், இராஜஸ்தானில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் இலவச சுகாதார சேவைகள் வழங்கப் படும்.
- யுனெஸ்கோ அமைப்பானது யுஎஸ்ஓ இந்தியா மற்றும் டூன்ஸ் மீடியா குழுமத்துடன் சேர்ந்து மாணவர்களுக்கான நீர்ப் பாதுகாப்பு திட்டம் பற்றிய விழிப்புணர்வுத் திட்டத்தில் இணைந்துள்ளது.
- தான்சானியாவின் முதல் பெண் ஜனாதிபதியாக சமியா சுலுஹு ஹசன் (Samia Suluhu Hassan) என்பவர் பதவியேற்றுள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## மிட்ராக்ளிப்

- இந்தியாவைச் சேர்ந்த அப்போலோ மருத்துவமனைகள் குழுமமானது ஆசியாவிலேயே முதல் முறையாக ஒரே நாளில் அடுத்தடுத்து நான்கு மிட்ராக்ளிப் மருத்துவச் சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டு சாதனை படைத்துள்ளது.
- இதன் மூலம் ஜப்பானில் ஒரு நாளில் மூன்று நோயாளிகளுக்கு மிட்ராக்ளிப் உள்வைப்பு நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்ட சாதனையை இது முறியடித்துள்ளது.
- மிட்ராக்ளிப் மருத்துவ நடைமுறையில் பயன்படுத்தப்படும் குறைந்தபட்ச ஊடுருவும் சிகிச்சை முறை என்பது இதயத்தைத் திறந்து செய்யப்படும் அறுவை சிகிச்சைக்கு அவசியமில்லாமல், கசியும் மிட்ரல் வால்வைச் சரி செய்ய உதவுகிறது.
- அறுவை சிகிச்சையில் அபாயத்தைக் கொண்டுள்ள நோயாளிகளுக்கு வாழ்வு அளிக்கும் மருத்துவ நடைமுறையாகவும் இது அமைகிறது.
- இதயச் செயலிழப்பு நோயாளிகளுக்கு மிட்ராக்ளிப் மருத்துவ நடைமுறையைச் செய்வதற்கு இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கீகாரம் பெற்ற ஒரு சில மருத்துவமனைகளில் அப்போலோ மருத்துவமனைகள் முன்னணியில் உள்ளன.

- பல மருந்துகளால் எந்தவொரு முன்னேற்றமும் பெறாத இதயச் செயலிழப்பு நோயாளிகளுக்கு மிட்ராக்ளிப் மருத்துவ நடைமுறையானது ஒரு தரமான மருத்துவச் சிகிச்சை முறையாக மாறியிருக்கின்றது.
- மித்ராக்ளிப் என்பது ஒரு புரட்சிகரமான மருத்துவ சாதனமாகும்.
- இது மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நம் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இதயச் செயலிழப்புக்கு வழிவகுக்கக் கூடிய மிட்ரல் வால்வு கசிவுகளைக் கொண்டு உள்ள நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை அல்லாத ஒரு மாற்று மருத்துவச் சிகிச்சை நடைமுறையை இது வழங்கியுள்ளது.


# தேசியச் செய்திகள்

## பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கான தேசிய ஆணையத்தின் தலைவர்

- மத்திய அரசானது ஹர்ஷ் சவுகானை பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கான தேசிய ஆணையத்தின் தலைவராக நியமித்துள்ளது.
- இந்த ஆணையத்தின் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மூன்று ஆண்டு கால பதவிக் காலத்திற்குக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர்.
- இந்த ஆணையத்தின் தலைவர் மத்திய காபினெட் அமைச்சரவை தகுதியைச் சேர்ந்தவர் எனும் தகுதியுடையவர் ஆவார். மேலும் இந்த ஆணையத்தில் துணைத் தலைவர் இணை அமைச்சர் எனும் தகுதி உடையவர் ஆவார்.
- 89வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 2003 என்பதின் மூலம் சரத்து 338-B என்ற சரத்தின் கீழ் இந்த ஆணையம் நிறுவப் பட்டு இருக்கின்றது.

## ஹுருன் இந்தியா சொத்து அறிக்கை 2020

- இந்த அறிக்கை இந்தியாவில் ஆண்டுக்கு சராசரியாக ரூ.20 லட்சம் என்ற அளவில் சராசரி சேமிப்பினைக் கொண்ட 'புதிய நடுத்தர வர்க்கம்' என்ற ஒரு புதிய குடும்ப வகையை அடையாளம் கண்டறிந்துள்ளது.
- இந்தியாவில் மொத்தம் 4.12 லட்சம் என்ற அளவிற்கு லட்சாதிபதிக் குடும்பங்கள் (டாலர் மதிப்பில் ) உள்ளன.
- 4,593 என்ற நிலையில், மிக அதிக நிகர சொத்து மதிப்புள்ள தனிநபர்கள் எனும் பிரிவில் உலகளவில் ஐக்கிய அமெரிக்க நாடுகள், சீனா, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.
- மொத்த லட்சாதிபதிக் குடும்பங்களில் 46 சதவீதத்தினர் மகாராஷ்டிரா (56,000), உத்தரப் பிரதேசம் (36,000), தமிழ்நாடு (35,000), கர்நாடகா (33,000), குஜராத் (29,000) ஆகிய மாநிலங்களில் வசிக்கின்றனர்.
- நகர வாரியாக, மும்பையில் அதிக லட்சாதிபதிகள் (16,933) உள்ளனர். அதனையடுத்து, டெல்லி (16,000), கொல்கத்தா (10,000), பெங்களூரு (7,582) மற்றும் சென்னை (4,685) ஆகிய நகரங்கள் உள்ளன.




## கைபேசி சேவை செயலிப் பட்டியல்

- இந்தியாவானது முதல்முறையாக 'கைபேசி சேவை செயலிப் பட்டியல்' எனப்படும் ஒரு செயலிப் பட்டியலை உள்நாட்டிலேயே உருவாக்கியுள்ளது.
- இந்த இந்தியச் செயலிப் பட்டியல் ஆரம்ப கட்டங்களில் இலவசமாக கிடைக்கும்.
- இது இந்திய அரசுக்குச் சொந்தமான, கைபேசி செயலிகளைத் தொகுத்து வழங்கும் ஒரு தளமாகும்.
- இது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் (MeitY - Ministry of Electronics and Information Technology) தொடங்கப்பட்ட ஒரு புதுமையான முயற்சியாகும்.
- மத்திய உயர் கணினி மேம்பாட்டு மையம் (CDAC - Centre for Development of Advanced Computing) இதைச் செயல்படுத்துகிறது.
- அனைத்து மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அரசுத் துறைகள் மற்றும் முகவர் நிறுவனங்கள் ஆகியவை கைபேசி வழித்தடங்கள் வழியாக தங்கள் சேவைகளை வழங்க இது வழிவகை செய்கின்றது.
- கைபேசி செயலிகளை அதிகம் பயன்படுத்தும் நாடு இந்தியா ஆகும்.
- இந்தியச் செயலிகள் சந்தை குறித்த புள்ளிவிவர அறிக்கை 2021 என்ற அறிக்கையின் படி, ஆண்ட்ராய்ட் இயங்குதளத்தில் உள்ள செயலிகளில் சுமார் 5 சதவீத செயலிகள் இந்தியர்கள் உருவாக்கியதாகும்.

## தேர்தல் சின்னங்கள் ஒதுக்குதல்

- கேரள உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக அளிக்கப்பட்ட ஒரு சிறப்பு உத்தரவு மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

- அது கேரள காங்கிரசுக்கு (M) 'இரட்டை இலை' சின்னத்தை ஒதுக்கீடு செய்வதற்காக வழங்கப் பட்ட இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவை உறுதி செய்தது.
- அரசியலமைப்புச் சட்டத்தின் 324வது பிரிவின் கீழ், சின்னங்களை ஒதுக்குவது குறித்து தீர்மானிப்பதற்குத் தேர்தல் ஆணையத்திற்கு முழுமையான அதிகாரங்கள் உள்ளன.
- தேர்தல் சின்னங்கள் (முன்பதிவு மற்றும் ஒதுக்கீடு) ஆணை, 1968 என்ற ஆணையானது நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல்களில் அரசியல் கட்சிகளுக்குச் சின்னங்களை ஒதுக்க தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் வழங்கச் செய்கிறது.

## வன் தன் விகாஸ் யோஜனா

- மணிப்பூர் மாநிலம் வன் தன் விகாஸ் யோஜனாவுக்கான ஒரு முன்மாதிரி மாநிலமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- வன் தன் விகாஸ் யோஜனா என்பது சிறு வன உற்பத்திப் பொருட்களின் மதிப்புக் கூட்டல், அடையாளக் குறியிடுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றிற்கான ஒரு திட்டமாகும்.
- வன் தன் திட்டம், உள்ளூரில் வாழும் பழங்குடியினருக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் ஒரு முக்கிய ஆதாரமாக உருவெடுத்துள்ள நிலையில் மணிப்பூரானது இதில் முதன்மை மாநிலமாக உருவெடுத்துள்ளது
- வன் தன் திட்டம், பழங்குடியினர் விவகாரத் துறை அமைச்சகம் மற்றும் இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவுச் சந்தைப்படுத்துதல் மேம்பாட்டுக் கூட்டமைப்பு நிறுவனம் (TRIFED - Tribal Cooperative Marketing Development Federation of India Limited) ஆகியவற்றின் ஒரு முயற்சி ஆகும்.

## உலகின் உயரமான ரயில்வே மேம்பாலம்

- செனாப் மேம்பாலம், இந்தியாவிலுள்ள ஜம்மு-காஷ்மீரின் ரியாசி மாவட்டத்தில் உள்ள பக்கலுக்கும் கவுரிக்கும் இடையில் இந்திய இரயில்வேயினால் கட்டப்பட்டு வரும் ஒரு எஃகு மற்றும் கான்கிரீட் வளைவு மேம்பாலமாகும்.
- ஜம்மு-காஷ்மீரில் உள்ள செனாப் ஆற்றின் மீது கட்டப்பட்டு வரும் உலகின் இந்த மிக உயரமான இரயில் பாலம் அதன் கடைசி கட்டக் கட்டுமானப் பணி நிலையில் உள்ளது.
- இந்த இரயில் பாதை பாரீஸில் உள்ள ஈபிள் கோபுரத்தை விட 35 மீட்டர் உயரமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- கட்டி முடிக்கப் பட்ட பிறகு, இது சீனாவில் உள்ள பீப்பன் நதியிலமைந்த சுய்பாய் இரயில் பாலத்தின் (275 மீ) சாதனையை முறியடிக்கும்.
- இது செனாப் நதிப் படுகையிலிருந்து 359 மீட்டர் உயரத்தில் இருக்கும்.
- இந்தப் பாலத்தின் ஒட்டு மொத்த நீளம் 1,315 மீட்டர் ஆகும்.




# சர்வதேசச் செய்திகள்

## உலக மகிழ்ச்சி அறிக்கை 2021




- இந்த அறிக்கையினை ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான தீர்வுகள் என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது.
- ஒரு நாட்டின் குடிமக்கள் எவ்வளவு மகிழ்ச்சியை உணர்கிறார்கள் என்பதன் அடிப்படையில் இந்த அறிக்கை 149 நாடுகளைப் பட்டியலிடுகிறது.
- தொடர்ச்சியாக நான்காவது வருடமும் உலகின் மிகவும் மகிழ்ச்சியான நாடாக பின்லாந்து மீண்டும் முடிசூட்டப் பட்டுள்ளது.
- அதனைத் தொடர்ந்து ஐஸ்லாந்து, டென்மார்க், சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, சுவீடன், ஜெர்மனி மற்றும் நார்வே ஆகிய நாடுகள் உள்ளன.
- 149 நாடுகளில் இந்தியா 139வது இடத்தில் உள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் இந்தியா 140வது இடத்தில் இருந்தது.

- இந்தியாவின் அண்டை நாடுகளில், பாகிஸ்தான் 105வது இடத்தையும், சீனா 84வது இடத்தையும், இலங்கை 129வது இடத்தையும், வங்கதேசம் 101வது இடத்தையும் பிடித்துள்ளன.
- போரினால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தானில் உள்ள மக்கள் தங்கள் வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியற்றவர்களாக இந்தப் பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளனர்
- அவற்றைத் தொடர்ந்து ஜிம்பாப்வே (148), ருவாண்டா (147), போட்ஸ்வானா (146), லெசோதோ (145) ஆகிய நாடுகள் உள்ளன.

## உலக ஆற்றல் மாற்றக் கண்ணோட்ட அறிக்கை

- இவ்வறிக்கையினை சர்வதேசப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நிறுவனம் (IRENA - International Renewable Energy Agency) முதன்முறையாக கொண்டு வந்துள்ளது.
- 2050 ஆம் ஆண்டுக்குள், மொத்த மின்சாரத் தேவைகளில் 90% புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களாலும் அதற்கடுத்து 6% இயற்கை எரிவாயுக்களாலும் மீதமுள்ளவை அணுசக்தியில் இருந்தும் வழங்கப்படும் என்று அவ்வறிக்கை மதிப்பிட்டுள்ளது.
- பசுமை ஹைட்ரஜன் போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் உபயோகத்தை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

## CDRI

- 27 உறுப்பினர்களைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் (EU) இந்தியாவின் "பேரிடர் நெகிழ்திறன் உள்கட்டமைப்பிற்கான உலகளாவியக் கூட்டணியில்" (Coalition for Disaster Resilient Infrastructure - CDRI) உறுப்பினராகச் சேர்ந்துள்ளது.
- CDRI என்பது பல நாடுகள், ஐக்கிய நாடுகள் அமைப்பின் முகவர் நிலையங்கள், தனியார் துறைகள், பலதரப்பு மேம்பாட்டு வங்கிகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் ஒரு சர்வதேசக் கூட்டணியாகும்.
- இந்த திட்டம் பேரழிவைத் தடுக்கும் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- CDRI திட்டம் பிரதமர் நரேந்திர மோடியால் 2019 ஆம் ஆண்டில் தொடங்கி வைக்கப் பட்டது.
- ஸ்பெயினில் நடைபெற்ற ஐ.நா.வின் காலநிலை மாற்ற உச்சி மாநாட்டில் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 22**

# தேசியச் செய்திகள்

## சிஆர்பிஎஃபின் 82வது அமைப்பு தினம் – மத்திய ரிசர்வ்/சேமக் காவல் படை

- மத்திய ரிசர்வ் (சேமக்) காவல் படையானது இந்தியாவின் மிகப்பெரிய மத்திய ஆயுதமேந்திய காவல் படையாகும்.
- இது இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது.
- இது 1939 ஆம் ஆண்டு ஜூலை 27, அன்று மன்னரின் பிரதிநிதித்துவம் பெற்ற காவலர் படையாக நடைமுறைக்கு வந்தது.
- சுதந்திரத்திற்குப் பிறகு 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 28, அன்று மத்திய ரிசர்வ் காவல்படை சட்டம் இயற்றப்பட்டதன் மூலம் இது மத்திய ரிசர்வ் காவல் படை என்று பெயர் மாற்றம் பெற்றது.
- 1950 ஆம் ஆண்டில் மார்ச் 19 ஆம் நாளன்று அப்போதைய உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேல் மத்திய ரிசர்வ் காவல் படைகளுக்கு குடியரசுத் தலைவரின் வண்ண அடிப்படையிலான விருதுகளை அறிமுகப்படுத்தினார்.
- 1986 ஆம் ஆண்டில் ஆசியாவிலேயே முதல் மகளிர் படைப்பிரிவினை மத்திய ரிசர்வ் காவல் படை உருவாக்கியது.
- இப்படை நக்சலிச தீவிரவாத இயக்கங்களுக்கு எதிரான போராட்டத்தில் பெரும்பங்கு வகிக்கிறது.
- மேலும் இது வைஷ்ணவோ தேவி, ராம ஜென்மபூமி மற்றும் அமர்நாத் போன்ற புனித தலங்களின் பாதுகாப்பிற்கும் சேர்த்து சிறப்பாக செயல்பட்டு இருக்கின்றது.

# முக்கிய தினங்கள்

## உலக மறுசுழற்சி தினம் – மார்ச் 18

- இது 2018 ஆம் ஆண்டில் முதன்முறையாக கடைபிடிக்கப்பட்டது.
- இயற்கை வளங்கள் எவ்வளவு வேகமாக உபயோகிக்கப்பட்டு வருகின்றன என்பது பற்றிய ஒரு விழிப்புணர்வினை மக்களிடையே உருவாக்குவதற்காக இந்நாள் கடைபிடிக்கப் படுகிறது.
- இத்தினம் மேலும் மறுசுழற்சி எனும் கருத்தினையும் அதனை நடைமுறைப் படுத்துவதையும் வலியுறுத்துகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “நமது மறுசுழற்சி நாயகர்களைக் கொண்டாடுதல்” என்பதாகும்.
- மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்கள் உலகின் 7வது வளமாகவும் கருதப்படுகிறது.
- இது கார்பன் டை ஆக்சைடு உமிழ்வில் ஏறத்தாழ 700 மில்லியன் டன்களைக் குறைக்கிறது.
- இந்த அளவு 2030 ஆம் ஆண்டில் ஒரு பில்லியன் டன்களாக உயரும் என எதிர்பார்க்கப் படுகின்றது.




## ஆயுதத் தளவாட தொழிற்சாலைகள் தினம் – மார்ச் 18

- ❖ இந்தியாவின் பழமையான ஆயுதத் தளவாட தொழிற்சாலையின் உற்பத்தி 1802 ஆம் ஆண்டு மார்ச் 18 அன்று தொடங்கப்பட்டது.
- ❖ இது கொல்கத்தாவிலுள்ள காசிப்பூரில் அமைந்துள்ளது.
- ❖ ஆயுதத் தளவாட தொழிற்சாலைகள் வாரியம் (Ordnance Factory Board – OFB) ஆனது உலகில் 37வது மிகப்பெரிய பாதுகாப்பு உபகரணங்கள் உற்பத்தியாளராகவும் ஆசியாவில் 2வது மிகப்பெரிய பாதுகாப்பு உபகரணங்கள் உற்பத்தியாளராகவும் இந்தியாவில் மிகப்பெரிய பாதுகாப்பு உபகரணங்கள் உற்பத்தியாளராகவும் விளங்குகிறது.
- ❖ OFB ஆனது "பாதுகாப்பின் நான்காவது தூண்" என்றும் "இந்திய ஆயுதப் படைகளுக்குப் பின்னால் இயங்கும் படை" என்றும் அழைக்கப்படுகிறது.
- ❖ OFB ஆனது இந்திய அரசின் மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் பாதுகாப்பு உற்பத்தித் துறையின் கீழ் செயல்படும் ஒரு அமைப்பாகும்.
- ❖ இந்திய ஆயுதத் தளவாட தொழிற்சாலைகள் இந்திய இராணுவப்படை, இந்திய கடற்படை, இந்திய வான்படை ஆகிய முப்படைகளுக்கும் ஆயுதங்களை வழங்கி வருகிறது.
- ❖ OFB ஆனது 1775 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- ❖ இதன் தலைமையகம் கொல்கத்தாவில் அமைந்துள்ளது.

## உலக உறக்க தினம் – மார்ச் 19

- ❖ இத்தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 19 அன்று கடைபிடிக்கப்படுகிறது.
- ❖ இந்த வருடத்தின் கருத்துரு, "முறையான தூக்கம் ஆரோக்கியமான எதிர்காலம்" என்பதாகும்.

## உலக சிட்டுக் குருவி தினம் – மார்ச் 20

- ❖ இத்தினம் பொதுவான வீட்டுக் குருவிகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் அவற்றைப் பாதுகாப்பதற்காகவும் கடைபிடிக்கப்படும் ஒரு

நாளாகும்.

- பிரான்சு நாட்டினுடைய Eco-Sys Action Foundation என்ற அமைப்புடன் இணைந்து 'Nature Forever Society of India' என்ற அமைப்பால் தொடங்கப்பட்ட ஒரு சர்வதேச தொடக்கமே உலக சிட்டுக் குருவி தினமாகும்.
- 'Nature Forever Society of India/ என்ற அமைப்பினை ஒரு இந்திய இயற்கை ஆர்வலரான முகமது திலாவார் தொடங்கினார்.
- அவர் நாசிக்கில் வீட்டுக் குருவிகளுக்கு உதவிகளை செய்வதன் மூலம் இதனை தொடங்கி வைத்தார்.
- 2021 ஆம் ஆண்டிற்கான உலக சிட்டுக்குருவி தினத்தின் கருத்துரு, "நான் சிட்டுக் குருவிகளை நேசிக்கிறேன்" என்பதாகும்.
- 2010 ஆம் ஆண்டில் முதல் உலக சிட்டுக்குருவி தினம் கொண்டாடப்பட்டது.




## சர்வதேச மகிழ்ச்சி தினம் – மார்ச் 20

- 2013 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் அமைப்பு சர்வதேச மகிழ்ச்சி தினத்தை கடைபிடித்து வருகிறது.
- மகிழ்ச்சி என்பது ஐக்கிய நாடுகள் அமைப்பின் நீடித்த வளர்ச்சி குறிக்கோள்களுடன் தொடர்புடையது (Sustainable Development Goals – SDG) ஆகும்.
- 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பு 17 SDG குறிக்கோள்களை தொடங்கி வைத்தது.
- 1971 ஆம் ஆண்டில் பூடான் மொத்த தேசிய மகிழ்ச்சியைப் பற்றி உரையாற்றியது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு, "அனைவருக்குமான என்றென்றும் கிடைக்கக் கூடிய மகிழ்ச்சி"
- 2021 ஆம் ஆண்டு சர்வதேச மகிழ்ச்சி தினத்தின் பிரச்சார கருப்பொருள், "அமைதியாகவும் புத்திசாலித் தனத்துடனும் கருணையுடனும் இருங்கள்" என்பதாகும்.

## உலக பிரஞ்சு மொழி தினம் – மார்ச் 20

- 2010 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுத் தகவல் துறையினால் இத்தினமானது கடைபிடிக்கத் தொடங்கப்பட்டது.
- இந்நாள் பன்மொழித் தன்மை மற்றும் கலாச்சார பன்முகத் தன்மை ஆகியவற்றைப் போற்றுவதற்காக கடைபிடிக்கப்படுகிறது.
- மேலும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆறு அலுவல் மொழிகளிலும் சமமான

பயன்பாட்டை ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும்.

- அவை, அரபு, சீன மொழி, ஆங்கிலம், பிரஞ்சு மொழி, ரஷ்ய மொழி மற்றும் ஸ்பானிய மொழி ஆகியவை ஆகும்.
- ஒவ்வொரு மொழிக்காக கடைபிடிக்கப்படும் தினங்கள் பின்வருமாறு
    - அரபு மொழி (டிசம்பர் 18)
    - சீன மொழி (ஏப்ரல் 20)
    - ஆங்கிலம் (ஏப்ரல் 23)
    - பிரஞ்சு மொழி (மார்ச் 20)
    - ஸ்பானிய மொழி (ஏப்ரல் 23)
- 2020 ஆம் ஆண்டில், போர்ச்சுக்கீசிய மொழியானது மே 05 ஆம் நாளன்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் போர்ச்சுக்கீசிய மொழி தினமாக இணைக்கப்பட்டது.

## நவ்ரூஸ் – மார்ச் 20

- இது ஈரானியப் புத்தாண்டு ஆகும். இது பாரசீகப் புத்தாண்டு எனவும் அழைக்கப் படுகிறது.
- நவ்ரூஸ் வசந்த காலத்தின் முதல் நாளைக் குறிக்கிறது. இந்நாள் இளவேனிற்கால சம பகல் இரவு நாளன்று கொண்டாடப்படுகிறது.
- இந்தியாவில் பாரசீக சமுதாயத்தினர் நவ்ரூஸ் தினத்தை உற்சாகத்துடன் கொண்டாடி வருகின்றனர்.
- டெல்லி சுல்தான் பால்பன் இவ்விழாவினை இந்தியாவில் அறிமுகப்படுத்தினார்.
- பிறகு, முகலாயப் பேரரசர் ஔரங்கசீப் நவ்ரூஸினை கொண்டாடும் வழக்கத்திற்கு தடை விதித்தார்.

## உலக கைப்பாவைகள் (பொம்மலாட்ட) தினம் – மார்ச் 21

- இத்தினத்தைக் கடைபிடிப்பதற்கான சிந்தனை ஈரானைச் சேர்ந்த பொம்மலாட்டக் கலைஞர் ஜவாத் சொல்பஹாரி அவர்களால் கொண்டு வரப்பட்டது.
- அமெரிக்காவினைச் சேர்ந்த ஜிம் ஹென்சன் கம்பெனி 60 ஆண்டுகளுக்கும் மேலாக பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளின் முதன்மை நிறுவனமாக இருந்து வருகிறது. மேலும், பொம்மலாட்டக் கலையின் புத்தாக்க நிறுவனமாகவும் அது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- பொம்மலாட்டம் என்பது உயிரில்லாத பொம்மைகளைக் கையாளும் ஒரு நாடக நிகழ்ச்சியாகும்.

## உலக வாய்வழி ஆரோக்கிய தினம் – மார்ச் 21

- அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான (2021-2023) கருத்துரு, (உங்கள் வாயைப் பற்றி பெருமை கொள்ளுங்கள்) “Be proud of your mouth” என்பதாகும்.
- இது FDI உலக பல்மருத்துவ நிறுவனத்தின் ஒரு முயற்சியாகும்.

## இனப்பாகுபாட்டை நீக்குவதற்கான சர்வதேச நாள் – மார்ச் 21

- 1966 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொது சபையானது சர்வதேச அமைப்புகளுக்கு, அனைத்து வகையான இனப் பாகுபாட்டினையும் ஒழிப்பதற்கான ஒரு முயற்சியினை இரட்டிப்பாக்கக் கோரி அழைப்பு விடுத்தது.
- அந்நாளில் 1960 ஆம் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவில் உள்ள சாப்பெவிலே என்ற இடத்தில் இனப்பாகுபாடு சட்டங்களை எதிர்த்துப் போராடிய அமைதியான மக்கள் கூட்டத்தின் மீது காவல் துறை துப்பாக்கிச் சூடு நடத்தியது.
- 2021 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "இனப்பாகுபாட்டிற்கு எதிராக நிற்கும் இளைஞர்கள்" என்பதாகும்.




## உலக மனநலிவு (டவுன் சின்ட்ரோம்) நாள் – மார்ச் 21

- இந்நாள் 2011 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொது சபையினால் அறிவிக்கப்பட்டது.
- மார்ச் (வருடத்தின் 3வது மாதம்) மாதத்தின் 21 ஆம் நாள் 21வது குரோமோசோமின் மும்மடங்காதலின் தனித்தன்மையின் முக்கியத்துவத்தை வெளிக்காட்டுவதற்காக தேர்ந்தெடுக்கப் பட்டது.
- டவுன் சின்ட்ரோம் என்பது 21வது குரோமோசோமின் மூன்றாவது நகலின் அனைத்துப் பகுதிகளும் (அ) ஒரு பகுதி மட்டும் அமைந்திருப்பதால் உருவாகும் ஒரு மரபியல் நோயாகும்.




## உலக கவிதை தினம் – மார்ச் 21

- இந்நாள் 1999 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பினால் (UNESCO) அறிவிக்கப்பட்டது.
- இந்நாள் கடைபிடிக்கப்படுவதற்கான முக்கிய நோக்கம் கவிதைகள் மூலம் மொழியின் பன்முகத் தன்மையை ஆதரித்தலும், அழிந்து வரும் மொழிகளை

வெளிக்கொணர்வதற்கான வாய்ப்புகளை அதிகரித்தலும் ஆகும்.




## சர்வதேச வனங்கள் (காடுகள்) தினம் – மார்ச் 21

- இந்நாள் முதன்முறையாக 2013 ஆம் ஆண்டு கடைபிடிக்கப்பட்டது.
- இத்தினத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "காடுகளின் மறுசீரமைப்பு : மீட்சி மற்றும் நல்வாழ்விற்கான பாதை" என்பதாகும்.
- இந்நாளினைக் கடைபிடிக்க தொடங்கிய அமைப்புகள், காடுகளுக்கான ஐக்கிய நாடுகள் மன்றம் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு ஆகியன ஆகும்.
- இந்த வருடக் கருத்துரு, ஐக்கிய நாடுகள் அமைப்பின் சுற்றுச்சூழல் மீள்விற்கான பத்தாண்டுடன் (2021-2030) பொருந்திப் போகின்றது. இது உலகமெங்கிலும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் அதனை மீளச் செய்வதற்குமான ஒரு அழைப்பு ஆகும்.
- காடுகளுக்கான சர்வதேச வருடம் 2011 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொது சபையால் தொடங்கப் பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 23**

# TNPSC துளிகள்

- சினார் படை தனது 80வது உருவாக்கப்பட்ட தினத்தை ஸ்ரீநகரில் கொண்டாடியது.
    - 1942 ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப் போரின் போது பாரக்பூரில் சினார் படை உருவாக்கப் பட்டது.

# தேசியச் செய்திகள்

## காப்பீட்டு திருத்த மசோதா, 2021

- இம்மசோதா 1938 ஆம் ஆண்டு காப்பீட்டுச் சட்டத்தைத் திருத்தி அமைக்கிறது.
- இந்தியக் காப்பீட்டு நிறுவனங்களில் அதிகபட்ச அந்நிய முதலீட்டைச் செய்வதற்கு இம்மசோதா அனுமதியளிக்கிறது.
- இம்மசோதா, இந்திய காப்பீட்டு நிறுவனங்களில் அந்நிய நிறுவனங்களின் முதலீட்டை 49% என்ற அளவிலிருந்து 74% என்ற அளவிற்கு உயர்த்துகிறது.
- மேலும் இம்மசோதா உரிமை மற்றும் கட்டுப்பாடு போன்றவற்றின் மீது உள்ள சில தடைகளையும் நீக்குகிறது.
- அந்நிய நாட்டு நிறுவனங்களிடம் கட்டுப்பாடு இருக்கும் அதே சமயத்தில் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட வகையில் இந்தியாவில் வசிக்கும் குடிமகன்களாக பெரும்பாலான இயக்குநர்கள் மற்றும் முக்கிய மேலாண்மை அலுவலர்கள் இருப்பர்.
- காப்பீட்டு துறையில் அந்நிய முதலீடானது 2000 ஆம் ஆண்டில் முதல்முறையாக 26% என்ற வரம்பு வரை அனுமதிக்கப் பட்டிருந்தது.

## அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்ட சாதியினர்) ஆணை (திருத்த) மசோதா, 2021

- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் சில சாதியினருக்கு என்று சில விதி விலக்குகளுடன் "தேவேந்திர வேளாளர்" என்ற பெயரின் கீழ் ஏழு சாதிகளை உள்ளிடுவதற்கு இம்மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது.
- அவை தேவேந்திர குலத்தான், கடையன், கள்ளடி, குடும்பன், பள்ளன், பன்னாடி மற்றும் வைத்திரியன் ஆகியனவாகும்.
- இம்மசோதா தமிழ்நாட்டிலுள்ள பட்டியலிடப்பட்ட சாதியினர் பட்டியலை மாற்றி அமைப்பதற்காக அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்ட சாதியினர்) ஆணை 1950 என்ற ஆணையினைத் திருத்தி அமைக்க உள்ளது.
- இம்மசோதாவினை சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகம் அறிமுகப் படுத்தியது.
- அரசியலமைப்புச் சட்டமானது வெவ்வேறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் பட்டியலிடப்பட்ட சாதியினர்களை குறிப்பிடுவதற்கு வேண்டி குடியரசுத் தலைவருக்கு அதிகாரமளிக்கிறது.
- மேலும், அறிவிக்கப்பட்ட அந்த பட்டியலின சாதியினர் பட்டியலைத் திருத்தி அமைக்க பாராளுமன்றத்திற்கு அனுமதி அளிக்கிறது.

### உலகின் மிகவும் அபாயகரமான சாலைகள் – அறிக்கை

- இவ்வறிக்கை சுடோபி எனப்படும் ஒரு சர்வதேச ஓட்டுநர் கல்வி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின் அடிப்படையிலானது ஆகும்.
- இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்ட 56 நாடுகளில் தென் ஆப்பிரிக்கா உலகின் மிகவும் அபாயகரமான சாலைகளைக் கொண்டுள்ளது.
- தாய்லாந்து இரண்டாமிடத்திலும் ஐக்கிய அமெரிக்க நாடுகள் மூன்றாமிடத்திலும் உள்ளன.
- இந்தியா நான்காமிடத்தில் உள்ளது.
- உலகின் மிகவும் பாதுகாப்பான சாலைகள் நார்வேயில் உள்ளதாக இவ்வறிக்கை கண்டறிந்துள்ளது.
- இதனையடுத்து ஸ்வீடன் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் பாதுகாப்பான சாலைகளைக் கொண்டுள்ள நாடுகளாகும்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### ஐஎன்எஸ் துருவ்

- எதிரி நாட்டு செயற்கைக் கோள்களைக் கண்காணிக்கவும், ஏவுகணை அச்சுறுத்தல்களைக் கண்டறியவும், இந்தியப் பெருங்கடல் பகுதியை வரைபடமிடவும் உதவும் ஐஎன்எஸ் துருவ் என்ற கப்பல் இந்தியக் கடற்படையில் இணையவுள்ளது.
- விசாகப்பட்டினத்திலுள்ள "இந்துஸ்தான் ஷிப்யார்ட்" நிறுவனத்தின் கப்பல்கட்டும் தளத்தில் இக்கப்பல் கட்டமைக்கப் பட்டுள்ளது.
- இக்கப்பல் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனம் (DRDO) மற்றும் இந்தியக் கப்பற்படையின் உதவியுடன் இந்தியாவின் யுக்திசார் படைகள் மற்றும் தேசிய தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் (NTRO) ஆகியவற்றால் உருவாக்கப்பட்டுள்ளது.
- ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐக்கிய ராஜ்ஜியம், சீனா, ரஷ்யா மற்றும் பிரான்சு ஆகிய P5 நாடுகளைத் தவிர இத்தகைய கப்பலைக் கெண்டுள்ள ஒரே நாடு இந்தியா ஆகும்.
- இந்தியாவின் பெருங்கடல் பகுதிகளை கண்காணிப்பதற்கான வசதியை மேம்படுத்த இக்கப்பல் ஒரு முக்கிய பங்கு வகிக்கும்.




## கனரக உலோகங்களை தரமான முறையில் அகற்றுதல்

- ❖ மாண்டி இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (IIT) பயோபாலிமரை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளைப் பயன்படுத்தி மீண்டும் உபயோகிக்கக் கூடிய ஒரு இழைம சவ்வு வடிகட்டியினை உருவாக்கியுள்ளது.
- ❖ இது தண்ணீருந்து கனரக உலோகங்களைப் பிரித்தெடுக்க உதவுகிறது.
- ❖ இந்த சவ்வுகள் சைட்டோசான் எனப்படும் பயோபாலிமரை அதிகளவில் கொண்ட பரப்பு இழுபொருள்களை (உலோகங்களை ஈர்த்துத் தக்க வைத்துக் கொள்ளும் பொருட்கள்) கொண்டுள்ளது.
- ❖ சைட்டோசான்கள் ஒரு செயற்கை பாலிமரான நைலானுடன் கலக்கப்பட்ட நண்டுகளின் ஓடுகளிலிருந்து உருவாக்கப் பட்டுள்ளன.
- ❖ பொதுவாக, வழக்கமான வடிகட்டும் அமைப்புக்கான கலன்களை அமைக்கப் பயன்படும் இழைகள், அதிவேக வாயுக்களைப் பயன்படுத்தி உருகச் செய்தல் (Melt blowing)என்ற முறையில் உருவாக்கப் படுகின்றன.
- ❖ ஆனால் மாண்டி IIT கல்வி நிறுவனமானது "Solution blowing" எனும் முறையினைப் பயன்படுத்தியுள்ளது.
- ❖ இம்முறையில் மேற்பரப்பினைப் பெருமளவில் அதிகப்படுத்தும் நானோ மீட்டர் அளவே விட்டமுடைய இழைகள் உருவாக்கப் படுகின்றன.
- ❖ அவை அதன் மேற்பரப்பினை அதிகரிக்கச் செய்து கனரக உலோகங்களை தரமான முறையில் பிரித்தெடுக்க உதவுகிறது.

## உயர் மின்னணு நகர்திற மின்பெருக்கி (High Electron Mobility Transistors – HEMTs)

- ❖ இந்திய அறிவியலாளர்கள் காலியம் நைட்ரைடிலிருந்து (GaN) மிகவும் ஏதுவான HEMT என்ற பெருக்கிகளை உருவாக்கியுள்ளனர்.
- ❖ இது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட முதல் HEMT உபகரணமாகும்.
- ❖ மின்சார கார்கள், இரயில் என்ஜின்கள், மின் பரிமாற்றம், அதிக மின்னழுத்தம் மற்றும் அதிக அதிர்வெண்ணுடைய நிலைமாற்றல் ஆகியவை அவசியமான மற்ற பிற பகுதிகளிலும் இந்த உபகரணம் மிகவும் பயனுள்ளதாகும்.
- ❖ மேலும் மின்பெருக்கி தயாரிக்கும் தொழில்நுட்பத்தில் இது இந்தியாவைச் சுயசார்பு உடையதாக மாற்றும்.
- ❖ மின்னணுப் பொருட்களில் பயன்படும் இது போன்ற நிலையான மற்றும் தரமான மின்பெருக்கிகளை இறக்குமதி செய்வதற்கான செலவையும் இது குறைக்கும்.
- ❖ இது பொதுவாக ஒரு OFF சாதனமாகும்.
- ❖ இது 4A வரையிலான மின்னோட்டத்தை நிலை மாற்றவும், 600V மின்னழுத்தத்தில் செயல்படும் ஒரு சாதனமாகும்.
- ❖ HEMT பெருக்கிகள் டிஜிட்டல் ON-OFF நிலைமாற்றிகளாக ஒருங்கிணைந்த சுற்றுகளில் பயன்படுத்தப் படுகின்றன.
- ❖ சாதாரணமான மின்பெருக்கிகளை காட்டிலும், மில்லி மீட்டர் அதிர்வெண்கள் வரை அதிக அதிர்வெண்ணில் HEMT மின்பெருக்கிகள் செயல்பட இயலும்.
- ❖ HEMT பெருக்கிகள் கைபேசிகள், செயற்கைக் கோள் தொலைகாட்சி ஏற்பிகள், மின்னழுத்த மாற்றிகள், மற்றும் ரேடார் உபகரணங்கள் போன்ற உயர் அதிர்வெண் பொருட்களில் பயன்படுத்தப் படுகின்றன.

- இவை பெரும்பாலும் செயற்கைக் கோள் ஏற்பிகளிலும் குறை மின்பெருக்கிகளிலும் பாதுகாப்புத் தொழில்துறைகளிலும் உபயோகப்படுத்தப் படுகின்றன.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### ஆசிய சுற்றுச்சூழல் அமலாக்க விருது – 2020

- வனவிலங்கு குற்றத் தடுப்பு வாரியம் 2020 ஆம் ஆண்டிற்கான ஆசிய சுற்றுச்சூழல் அமலாக்க விருதினைப் பெற்றுள்ளது.
- இந்த விருது ஐக்கிய நாடுகள் அமைப்பின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பினால் வழங்கப் பட்டது.
- இதற்கு முன்பு, இந்த வாரியம் இதே பிரிவில் 2018 ஆம் ஆண்டில் இவ்விருதினைப் பெற்றது.
- இது வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972 என்ற சட்டத்தின் கீழ், அமைக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- முதன்முறையாக இந்தியாவின் ஒரிசாவைச் சேர்ந்த பெண் வனத்துறை அலுவலர் சஷ்மிதா லென்காவிற்கு ஐ.நா.வின் சுற்றுச்சூழல் அமலாக்க விருது அளிக்கப்பட்டது.



# மாநிலச் செய்திகள்

## SAAMAR திட்டம்

- ஜார்க்கண்ட் அரசானது ஊட்டச்சத்து குறைபாட்டினைப் போக்குதல் மற்றும் இரத்த சோகையினை குறைத்தல் (SAAMAR - Strategic Action for Alleviation of Malnutrition and Anaemia Reduction) என்ற ஒரு திட்டத்தினை தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- இத்திட்டம் அந்த மாநிலத்தில் நிலவும் ஊட்டச்சத்து குறைபாடுகளைப் போக்குவது தொடர்பான செயல்களை கையாளும்.
- இத்திட்டம் 1000 நாட்கள் என்ற ஒரு இலக்கை முன் வைத்து தொடங்கப் பட்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

## பீகார் தினம் – மார்ச் 22

- பீகார் மாநிலம் உருவாக்கப்பட்டதை நினைவு கூற வேண்டி இத்தினம் கடைபிடிக்கப் படுகிறது.
- இதே நாளில் தான் 1912 ஆம் ஆண்டில் வங்காளத்திலிருந்து இம்மாநிலத்தை பிரிட்டிஷ் அரசு பிரித்தது.

## உலக தண்ணீர் தினம் – மார்ச் 22




- முதல் உலக தண்ணீர் தினம் 1993 ஆம் ஆண்டில் ஐ.நா.வினால் அறிவிக்கப்பட்டது.
- UN-Water என்ற அமைப்பு தான் உலக தண்ணீர் தினத்தை தொடங்கி வைத்தது.
- உலக தண்ணீர் தினத்தையொட்டி ஒவ்வொரு வருடமும் ஐ.நா. உலக தண்ணீர் மேம்பாட்டு (WWDR) அறிக்கை வெளியிடப் படும்.
- நன்னீர் வள ஆதாரங்களை நிலையான முறையில் மேலாண்மை செய்வதை

வலியுறுத்தவே இந்நாள் கடைபிடிக்கப் படுகிறது.

- 2021 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "தண்ணீருக்கு மதிப்பளித்தல்" மற்றும் "தங்களைப் பொருத்தவரை தண்ணீர் என்பது என்ன? என்பது பற்றிய உரையாடல்" ஆகும்.
- ஒவ்வொரு நாளுக்குமான கருத்துரு, 6வது நிலையான மேம்பாட்டுக் குறிக்கோளின் இலக்குடன் ஒத்துப் போகும் வகையில் தூய்மையான நீர், சுகாதாரம் மற்றும் துப்புரவு போன்றவற்றில் அதிக ஈடுபாடு செலுத்துகிறது.

## உலக வானிலை தினம் – மார்ச் 23

- இந்நாள் உலக வானிலை அமைப்பு (WMO) அமைக்கப்பட்டதை கொண்டாடுவதற்காக வேண்டி கடைபிடிக்கப் படுகிறது.
- 1961 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் உலக வானிலை தினமானது மார்ச் 23 அன்று கடைபிடிக்கப்பட்டு வருகிறது.
- இந்த ஆண்டுற்கான இத்தினத்தின் கருத்துரு, "பெருங்கடல், நமது காலநிலை மற்றும் வானிலை" என்பதாகும்.
- உலக வானிலை அமைப்பு1950 ஆம் ஆண்டு மார்ச் 23 அன்று நிறுவப்பட்டது.
- இது ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான பெருங்கடல் அறிவியல் பத்தாண்டின் (2021-30) அறிவிப்புடன் இணைந்து வருகிறது.
- சர்வதேச வானிலை அமைப்பு 1873 ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவில் உள்ள வியன்னாவில் நடைபெற்ற முதல் சர்வதேச வானிலை மாநாட்டில் தொடங்கப்பட்டது.
- சர்வதேச வானிலை அமைப்பு 1950 ஆம் ஆண்டு 23 மார்ச் அன்று உலக வானிலை அமைப்பாக மாறியது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 24**

# TNPSC துளிகள்

- சமீபத்தில் தாய்வான் நாடானது டிவிட்டரில் “Freedom pineapple” எனும் ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கி உள்ளது.
  - தாய்வானிலிருந்து சீனாவிற்கு அன்னாசிப் பழங்களை இறக்குமதி செய்வது மீதான தடைக்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாக இது தொடங்கப்பட்டது.
- அருணாச்சலப் பிரதேசமானது, மாநிலத்தின் முதல் அலுவல்சார் சுதேசி மொழி மற்றும் அறிவு அமைப்புப் பள்ளியான “நியூபு நைவ்காம் யேர்கோ” (Nyubu Nyvgam Yerko) என்ற பள்ளியினைத் திறந்து வைத்துள்ளது.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த தொழில்முறை டேபிள் டென்னிஸ் விளையாட்டு வீரரான சரத் கமல் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தேர்வான முதல் இந்தியர் ஆவார்.

# தேசியச் செய்திகள்


## சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் கட்டுப்பாடு) திருத்த மசோதா, 2021

- இம்மசோதா 1957 ஆம் ஆண்டு கனிமங்கள் (மேம்பாடு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தினைத் திருத்தி அமைக்க உள்ளது.
- இது மூலோபாய மற்றும் வணிகச் சுரங்களுக்கிடையேயான வேறுபாட்டை அகற்றச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மாவட்டக் கனிம அறக்கட்டளையினால் பராமரிக்கப்படும் நிதிகளின் அமைப்பு மற்றும் பயன்பாடு குறித்த வழிமுறைகளை வழங்குவதற்கு வேண்டி மத்திய அரசிற்கு அதிகாரமளிக்கிறது.
- ஏதேனும் ஒரு சுரங்கத்தை (நிலக்கரி, லிக்னைட் மற்றும் அணு கனிமங்கள் தவிர) ஏலத்தின் மூலம் ஒரு குறிப்பிட்ட தாதுவின் உற்பத்தி மீதான பயன்பாட்டிற்காக (எஃகு தொழிற்சாலைக்கான இரும்புத் தாது) குத்தகைக்கு விடுவதற்கு மத்திய அரசிற்கு இம்மசோதா அனுமதியளிக்கிறது.
- 1957 ஆம் ஆண்டு கனிமங்கள் (மேம்பாடு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், கனிமங்களுக்கான சலுகை ஏலங்களை (நிலக்கரி, லிக்னைட் மற்றும் அணு கனிமங்கள் தவிர) மாநில அரசுகள் நடத்தும் எனக் கூறுகிறது.

## கென் – பெட்வா நதியிணைப்பு

- மத்தியப் பிரதேசம் மற்றும் உத்திரப் பிரதேசம் மாநில முதல்வர்கள் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கென்-பெட்வா நதியிணைப்புத் திட்டத்தினை அமல்படுத்த செய்வவதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.
- இது நாட்டின் முதல் நதியிணைப்புத் திட்டமாகும்.
- இத்திட்டம், வறட்சியால் பாதிக்கப்பட்ட பந்தேல்கண்ட் பகுதிக்கு நீர்ப்பாசன வசதியை வழங்குவதற்காக மத்தியப் பிரதேசத்திலுள்ள கென் நதியிலிருந்து உத்திரப் பிரதேசத்திலுள்ள பெட்வா நதிக்கு உபரி நீரை வழங்கும் நோக்கத்தை கொண்டுள்ளது.
- கென் மற்றும் பெட்வா ஆகிய நதிகள் மத்தியப் பிரதேசத்தில் உருவாகின்றன. இவை யமுனை ஆற்றின் துணை ஆறுகளாகும்.

- கென் நதியானது உத்திரப் பிரதேசத்தின் பன்டா மாவட்டத்தில் யமுனை ஆற்றினையும் உத்திரப் பிரதேசத்திலுள்ள ஹமீர்பூர் மாவட்டத்தில் பெட்வா நதியினையும் சந்திக்கிறது.
- கென் நதி மத்தியப் பிரதேசத்திலுள்ள பன்னா புலிகள் காப்பகத்தின் வழியே கடந்து செல்கிறது.
- தௌதான் அணையின் கட்டுமானத்தால் பன்னா புலிகள் காப்பகத்தின் 10% முக்கிய வாழிடப் பகுதியானது நீரில் மூழ்கும்.




## கிராம் உஜாலா திட்டம்

- இந்திய அரசு கிராமப்புறப் பகுதிகளில் விலை மலிவான LED பல்புகளை வழங்குவதற்கான “கிராம் உஜாலா திட்டத்தினை” தொடங்கியுள்ளது.
- இது கிராமப்புறப் பகுதிகளில் வெறும் ரூ. 10க்கு உலகின் விலைமலிவான LED பல்புகளை வழங்குகிறது.
- மேலும் இது கிராமப்புற நுகர்வோர்களிடமிருந்து ஒளிரும் விளக்குகள் மற்றும் CFL (சிறிய ஒளிரும் விளக்குகள்) பல்புகளைத் திரும்ப பெறவும் வேண்டி விதிமுறைகளை கூறியுள்ளது.
- இத்திட்டமானது அரசின் ஆதரவுடனோ (அ) மானியத்துடனோ தொடங்கப்படவில்லை.
- இத்திட்டம் முற்றிலும் கார்பன் வரவினத்தின் (Carbon Credits) மூலமாக நிதியைப் பெறும்.
- இந்நிதியானது, ஐ.நா.வின் தூய்மை மேம்பாட்டு நடைமுறையின் (CDM) கீழ் கோரப் படும்.
- இது இந்தியாவில் இது போன்ற திட்டங்களில் முதல் வகையாகும்.
- இத்திட்டம் மத்திய மின்துறை மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் துறை அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டது.
- முதல் கட்டமாக இத்திட்டம் பீகாரிலுள்ள ஆரா மாவட்டத்தில் தொடங்கப்பட்டது.
- இக்கட்டத்தில் சுமார் 15 மில்லியன் LED பல்புகள் ஆரா (பீகார்), விஜயவாடா (ஆந்திரப் பிரதேசம்), வாரணாசி (உத்தரப்பிரதேசம்), நாக்பூர் (மகாராஷ்டிரா) மற்றும் மேற்கு குஜராத் ஆகிய மாவட்டங்களின் கிராமங்களுக்கு வழங்கப்படும்.
- 2014 ஆம் ஆண்டில், முந்தைய உன்னத் ஜோதி திட்டம், அனைவருக்கும் கிடைக்கக்

கூடிய வகையிலான மின்விளக்குகள் (உஜாலா) திட்டத்தின் கீழ் LED பல்புகளின் விலையினைப் பெருமளவில் குறைத்து இருந்தது.

- மதிப்பின் அடிப்படையில் இந்தியாவானது உலகின் இரண்டாவது பெரிய LED பல்புகளின் சந்தையாக உள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## காப்புரிமை தொடர்பான ஒத்துழைப்பு

- இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள், அந்தந்த நாடுகளில் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு சர்வதேச காப்புரிமை விண்ணப்பித்திற்கான சர்வதேச தேடல் மற்றும் சர்வதேச முதன்மை ஆய்வு ஆணையமாக ஒன்றுக்கொன்று செயல்படுவதற்கு வேண்டி தங்களது அலுவலகங்களுக்கு அங்கீகாரம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளன.
- இம்முடிவானது சமீபத்தில் நடைபெற்ற காப்புரிமை நடவடிக்கை நெடுஞ்சாலைத் திட்டத்தின் மறு ஆய்வு சந்திப்பின் போது மேற்கொள்ளப்பட்டது.
- காப்புரிமை நடவடிக்கை நெடுஞ்சாலைத் திட்டம் என்பது சில காப்புரிமை அலுவலகங்களிடையே தகவல்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் விரைவான காப்புரிமை நடவடிக்கை செயல்முறைகளை வழங்குவதற்கான ஒரு முன் முயற்சிகளின் தொகுப்பாகும்.

## உலகளாவிய வீட்டுவிலைக் குறியீடு

- சமீபத்தில் வெளியான உலகளாவிய வீட்டுவிலைக் குறியீட்டில் இந்தியா 56வது இடத்தைப் பெற்று கடைசி இடத்தில் உள்ளது.
- இக்குறியீடு Knight Frank என்ற அமைப்பால் வெளியிடப்பட்டுள்ளது.
- இவ்வறிக்கையின்படி, நியூசிலாந்து (19%), ரஷ்யா (14%), ஐக்கிய அமெரிக்க நாடுகள் (10%), கனடா மற்றும் ஐக்கிய ராஜ்ஜியம் (இரண்டும் 9%) போன்ற நாடுகளின் சந்தைகளில் தரவரிசையில் விரைவான வளர்ச்சியானது ஏற்பட்டுள்ளது.
- இத்தரவரிசையில் துருக்கியானது தொடர்ந்து முன்னிலை வகுத்து வருகிறது, அதனை அடுத்து நியூசிலாந்து மற்றும் ஸ்லோவாகியா ஆகிய நாடுகள் உள்ளன.

## 2011 இஸ்தான்புல் ஒப்பந்தம்

- பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கவும் அவற்றை எதிர் கொள்வதற்குமான உலகின் முதல் பிணைப்பு ஒப்பந்தத்திலிருந்து துருக்கி வெளியேறி உள்ளது.

- 2011 இஸ்தான்புல் ஒப்பந்தமானது குடும்ப வன்முறை மற்றும் திருமணம் சார்ந்த வன்புணர்வு ஆகியவற்றினைக் குற்றங்களாகக் கருதி வழக்குப் பதிவு செய்வதற்கான சட்டத்தை இயற்றக் கோரி அரசுகளுக்குக் கோரிக்கை விடுத்தது.
- இது ஐரோப்பிய மன்றத்தின் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிரான ஒரு மனித உரிமைகள் ஒப்பந்தமாகும்.




## உலகின் வலிமையான இராணுவப் படை

- சீனாவானது உலகின் வலிமையான இராணுவப் படையைக் கொண்டுள்ளது.
- ஐக்கிய அமெரிக்க நாடுகள் இரண்டாமிடத்திலும் ரஷ்யா மூன்றாமிடத்திலும் உள்ளன.
- இந்தியா நான்காமிடத்தில் உள்ளது.
- இது பாதுகாப்பு வலைதளமான Military Direct என்ற தளத்தினால் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வு அறிக்கையாகும்.

# மாநிலச் செய்திகள்

## எத்தனால் உற்பத்தி மேம்பாட்டுக் கொள்கை, 2021

- பீகார் அமைச்சரவையானது இக்கொள்கைக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- எத்தனால் உற்பத்தி மேம்பாட்டுக் கொள்கையைக் கொண்டுள்ள முதல் இந்திய மாநிலமாக பீகார் உருவெடுத்துள்ளது.
- இக்கொள்கை சோளத்திலிருந்து எத்தனாலை உற்பத்தி செய்வதற்கு அனுமதி அளிக்கிறது.
- இதற்கு முன்பு, கரும்பிலிருந்து மட்டுமே எத்தனால் உற்பத்தி செய்ய அனுமதி இருந்தது.
- இதுவரை, B-ரக கனசர்க்கரைக் கழிவு, C-ரக கனசர்க்கரைக் கழிவு, மனிதன் உட்கொள்வதற்குத் தகுதியற்ற தானியங்கள், கரும்புச் சாறு, சர்க்கரை, சர்க்கரைப் பாகு, உபரி அரிசி மற்றும் சோளம் ஆகியவற்றிலிருந்து எத்தனால் உற்பத்தி செய்ய இந்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

## நகைக் கடைகள் – கர்நாடகா

- கர்நாடக மாநில அரசானது சில்லறை நகை விற்பனை நிலையங்களைத் திறக்க

திட்டமிட்டுள்ளது.

- இது கர்நாடக முத்திரையுடன் (Brand) இந்த மஞ்சள் உலோகத்தை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.
- மேலும் அந்த மாநிலச் சின்னமான "கண்டபெருன்டா" சின்னத்துடன் (புராண காலத்தைச் சேர்ந்த இரட்டைத் தலை பறவை) கூடிய தங்க நாணயங்களை விற்பனை செய்யவும் திட்டமிட்டுள்ளது.
- நாட்டில் தங்கம் உற்பத்தி செய்யும் ஒரே மாநிலம் கர்நாடகமாகும்.
- கர்நாடக அரசானது ஹட்டி தங்கச் சுரங்கங்களை நவீனமயமாக்க திட்டமிட்டுள்ளது.
- மேலும் ஹட்டி தங்கச் சுரங்க நிறுவனத்தை கர்நாடக மாநில (ஹட்டி) தங்கச் சுரங்கங்கள் நிறுவனம் எனப் பெயர் மாற்றம் செய்யவும் திட்டமிட்டுள்ளது.
- மேலும் அம்மாநில அரசு, கல்யாணா பகுதியில் அப்பகுதியின் ஒட்டு மொத்த மேம்பாட்டிற்காக நகைகளுக்கான ஒரு பிரத்தியேக சிறப்புப் பொருளாதார மண்டலத்தினை அமைக்க திட்டமிட்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தோமர் அரசர் இரண்டாம் அனங்கபாலர்



- சமீபத்தில் அரசானது, 11வது நூற்றாண்டைச் சேர்ந்த தோமர் வம்ச அரசரான இரண்டாம் அனங்கபாலரின் மரபினை பிரபலப்படுத்துவதற்காக ஒரு குழுவினை அமைத்து உள்ளது.
- இரண்டாம் அனங்கபாலர் அவர்கள் தோமர் வம்சத்தினைச் சேர்ந்தவராவார்.
- அவ்வம்சத்தினர் 8 ஆம் நூற்றாண்டு மற்றும் 12 ஆம் நூற்றாண்டு ஆகியவற்றுக்கு இடைப்பட்ட காலங்களில் தற்போதைய தில்லி மற்றும் ஹரியானா பகுதிகளில் ஆட்சி செய்தனர்.
- இரண்டாம் அனங்கபால தோமரை அடுத்து அவரது பேரன் பிரித்திவிராஜ் சௌகான் அரியணை ஏறினார்.
- சௌகான் தரைன் போரில் (தற்போதைய ஹரியானா) குரித் படைகளை (Ghurid forces) தோற்கடித்தார்.
- அப்போருக்குப் பிறகு 1192 ஆம் ஆண்டில் டெல்லி சுல்தானியமானது நிறுவப் பட்டது.
- 8 ஆம் நூற்றாண்டில் இரண்டாம் அனங்க பாலரின் ஆட்சியின் போது தோமர் வம்சம்

தனது தலைநகரைத் தில்லிகாபுரிக்கு (தில்லி) மாற்றியது.

- இவரே டெல்லி எனும் அதன் தற்போதைய பெயரை அதற்கு வழங்கியவராவார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 25**

# TNPSC துளிகள்

- சர்வதேசக் கூட்டு ஆணையத்தினால் (Joint Commission International - JCI) அங்கீகாரம் பெற்ற 39 இந்திய மருத்துவமனைகளில் ஒன்றாகவும் சென்னையில் மூன்றாவது மருத்துவமனையாகவும் MGM ஹெல்த்கேர் மருத்துவமனை மாறியுள்ளது.
  - JCI என்பது ஐக்கிய அமெரிக்க நாடுகளை மையமாகக் கொண்டு உலகெங்கிலும் உள்ள மருத்துவமனைகளுக்கு அவற்றின் தரம் மற்றும் நோயாளிகளின் பாதுகாப்பு ஆகிய வரைமுறைகளின் அடிப்படையில் அங்கீகாரம் வழங்கும் ஒரு இலாப நோக்கமற்ற நிறுவனமாகும்.
- ஓய்வூதியம் பெறுவதற்குக் கட்டாயமான ஜீவன் பிரமாண் எனப்படும் டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழைப் பெறுவதற்கு இனி ஆதார் கட்டாயமில்லை.
  - மேலும் அரசானது, தனது உடனடி குறுஞ்செய்தித் தீர்வு தளமான “சந்தேஷ்” என்பதற்கு ஆதார் சரிபார்ப்பு என்பது தன்னார்வ அடிப்படையிலானது என்று கூறியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தேவேந்திரகுல வேளாளர் மசோதா

- சமீபத்தில் பாராளுமன்றம் அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்ட சாதியினர்) ஆணை (திருத்த) மசோதா, 2021 என்ற மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இம்மசோதா தமிழ்நாட்டில் ஒரு சில குறிப்பிட்ட மாவட்டங்களில் வாழும் ஏழு பட்டியலிடப்பட்ட சாதியினர் சமுதாயத்தை “தேவேந்திர குல வேலாளர்” என்பதின் கீழ் கொண்டு வர உள்ளது.
- அந்த ஏழு சாதிகள்
  - தேவேந்திர குலத்தான்
  - காலாடி
  - குடும்பன்
  - பள்ளன்
  - பண்ணாடி
  - வத்திரியன்
  - கடையன் (திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில்)
- வெவ்வேறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள பட்டியலிடப்பட்ட சாதியினருக்கான பட்டியலைக் குறிப்பிடுவதற்கு அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 341 குடியரசுத் தலைவருக்கு அதிகாரமளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- மேலும், இது இப்பட்டியலை மாற்றியமைக்க பாராளுமன்றத்திற்கு அனுமதி அளித்து இருக்கிறது.

# தேசியச் செய்திகள்

## ஜல்சக்தி அபியான் : மழைநீர் சேமிப்பு (Catch the Rain)

- இத்திட்டமானது மார்ச் 22 முதல் நவம்பர் 30 வரை, நாட்டில் மழைக்காலத்திற்கு முந்தைய காலம் மற்றும் மழைக் காலம் ஆகியவற்றின் போது அமல்படுத்தப்படும்.
- இப்புதிய திட்டத்தின் கருத்துரு, "Catch the Rain, where it falls when it falls" (எங்கெல்லாம் மற்றும் எப்பொழுதெல்லாம் மழை விழுகின்றதோ அதைப் பிடியுங்கள்) என்பதாகும்.
- இத்திட்டம் கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகள் என இந்தியா முழுவதும் அமல்படுத்தப் படும்.




## மத்தியச் சட்டத்திற்கு எதிராக மாநிலச் சட்டம்

- மத்தியச் சட்டங்களுக்கு எதிராக மாநிலச் சட்டமன்றங்களில் இயற்றப்படும் தீர்மானங்களில் எந்த தவறும் இல்லை என்று முதற்கட்ட ஆதாரத்தின் (Prime Facie) அடிப்படையில் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
- சமீபத்தில், கேரளா மற்றும் மேற்கு வங்க மாநிலச் சட்டமன்றங்கள் குடியுரிமை திருத்தச் சட்டம் மற்றும் புதிய வேளாண் சட்டம் ஆகிய மத்தியச் சட்டங்களுக்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்றின.
- இத்தகைய தீர்மானங்கள் பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு "கருத்தே" தவிர அவை சட்டமென்று எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

## நிலப்பரப்பிலிருந்து வானிலுள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் நடுத்தர வரம்புடைய ஏவுகணை (MRSAM)

- கல்யாணி ரஃபல் மேம்படுத்தப் பட்ட அமைப்புகள் (KRAS - Kalyani Rafael Advanced Systems) என்ற அமைப்பானது அதன் முதல் MRSAM (Medium Range Surface to Air Missile) தொகுதியை வெளியிட்டுள்ளது.
- KRAS என்பது கல்யாணி இந்தியக் குழுமம் மற்றும் இஸ்ரேலின் ரஃபேல் மேம்பட்ட பாதுகாப்பு அமைப்பு (Rafeal Advanced Defense systems) ஆகியவற்றின் ஒரு கூட்டுக் குழுமம் ஆகும்.

- இந்த ஏவுகணை இந்திய இராணுவப்படை மற்றும் இந்திய வான்படைக்காக வழங்கப் பட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## எரிமலை பிணைப்பு ஒப்பந்தம்

- எரிமலைகள் தொடர்பான பேரழிவுகளை எதிர்கொள்ள வேண்டி டேனிஷ் செஞ்சிலுவைச் சங்கமானது இந்த வகையில் முதன்முதலான ஒரு பேரழிவுப் பிணைப்பு ஒப்பந்தத்தை உருவாக்கியுள்ளது.
- 10 எரிமலைகளின் சீற்றத்தினால் பாதிக்கப்படும் நாடுகளுக்கு விரைவில் நிதி உதவியைப் பெற்றிட உதவி பெற வேண்டி பேரழிவு நிவாரண அமைப்புகளுக்கு இந்த ஒப்பந்தம் வழிவகை செய்யும்.
- அவை சிலி, ஈக்வெடார், கேமரூன், கொலம்பியா, மெக்சிகோ, கௌதிமாலா மற்றும் இந்தோனேசியா ஆகியனவாகும்.

## கூட்டு விண்வெளித் திட்டம்

- இந்தியா மற்றும் பிரான்சு ஆகிய நாடுகள் மூன்றாவது கூட்டு விண்வெளித் திட்டத்திற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றன.
- இஸ்ரோ மற்றும் பிரான்சின் விண்வெளி நிறுவனமான CNES (National Centre for Space Studies) ஆகியவை இணைந்து இதுவரை இரண்டு கூட்டு விண்வெளித் திட்டத்தினை மேற்கொண்டுள்ளன.
- முதல் திட்டம் 2011 ஆம் ஆண்டில் விண்ணில் செலுத்தப்பட்ட "மெகா டிராபிக்ஸ்" மற்றும் மற்றொன்று 2013 ஆம் ஆண்டில் ஏவப்பட்ட "சாரல் - அல்டிகா" ஆகியனவாகும்.

## பாபி – தீவிரவாதத்திற்கு எதிரான பயிற்சி – 2021

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு இந்த வருடம் தீவிரவாதத்திற்கு எதிரான கூட்டுப் பயிற்சியினை மேற்கொள்ள உள்ளது.
- இது உஸ்பெகிஸ்தானிலுள்ள தாஷ்கண்டில் நடைபெற்ற பிராந்திய தீவிரவாதத்திற்கு எதிரான அமைப்பின் (RATS) கூட்டத்தின் போது அறிவிக்கப்பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இமாலயப் பனிப்பாறைகளின் ரேடார் ஆய்வறிக்கை


- இமாலயப் பனிப்பாறைகளின் தடிமனைக் கணக்கிடுவதற்காக ஒரு வான்வழி ரேடார் ஆய்வினை மேற்கொள்வதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளது.
- இந்த முன்னோட்ட ஆய்வானது இமாச்சலப் பிரதேச மாநிலத்தின் லகௌல்-ஸ்பிதி படுகையில் மேற்கொள்ளப் படும்.
- இது புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ், துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தினால் (NCPOR – National Centre for Polar Ocean Research) முன்மொழியப் பட்டது.

- இந்தியா, தீவிரமான வானிலை நிகழ்வுகளால் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகும் நாடுகளில் ஒன்றாகும்.
- மேலும் காலநிலை ஆபத்துக் குறியீட்டில் இந்தியா 20வது இடத்திலுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## காந்தி அமைதிப் பரிசு – 2020

- இந்திய அரசின் கலாச்சாரத் துறை அமைச்சகமானது 2020 ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதிப் பரிசினை பங்கபந்து ஷேக் முஜிபூர் ரஹ்மானிற்கு வழங்கியுள்ளது.
- 2019 ஆம் ஆண்டிற்கான பரிசு ஓமனின் சுல்தான் கபூஸ் பின் சையத் அல் சையத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.
- ஷேக் முஜிபூர் ரஹ்மான் அவர்கள் வங்க தேசத்தின் முதல் குடியரசுத் தலைவர் மற்றும் முதல் பிரதம அமைச்சர் ஆவார்.
- இவர் அந்நாட்டின் "தேசத் தந்தை" (அ) "முஜிப்" என அழைக்கப்பட்டார்.
- 1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று இவர் படுகொலை செய்யப்பட்டார்.
- இப்பரிசு இந்திய அரசால் வழங்கப்படும் ஒரு சர்வதேச காந்தி அமைதிப் பரிசாகும்.
- இவ்விருது 1995 ஆம் ஆண்டில் மோகன்தாஸ் காந்தியின் 125வது பிறந்தநாள் விழா அன்று தொடங்கப்பட்டது.
- இவ்விருது இனம், தேசம், பாலினம் (அ) சமய நம்பிக்கை என எதையும் சாராமல் அனைத்து நபர்களுக்கும் வழங்கப்படக் கூடியதாகும்.





## SERB மகளிர் சிறப்பு விருது

- ஹைதராபாத்தை சேர்ந்த தேசிய விலங்குகள் உயிரித் தொழில்நுட்ப நிறுவன (NIAB - National Institute of Animal Biotechnology) அறிவியலாளர் சோனு காந்தி SERB மகளிர் சிறப்பு விருதினைப் பெற்றுள்ளார்.
- இவர் சமீபத்தில் முடக்குவாதம், இருதய நோய்கள் மற்றும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் (Japanese encephalitis) போன்ற நோய்களைக் கண்டறிவதற்கான ஒரு அதிதிறன் நானோ உபகரணத்தை வடிவமைத்துள்ளார்.

- இந்த விருது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியத்தினால் (SERB - Science and Engineering Research Board) தொடங்கப் பட்டது.
- அறிவியல் மற்றும் பொறியியலில் சிறந்து விளங்கும் இளம் சாதனைப் பெண்மணிகளுக்கு இவ்விருது அங்கீகாரத்தையும் விருதினையும் வழங்குகிறது.

# முக்கிய தினங்கள்

## உலக காசநோய் தினம் – மார்ச் 24




- 1882 ஆம் ஆண்டு மார்ச் 24 அன்று டாக்டர் இராபர்ட் காசநோய் உருவாகுவதற்கு "டிபி பேசில்லஸ்" என்ற பாக்டீரியா தான் காரணம் என்று அறிவித்த நாளினை நினைவு கூரும் விதமாக இந்நாள் கடைபிடிக்கப் படுகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான உலக காசநோய் தினத்தின் கருத்துரு, "கடிகார முள் நகர்ந்துக் கொண்டிருக்கிறது" (The clock is ticking) என்பதாகும்.
- காசநோய் என்பது இந்தியாவில் நிலவும் மிகப் பெரிய சுகாதாரப் பிரச்சினைகளில் ஒன்றாகும்.
- இது மைக்கோபாக்டீரியம் டியூபர்குளோசிஸ் எனப்படும் ஒரு பாக்டீரியத்தால் உருவாக்கப் படுகிறது.
- இந்த பாக்டீரியா நுரையீரல், சிறுநீரகம், முதுகுத் தண்டு, மூளை ஆகியவற்றைப் பாதிக்கிறது.
- 2020 ஆம் ஆண்டில் இந்திய அரசு தனது தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தின் மூலம் 2025 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் காசநோயினை ஒழிப்பதாக அறிவித்துள்ளது.
- நிக்சய் போஷன் யோஜனா என்பது காசநோய் நோயாளிகளுக்கு உணவு வாங்குவதற்கு மாதத்திற்கு ரூ.500 வழங்கும் இந்திய அரசின் ஒரு திட்டம் ஆகும்.
- இது உலக சுகாதார அமைப்பினால் தொடங்கப்பட்ட பதினோரு உலகளாவிய பொது சுகாதார திட்டங்களில் ஒரு பிரச்சார தினமாகும்.
- அவை,
  - உலக சுகாதார தினம்,
  - உலக இரத்த ஒட்டுண்ணி நோய் தினம்,
  - உலக இரத்த தான தினம்,

- உலக நுண்ணுயிர் எதிர்ப்பு விழிப்புணர்வு தினம்,
- உலக நோயெதிர்ப்பு வாரம்,
- உலக மலேரியா தினம்,
- உலக புகையிலை எதிர்ப்பு தினம்,
- உலக நோயாளிப் பாதுகாப்பு தினம்,
- உலக எய்ட்ஸ் தினம்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 26**

# TNPSC துளிகள்

- மது அருந்துவதற்கான குறைந்தபட்ச வயதினை 25 வயதிலிருந்து 21 வயதாகக் குறைப்பதற்கு தில்லி மாநில அரசு முடிவெடுத்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## HK மிட்டல் குழு

- ஸ்டார்ட்அப் இந்தியா நிதி திரட்டுதல் திட்டத்தினை அமல்படுத்தவும் கண்காணிக்கவும் ஒரு நிபுணர் ஆலோசனைக் குழுவினை இந்திய அரசு அமைத்து உள்ளது.
- இக்குழுவிற்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்த H.K. மிட்டல் தலைமை தாங்குவார்.
- இத்திட்டத்தில் மொத்த முதலீட்டுத் தொகையான ரூ.945 கோடியானது 4 ஆண்டுகளாகப் பிரிக்கப்பட்டு இந்தியா முழுவதும் தகுதியுடைய ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்குத் தகுதியான தொழில் தொடங்குனர்கள் மூலம் அந்த நிதி வழங்கப் படும்.

## ஸ்டார்ட் அப் இந்தியா விதை நிதிவழங்கல் திட்டம் (SISFS)

- 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 05 அன்று வணிக மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையானது இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.
- இத்திட்டத்திற்கு 2021-22 ஆம் ஆண்டில் தொடங்கி 4 ஆண்டுகளுக்கு ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது.
- இத்திட்டம் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் அமல்படுத்தப்படும்.
- இத்திட்டம் இந்தியா முழுவதும் 3600 ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.
- இத்திட்டம் கருத்தாக்கத்திற்கான ஆதாரம், முன்மாதிரி உருவாக்கம், உற்பத்திப் பொருள் சோதனை, சந்தை நுழைவு மற்றும் வணிகமயமாக்கல் போன்றவற்றிற்கு என்று ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## கோவிட் – 19 தடுப்பு மாத்திரை

- இந்தியாவின் பிரேமாஸ் பயோடெக் நிறுவனம் ஓராமெட் பார்மாசுட்டிகல்ஸ் நிறுவனத்துடன் இணைந்து வாய்வழியே உட்கொள்ளக் கூடிய கோவிட்-19 தடுப்பு மருந்தை உருவாக்கியுள்ளது.
- இது ஒரு முறை அளிக்கப்பட்ட பிறகு தனது மிகுந்த செயல்திறனைக் காட்டியுள்ளது.
- பிரேமாஸ் பயோடெக் ஓர் இந்திய நிறுவனமாகும்.

## டெல்லியின் தேசிய தலைநகரப் பிராந்தியம் (திருத்தம்) மசோதா, 2021

- சமீபத்தில் டெல்லியின் தேசிய தலைநகரப் பிராந்தியம் (திருத்தம்) மசோதா, 2021 என்ற மசோதாவிற்கு மக்களவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இம்மசோதா டெல்லியின் துணைநிலை ஆளுநருக்கு அதிக அதிகாரத்தை வழங்கும்.
- இம்மசோதாவின்படி, டெல்லியில் "அரசாங்கம்" என்பது "துணைநிலை ஆளுநராவார்".
- எந்தவொரு ஆட்சி நிர்வாக நடவடிக்கையும் மேற்கொள்ளும் முன் துணைநிலை ஆளுநரின் கருத்தினை டெல்லி அரசு கட்டாயம் கேட்க வேண்டுமென்று இம்மசோதா கூறுகிறது.

## இந்தியாவில் ஸ்புட்னிக் V தடுப்பூசி உற்பத்தி

- ஹைதராபாத்தைச் சேர்ந்த விர்சோ பயோடெக் மற்றும் RDIF எனப்படும் இரஷ்ய நேரடி முதலீட்டு நிதியம் ஆகியவை இணைந்து இந்தியாவில் ஸ்புட்னிக் V என்பதின் 200 மில்லியன் தடுப்பூசிகளை உற்பத்தி செய்வதற்கான ஒப்பந்தத்தை அறிவித்துள்ளன.
- ஸ்புட்னிக் V என்பது இரஷ்யாவின் கோவிட் – 19 தடுப்பூசியாகும்
- இந்த தொழில்நுட்பப் பரிமாற்றமானது 2021 ஆம் ஆண்டில் இரண்டாம் காற்பங்கில் (Quarter) நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இதனையடுத்து ஸ்புட்னிக் V தடுப்பூசியின் முழு அளவிலான மற்றும் வணிகரீதியான உற்பத்தி தொடங்கும்.

## தேசிய உயிரிமருந்துத் திட்டம்

- அமைச்சரவையின் ஒப்புதல் பெற்ற தேசிய உயிரி மருந்துத் திட்டத்தினை உயிரி தொழில்நுட்பத் துறை (DBT - Department of Biotechnology) தொடங்கியுள்ளது.
- இத்திட்டம் இந்தியா முழுவதுமுள்ள வளர்ந்துவரும் உயிரி தொழில்நுட்ப நிறுவனங்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உற்பத்திப் பொருட்களின் ஆரம்பகால உற்பத்தி நிலையில் ஏற்படும் இடையூறுகளை எதிர்கொள்வதற்கு சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உதவுவதற்காக தேசிய உயிரி மருந்துத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம் மேம்பட்ட தொழில் மற்றும் கல்விக்கிடையேயான இணைப்பிற்கு உதவுவதன் மூலம் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கிறது.
- இத்திட்டம் கல்வியாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில்முனைவோர் ஆகியோருக்கு வழிகாட்டுதலையும் பயிற்சியையும் வழங்குகிறது.

## முதியவர்களுக்கான போஷான் அபியான் திட்டம்

- முதியவர்களுக்கு "ஊட்டச்சத்து ஆதாரத்தினை" வழங்குவதற்கான "போஷான் அபியான்" திட்டத்தினை சமூக நல மற்றும் அதிகாரமளிப்புத் துறை அமைச்சகம் தொடங்க உள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், முதியோர் இல்லங்களில் தங்கியிருக்காத, ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்ட ஆதரவில்லாத முதியவர்களுக்கு உதவிகள் வழங்கப் படும்.
- சூடான சமைத்த மதிய உணவினை வழங்க உள்நாட்டிலேயே கிடைக்கும் சத்தான

உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்வதில் இத்திட்டம் கவனம் செலுத்தும்.

- இத்திட்டமானது கிராம பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சி அமைப்புகளால் அமல்படுத்தப் படும்.
- "மூத்த குடிமக்கள் நல நிதி" என்ற நிதியானது இத்திட்டத்திற்கு நிதி வழங்கவும் அமல்படுத்தவும் பயன்படுத்தப் படும்.

Ministry of Social Justice and Empowerment aims to launch 'Poshan Abhiyan' for the Elderly to provide them 'nutrition support'. ***Under the mission, supports will be provided to indigent elders who are not staying in Old Age Homes and are victims of malnutrition.***

**Mission will focus on procuring healthy food material which are available locally to serve hot-cooked mid-day meals.** Scheme will be implemented by "Gram Panchayats and Urban Municipalities". 'Senior Citizens Welfare Fund' will be utilized to fund & implement the mission.

# சர்வதேசச் செய்திகள்

## தகவல் சமூகம் மீதான உலக மாநாடு மன்றம் 2021

- தகவல் சமூகம் மீதான உலக மாநாடு மன்றம் 2021 (World Summit on the Information Society – Wsis) என்ற மாநாடானது "வளர்ச்சிக்கான தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்பச் சமுதாயத்தின் உலகின் மிகப்பெரிய வருடாந்திர ஒன்றிணைவாகும்."
- இம்மன்றம் யுனெஸ்கோ, ஐ.நா. மேம்பாட்டுத் திட்டம், ஐ.நா.வின் வர்த்தகம் மற்றும் மேம்பாடு மற்றும் சர்வதேச தொலைதொடர்பு ஒன்றியம் ஆகியவற்றால் இணைந்து நடத்தப்பட்டது.
- பாரத்நெட் என்ற முதன்மை திட்டத்தின் கீழ், 4,00,000 கி.மீக்கும் மேலான நீளத்திற்கு ஒளியிழை கம்பி வடங்களை அமைப்பதன் மூலம் செயற்கைக்கோள் தொடர்பு சேவைகளைப் பயன்படுத்தி கிட்டத்தட்ட 6,00,000 கிராமங்கள் இணைக்கப் படுகின்றன என்று தொலைதொடர்பு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.
- கடலுக்கடியில் மூழ்கிய கம்பிவட அமைப்புகள் மூலம் சிறிய மற்றும் தொலைதூர தீவுகளான அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகள் மற்றும் லட்சத்தீவுகள் மற்றும் இதர அணுக இயலாத பகுதிகள் அரசின் நிதியுதவியுடன் இணைக்கப்படுகின்றன.

## 18 நாடுகளின் 38 செயற்கைக்கோள்கள் - இரஷ்யா

- கஜகஸ்தானில் உள்ள பைக்கானூர் காஸ்மோடிரோமில் இருந்து 18 நாடுகளுடைய 38 செயற்கைக் கோள்களை இரஷ்யா விண்ணில் செலுத்தி அவற்றை விண்வெளியின் சுற்று வட்டப்பாதையில் நிலை நிறுத்தியுள்ளது.
- இரஷ்ய விண்வெளி நிறுவனமான ராஸ்கோஸ்மாஸ் தனது சோயுஸ் ராக்கெட் சாம்பல் நிற மற்றும் மேகமூட்டமான வானைக் கிழித்துக் கொண்டு விண்ணில் பாய்ந்த

படக்காட்சிகளை வெளியிட்டுள்ளது.

- இந்த ராக்கெட் ஜப்பான், தென்கொரியா, சவுதி அரேபியா, கனடா, இத்தாலி, ஜெர்மனி மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளின் செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவியுள்ளது.
- இந்த ஏவுகணை "சேலஞ்ஜ் – 1" என்ற செயற்கைக்கோளையும் விண்ணில் செலுத்தி உள்ளது.
- "சேலஞ்ஜ்–1 செயற்கைக்கோள்" டெல்நெட் என்ற ஒரு தொலைதொடர்புக் குழுவினால் உருவாக்கப்பட்டு முழுவதுமாக துனிசியாவில் தயாரிக்கப்பட்ட முதல் செயற்கைக் கோள் ஆகும்.

# மாநிலச் செய்திகள்

## UPFPO சக்தி தளம்

- சமீபத்தில் உத்தரப் பிதேசம் முதல்வர் யோகி ஆதித்ய நாத் UPFPO சக்தி தளத்தினை தொடங்கி வைத்தார்.
- இது கோரக்பூரில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கிசான் கல்யாண் திட்டத்தின் ஒரு அங்கமாக தொடங்கப்பட்டது.
- இத்தளம் இவ்வகையிலான நாட்டின் முதல் தளமாகும்.
- அடிமட்ட நிலையிலுள்ள விவசாயிகளுக்கு பயன் நல்குவதை இத்தளம் நோக்கமாக கொண்டுள்ளது.
- விவசாய உற்பத்தியாளர் அமைப்பை மையமாகக் கொண்ட இத்தளம் விவசாயிகள், உற்பத்தியாளர் குழுமங்கள், வணிகர்கள் மற்றும் வேளாண்மை மற்றும் உத்தரப் பிரதேச அரசின் இதர பிற வேளாண் தொடர்பான துறைகள் ஆகியவற்றை ஒரே தளத்தின் கீழ் கொண்டு வரும்.

## அரசினால் இயக்கப்படும் முதல் கால்நடை அவசர ஊர்தி அமைப்பு

- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது விலங்குகளுக்காக அரசினால் இயக்கப்படும் இந்தியாவின் முதல் (விலங்கு) கால்நடை அவசர ஊர்தி அமைப்பினை அமைக்க முடிவெடுத்துள்ளது.
- இம்முடிவானது மாநிலத்தில் கால்நடை வளர்ப்பு மற்றும் கால்நடை மருத்துவத் துறையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது.
- ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒரு நடமாடும் அவசர கால்நடை மருத்துவ ஊர்தியை அமைக்க கால்நடை வளர்ப்புத் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## மெத்திலோபாக்டீரியம் அஜ்மலி


- ஹைதராபாத் பல்கலைக்கழகம் நாசாவின் ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஒரு புதிய பாக்டீரிய வகையைக் கண்டறிந்து உள்ளது.
- அவர்கள் மெத்திலோ பாக்டீரியாசியா என்ற குடும்பத்தைச் சார்ந்த பாக்டீரியாவை கண்டறிந்துள்ளனர்.

- இதற்கு சூட்டப்பட்ட பெயர் மெத்திலோபாக்டீரியம் அஜ்மலி என்பதாகும்.
- இதற்கு இந்தியப் பல்லுயிர்ப் பெருக்க அறிவியலாளர் சையத் அஜ்மல் கானின் பெயர் சூட்டப் பட்டுள்ளது.
- சையத் அஜ்மல் கான், தமிழ்நாட்டில் உள்ள அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் ஒரு பேராசிரியராவார்.

# முக்கிய தினங்கள்

## சாகித் திவாஸ் – மார்ச் 23

- மார்ச் 23 அன்று பகத்சிங், சிவராம் ராஜ்குரு மற்றும் சுக்தேவ் தாப்பர் ஆகிய மூன்று விடுதலை போராட்ட வீரர்கள் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டனர்.
- இந்த மூவருக்கும் மரியாதை செலுத்தும் வகையில் மார்ச் 23 ஆம் நாள் "சாகித் திவாஸ்" தினமாக கடைபிடிக்கப் படுகிறது.
- அவர்கள், J.P. சான்டர்ஸ் என்று ஆங்கிலேய காவல் அதிகாரியை கொலை செய்த குற்றத்திற்காக தூக்கிலிடப் பட்டனர்.
- இம்மூவரும் லாலா லஜபதி ராயின் இறப்பிற்குப் பழிவாங்க எண்ணினர்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 27**

# TNPSC துளிகள்

- செயல்திட்டச் சேவைகளுக்கான ஐ.நா. அலுவலகம் மற்றும் டென்மார்க் அரசுடன் ஜல்சக்தி அமைச்சகமானது ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
    - இது ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் உத்தரப் பிரதேசத்திலுள்ள பந்தேல்கண்ட் மற்றும் விந்திய பகுதிகளைச் சேர்ந்த நீர்ப் பற்றாக்குறையைக் கொண்டுள்ள 11 மாவட்டங்களுக்குக் குடிநீர்க் குழாய் இணைப்பினை வழங்குவதற்கான ஒரு ஒப்பந்தம் ஆகும்.
- ஜோ பிடனின் நிர்வாகமானது இந்தியாவுடனான உள்நாட்டுப் பாதுகாப்புப் பேச்சு வார்த்தையினை மீண்டும் தொடங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.
    - இந்தப் பேச்சுவார்த்தையானது முந்தைய டொனால்டு ட்ரம்ப் ஆட்சியின் போது நிறுத்தப் பட்டது.

# தமிழ்நாடு செய்திகள்

## ஆபரேஷன் திருவள்ளூர்

- இந்திய இராணுவப் படையானது “ஆபரேஷன் திருவள்ளூர்” என்ற ஒரு நடவடிக்கையினை மேற்கொண்டது.
- இது கிட்டத்தட்ட 10 டன் எடையுள்ள வெடிக்காத இராணுவ ஆயுதங்களைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்தும் ஒரு நடவடிக்கை ஆகும்.
- இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கம், திருவள்ளூரில் உள்ள கும்மிடிப்பூண்டியைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் குடிமக்களுக்குப் பாதுகாப்பான ஒரு சுற்றுச்சூழலை வழங்குவதே ஆகும்.
- இராணுவப் படையின் தெற்கு காவற்படையின் கீழ் தக்சிண பாரத் பகுதி இந்த ஆபத்தான நடவடிக்கையை மேற்கொள்கிறது.

# தேசியச் செய்திகள்

## NV ரமணா – அடுத்த இந்தியத் தலைமை நீதிபதி

- இந்தியத் தலைமை நீதிபதி சரத் SA பாப்தே அவர்கள் அடுத்த மாதம் ஓய்வு பெற உள்ளதால், அவரையடுத்து 48வது தலைமை நீதிபதியாக பொறுப்பேற்க NV ரமணாவின் பெயரை அவர் பரிந்துரை செய்துள்ளார்.
- SA பாப்தே ஏப்ரல் 23 அன்று ஓய்வு பெற உள்ளார்.
- நீதிபதி ரமணா அவர்கள் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவர்.

## இந்தியக் கடலோர ரோந்து கப்பல் வஜ்ரா

- இந்தியக் கடலோர ரோந்து கப்பலான “வஜ்ரா” எனும் கப்பலானது சென்னையிலுள்ள காட்டுப்பள்ளியில் கடலோரக் காவற்படையில் இணைக்கப்பட்டது.
- 98 மீட்டர் நீளமுடைய இக்கப்பல் சென்னையின் காட்டுப்பள்ளியிலுள்ள M/S லார்சன் & டியூப்ரோ நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டு கட்டமைக்கப்பட்டது.

- இக்கப்பலானது நவீன வசதிகளுடன் கூடிய இரட்டை எஞ்சின்களுடைய ஹெலிகாப்டரையும், நான்கு அதிவேகப் படகுகளை ஏந்திச் செல்லும் திறனுடன் அமைக்கப் பட்டுள்ளது.
- மேலும் இக்கப்பலை ஆய்வு மற்றும் மீட்புப் பணி, சட்ட அமலாக்கம் மற்றும் கடற்படை ரோந்துப் பணி ஆகியவற்றை மேற்கொள்ளவும் வேண்டி பயன்படுத்த இயலும்.
- மேலும் இக்கப்பல் கடலில் ஏற்படும் எண்ணெய்க் கசிவுகளைக் கையாளுவதற்கான மாசு கட்டுப்பாட்டு உபகரணத்தை ஏந்திச் செல்லும் திறன் பெற்றதாகும்.

### வருடாந்திர ஏற்றுமதி தரக் குறியீடு

- வெவ்வேறு மாவட்டங்களின் வருடாந்திர ஏற்றுமதி தரக் குறியீட்டினைத் தயாரிக்க மாநில மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு அயல்நாட்டு வர்த்தகப் பொது இயக்குனரகம் உதவும் என்று மத்திய வணிக மற்றும் தொழில்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- இக்குறியீடு ஒவ்வொரு மாவட்டத்தையும் அவற்றின் ஏற்றுமதியில் நிலவும் போட்டித் தன்மையைப் பொருத்து தரவரிசைப் படுத்தும்.
- மாவட்ட ஏற்றுமதி செயல்திட்டம், மாவட்டத்தில் ஏற்றுமதி செய்யக் கூடிய சரக்கு மற்றும் சேவைகளை அடையாளம் காணுவதையும் உள்ளடக்கும்.

## சர்வதேசச் செய்திகள்

### ஏமனில் ஐ.நா.வின் ஆதரவு பெற்ற போர் நிறுத்தம்

- ஏமனில் ஐ.நா.வின் ஆதரவு பெற்ற போர் நிறுத்தத்தினை சவுதி அரேபியா முன்மொழிந்துள்ளது.
- மேலும் ஹவுதி இயக்கத்தின் பதிலுக்காக சவுதி காத்திருக்கிறது.
- இந்த அமைதி நடவடிக்கை சவுதி அரேபியாவால் மேற்கொள்ளப்பட்டது.
- மேலும், ஹவுதி இயக்கத்திற்கெதிரான ஏமன் நாட்டு அரசின் போராட்டத்திற்கு சவுதி அரேபியா எப்பொழுதும் தனது ஆதரவினை நல்கும் எனவும் குறிப்பிட்டுள்ளது.
- விரிவான மற்றும் நீடித்த ஓர் அரசியல் தீர்வை அடையும் முயற்சியில் ஏமனின் அரசியல் கட்சிகளிடையே அமைதிப் பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்கான போர் நிறுத்த முன்மொழிதலை ஹவுதி அமைப்பு ஏற்றுக் கொள்ளுமென சவுதி அரேபியா நம்புகிறது.

### இலங்கையின் மனித உரிமை மீறலுக்கு எதிரான தீர்மானம்

- ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணையம் "இலங்கையில் நல்லிணக்க உணர்வு மற்றும் மனித உரிமைகளின் மேம்பாடு" எனும் தலைப்பிலான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளது.
- இத்தீர்மானம் 47 உறுப்பினர்களில் 22 உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்ததை அடுத்து நிறைவேற்றப் பட்டது.
- இத்தீர்மானத்திற்கு எதிராக 11 உறுப்பினர்கள் வாக்களித்துள்ளனர்.
- வாக்களிக்காமல் விலகிய 14 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.



Item 2: L.1/Rev.1 "Promoting reconciliation, accountability and human rights in Sri Lanka"

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Y | ARGENTINA | N | ERITREA | Y | NETHERLANDS |
| Y | ARMENIA | Y | FIJI | N | PAKISTAN |
| Y | AUSTRIA | Y | FRANCE | N | PHILIPPINES |
| Y | BAHAMAS | A | GABON | Y | POLAND |
| A | BAHRAIN | Y | GERMANY | Y | REPUBLIC OF KOREA |
| N | BANGLADESH | A | INDIA | N | RUSSIAN FEDERATION |
| N | BOLIVIA (PLURINATIONAL STATE OF) | A | INDONESIA | A | SENEGAL |
| Y | BRAZIL | Y | ITALY | N | SOMALIA |
| Y | BULGARIA | A | JAPAN | A | SUDAN |
| A | BURKINA FASO | A | LIBYA | A | TOGO |
| A | CAMEROON | Y | MALAWI | Y | UKRAINE |
| N | CHINA | Y | MARSHALL ISLANDS | Y | UNITED KINGDOM OF GREAT BRITAIN AND NORTHERN IRELAND |
| Y | CÔTE D'IVOIRE | A | MAURITANIA | Y | URUGUAY |
| N | CUBA | Y | MEXICO | N | UZBEKISTAN |
| Y | CZECH REPUBLIC | A | NAMIBIA | N | VENEZUELA (BOLIVARIAN REPUBLIC OF) |
| Y | DENMARK | A | NEPAL | | |

IN FAVOUR 22 | AGAINST 11 | ABSTAIN 14

## கூட்டு ரோந்துப் பணி – இந்தியா மற்றும் மடகாஸ்கர்

- ❖ இந்தியா மற்றும் மடகாஸ்கரின் கப்பற்படைகள் மடகாஸ்கரின் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கான முதல் கூட்டு ரோந்துப் பணியை மேற்கொண்டு உள்ளன.
- ❖ மேலும், அவை PASSEX என்ற ஒரு பயிற்சியினையும் மேற்கொண்டன.
- ❖ இந்த முதல் கூட்டு ரோந்துப் பணியானது, இந்தியப் பெருங்கடல் பகுதியில் கடல்சார் பாதுகாப்பினை வழங்கும் பொது நோக்கத்தை உடைய வகையில் இந்தியப் பெருங்கடலில் அமைந்த இரண்டு அண்டை நாடுகளுக்கிடையேயான வளர்ந்து வரும் பாதுகாப்பு தொடர்பான உறவினைப் பிரதிபலிக்கிறது.

## இந்தியா – பிரான்சு கூட்டு விண்வெளித் திட்டம்

- ❖ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பிரான்சின் விண்வெளி நிறுவனமான CNES (National Centre for Space Studies) ஆகியவை இணைந்து மூன்றாவது கூட்டு விண்வெளித் திட்டத்தில் பணியாற்றி வருகின்றன.
- ❖ இஸ்ரோ மற்றும் CNES ஆகிய நிறுவனங்கள் TRISHNA எனப்படும் வெப்ப அகச்சிவப்பு புகைப்பட உபகரணத்தைக் கொண்டு புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோள் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஒரு சாத்தியக்கூறு ஆய்வினை முடித்துள்ளன.
- ❖ TRISHNA (Thermal infraRed Imaging Satellite for High resolution Natural resource Assessment) ஆனது நீர்சுழற்சி முறையைக் கண்காணித்து அதனை சிறப்பாகப் பயன்படுத்த உதவும்.
- ❖ CNES நிறுவனத்தின் AGROS ஆனது இஸ்ரோவின் OCEANSAT-3 செயற்கைக்கோளுடன் ஒன்றிணைக்கப்படும்.
- ❖ ARGOS என்பது உலகளாவிய செயற்கைக்கோள் சார்ந்த தரவு சேகரிப்பு மற்றும் இடங்காட்டி அமைப்பு ஆகும்.
- ❖ இது சுற்றுச்சூழலைப் பற்றி அறிவதற்கும் அதனைப் பாதுகாப்பதற்கும் வேண்டி அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## சியாமளா கோபிநாத் குழு

- இந்திய ரிசர்வ் வங்கி ஒரு நிலையான வெளிப்புற ஆலோசனைக் குழுவினை அமைத்துள்ளது.
- இக்குழு பொது மற்றும் சிறிய நிதி வங்கிகளின் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்யும்.
- 5 உறுப்பினர்களைக் கொண்ட இக்குழு, RBI வங்கியின் முன்னாள் துணை ஆளுநரான சியாமளா கோபிநாத்தைத் தலைவராகக் கொண்டுள்ளது.
- இக்குழுவின் பதவிக் காலம் 3 வருடங்களாகும்.
- இந்த வழிகாட்டுதல்களின் படி, விண்ணப்பதாரர்களின் முதல்நிலைத் தகுதியை உறுதிப்படுத்த பொது மற்றும் சிறிய நிதி வங்கிகளின் விண்ணப்பங்களை முதலில் RBI மதிப்பீடு செய்யும்.
- அதன் பிறகு புதிதாக அமைக்கப்பட்ட குழு அவ்விண்ணப்பங்களை மதிப்பீடு செய்யும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## இந்தியாவின் முதல் விண்வெளி குவாண்டம் தகவல்தொடர்பு

- வெற்றிகரமாக, 300 மீட்டர் தொலைவிற்கு விண்வெளி குவாண்டம் தகவல் தொடர்பினை இஸ்ரோ செயல்விளக்கம் காட்டியுள்ளது.
- இது இந்தியாவின் இவ்வகையிலான முதல் முயற்சியாகும்.
- இந்தச் செயல்விளக்கமானது மறைக்கப்பட்ட முதன்மை குவாண்டம் சமிக்ஞைகளைப் பயன்படுத்திய நேரலை காணொளியை உள்ளடக்கியதாகும்.
- இது குவாண்டம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் செயற்கைக் கோள் தரவு தகவல் தொடர்பின் நிபந்தனையற்ற பாதுகாப்பிற்கான ஒரு முக்கியச் சாதனையாகும்.
- சூரிய ஒளியின் நேரடி குறுக்கீடு எதுவும் இல்லாமல் இருப்பதற்காக இந்தச் சோதனை இரவில் மேற்கொள்ளப் பட்டது.
- செயற்கைக் கோள் சார்ந்த குவாண்டம் தகவல்தொடர்பினை அமைக்கும் இஸ்ரோவின் இலக்கில் இது ஒரு திருப்புமுனையாகும்.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## குறுங்கோள் 2001 FO32

- குறுங்கோள் 2001 FO32 என்பது 2021 ஆம் ஆண்டில் புவியைக் கடந்து சென்ற மிகப்பெரிய குறுங்கோள் ஆகும்.
- இது 20 வருடங்களுக்கு முன்பு 2001 ஆம் ஆண்டில் நியூ மெக்சிகோவில் உள்ள சாக்காரோ என்னுமிடத்திலுள்ள LINEAR மையத்தினால் (LINEAR - Lincoln Near Earth Asteroid Research) கண்டுபிடிக்கப்பட்டது.
- புவிக்கு அருகில் உள்ள போது இக்குறுங்கோள் 2 மில்லியன் கி.மீ. தொலைவில் (புவிக்கும் நிலவிற்கும் இடையிலான தொலைவில் 5 ¼ மடங்கு) இருக்கும்.
- எனவே இது “தீங்கு விளைவிக்கக் கூடிய குறுங்கோள்” என கூறப்பட்டுள்ளது.




## கேண்டிடா அவ்ரிஸ்




- ஆய்வாளர்கள் அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளின் தொலைதூரக் கடற்கரைப் பகுதிகளில் கேண்டிடா அவ்ரிஸ் எனும் பூஞ்சைத் தொற்றினைக் கண்டறிந்துள்ளனர்.
- இது அடுத்தப் பெருந்தொற்றினை ஏற்படுத்தவும் வாய்ப்புள்ளது என கூறியுள்ளனர்.
- பல மருந்துகளுக்கு எதிரான எதிர்ப்பு சக்தியைக் கொண்ட பூஞ்சையான கேண்டிடா அவ்ரிஸ் முக்கிய பூஞ்சை எதிர்ப்பு சிகிச்சைகளுக்கும் எதிரான சக்தியைப் பெற்றுள்ளதால் இது ஒரு “சூப்பர்பக்” ('superbug') ஆக மாறியுள்ளது.
- கேண்டிடா அவ்ரிஸ் காயங்களின் மூலம் உடலினுள் நுழையும் முன் தோல்களில் உயிர் வாழும்.
- இரத்த ஓட்டத்தில் கலந்தவுடன் இது தீவிரமான நோயினை ஏற்படுத்தும்.

- மேலும் உலகளவில் வருடத்திற்கு 11 மில்லியன் மக்களின் உயிரைப் பலி வாங்கும் செப்சிஸ் எனப்படும் இரத்தத் தொற்றினையும் அது ஏற்படுத்தும்.
- கேண்டிடா அவ்ரிஸ் மருத்துவமனைகளில் ஒரு நோயாளியிடமிருந்து இன்னொரு நபருக்குப் பரவுகிறது.
- இது குறிப்பாக பலவீனமான நோயெதிர்ப்புச் சக்தியுள்ள நபர்களை தாக்குகிறது.
- இது மாசுபட்ட சுற்றுச்சூழல் பரப்புகள் (அ) உபகரணங்களைத் தொடுவதால் பரவுகிறது.
- பொதுவான ஆய்வக முறைகளைக் கொண்டு இதனைக் கண்டறிவது என்பது மிகவும் கடினமாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**மார்ச் – 28**

# TNPSC துளிகள்

- மூத்த அதிகாரியான சௌரப் கார்க் அவர்கள் இந்தியாவின் தனித்துவ அடையாள ஆணையத்தின் (UIDAI - Unique Identification Authority of India) தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்திய குடிமைப்பணி அதிகாரி சஞ்சீவ் குமார் அவர்கள், இந்திய விமான நிலைய ஆணையத்தின் (AAI) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய குடிமைப்பணி அதிகாரி அதீஷ் சந்திரா அவர்கள் இந்திய உணவுக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- Times Network India பொருளாதார மாநாடு 2021 என்ற மாநாடானது இந்த ஆண்டின் மார்ச் 25 – 26, ஆகிய தேதிகளில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
    - இந்த ஆண்டிற்கான கருத்துரு, "இந்தியாவின் பத்தாண்டு : சீர்திருத்தம், செயல்பாடு, மாற்றம்" என்பதாகும்.
- ஐக்கிய அமெரிக்க நாடுகளில் புனைக் கதைகளுக்கான தேசியப் புத்தக விமர்சகர்கள் வட்டாரப் பரிசானது மேசி ஓ ஃபேரல் என்பவரின் "ஹேம்நெட்" என்ற புத்தகத்திற்கு வழங்கப் பட்டு உள்ளது.
    - டாம் சோயெல்னர் என்பவரின் "Island on Fire : The Revolt That Ended Slavery in the British Empire" என்ற புத்தகம் புனைக் கதை அல்லாத பிரிவில் இப்பரிசினை வென்றுள்ளது.

# தேசியச் செய்திகள்

## மாநிலங்களுக்கிடையேயான புலிகள் இடமாற்றத் திட்டம்

- 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தியாவின் மாநிலங்களுக்கு இடையேயான முதலாவது புலிகள் இடமாற்றத் திட்டத்தின் ஒரு அங்கமாக மத்தியப் பிரதேசத்தில் இருந்து ஒடிசாவிற்கு இடமாற்றம் செய்யப் பட்ட சுந்தரி எனும் புலி சமீபத்தில் மீண்டும் மத்தியப் பிரதேசத்திற்கு வந்து சேர்ந்தது.
- 5 வயதான இந்தப் புலி ஒடிசாவிலுள்ள சத்கோசியா புலிகள் காப்பகத்தில் 28 மாதங்கள் அடைபட்டிருந்தது.

### *புலிகள் இடமாற்ற திட்டம்*

- இத்திட்டம் 2018 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- மத்தியப் பிரதேசத்தின் கான்ஹா புலிகள் காப்பகத்திலிருந்து ஒரு ஆண் (மகாவீர்) புலியும் பாந்தவ்கர் புலிகள் காப்பகத்திலிருந்து ஒரு பெண் (சுந்தரி) புலியும் ஒடிசாவிலுள்ள சத்கோசியா புலிகள் காப்பகத்திற்கு அம்மாநிலத்தின் புலிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக கொண்டு வரப்பட்டன.
- மகாவீர் வந்து சேர்ந்த அடுத்த ஒரு வாரத்தில் சுந்தரி சத்கோசியாவிற்கு கொண்டு வரப் பட்டது.
- இடமாற்றம் இரண்டு காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுகிறது.
    - அதிகப் புலிகள் எண்ணிக்கையுடைய பகுதிகளில் புலிகளுக்கிடையேயான முக்கிய எல்லைச் சிக்கல்களைக் குறைப்பதற்காக புலிகளின் எண்ணிக்கையை குறைத்தல்.
    - பல்வேறு காரணங்களால் புலிகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ள

பகுதிகளில் மீண்டும் புலிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

## காசநோய் அறிக்கை 2021 – இந்தியா

- இந்தியாவில் 18.05 லட்சம் காசநோய் பாதிப்புகள் பதிவாகியுள்ளதாக இந்த அறிக்கை மதிப்பிட்டுள்ளது.
- மேலும் ஜனவரி 2020 மற்றும் பிப்ரவரி 2020 ஆகிய மாதங்களுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் காசநோய் பாதிப்புகள் ஆண்டுக்கு 6% அதிகரித்துள்ளதாகவும் இவ்வறிக்கை கூறுகிறது.
- 2019 ஆம் ஆண்டில் பதிவான 24.04 லட்சங்கள் பாதிப்பில் சிகிச்சைப் பலன் வீதம் 82% எனவும், இறப்பு வீதம் 4% எனவும் இந்த அறிக்கை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இந்த அறிக்கையின்படி, அடுத்தடுத்த நிலைகளில் 4% நோயாளிகளும் சிகிச்சைப் பலனளிக்காமை மற்றும் சிகிச்சை முறை மாற்றங்களினால் 3% நோயாளிகளும் இறந்துள்ளனர்.

### *இந்தியாவில் காசநோய் பாதிப்பு*

- உலகெங்கிலும் சேர்த்து, இந்தியாவில் தான் அதிக காசநோய் பாதிப்புகள் உள்ளன. இந்தியாவில் 2.64 மில்லியன் காசநோய் நோயாளிகள் உள்ளனர்.
- இது உலகின் மொத்த காசநோய் பாதிப்பில் 30% ஆகும்.
- உலகளவிலான இலக்கான 2030 ஆம் ஆண்டுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே, 2025 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் காசநோயை ஒழிப்பதனை இந்தியா இலக்காக கொண்டுள்ளது.

## 100க்கும் அதிகமான வரைகதை புத்தகங்கள்

- மத்தியக் கல்வித் துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் நிஷாங்க் அவர்கள் மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் (CBSE) ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் உருவாக்கப்பட்டு NCERT அமைப்பால் சீரமைக்கப்பட்ட 100க்கும் அதிகமான வரைகதை புத்தகங்களை வெளியிட்டார்.
- இப்புத்தகங்களை எந்தவொரு ஆன்டிராய்டு திறன்பேசியிலும் தீக்சா இணையதளம் வாயிலாகவோ (diksha.gov.in) (அ) தீக்சா செயலி மூலமாகவோ அணுக இயலும்.
- இந்தப் புத்தகங்களை வாட்ஸ்அப் செயலி மூலம் இயக்கப் படும் ஒரு புதிய சாட்பாட் என்ற உதவியாளர் மூலமாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- இந்த சாட்பாட் டிஜிட்டல் மூலமாக கற்றலின் நோக்கத்தை விரிவாக்க ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது.
- அப்புத்தகங்களின் வெளியீட்டின் போது CBSEயின் போட்டித்தன்மை அடிப்படையிலான கல்வித் திட்டத்தின் ஓர் அங்கமாக அறிவியல், கணிதம் மற்றும் ஆங்கில வகுப்புகளுக்கான CBSE மதிப்பீட்டுக் கட்டமைப்பினையும் கல்வி அமைச்சர் தொடங்கி வைத்தார்.

# சர்வதேசச் செய்திகள்

## முதல் கப்பல் சுரங்கப் பாதை – நார்வே

- உலகின் முதல் கப்பல் சுரங்கப் பாதையை அமைப்பதற்கான பணிகளை மேற்கொள்ள நார்வே கடலோர நிர்வாக அமைப்பிற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

- இப்பாதை பிரத்தியேகமாக கப்பல்களுக்காகவே என்று கட்டப்படுகிறது.
- இந்தச் சுரங்கப்பாதைக்கு "Stad Ship Tunnel" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது வடமேற்கு நார்வேயிலுள்ள மலைகள் நிறைந்த ஸ்டாட்ஹவெட் தீபகற்பத்தின் கீழ் அமைக்கப் படும்.

*சுரங்கப்பாதை பற்றிய விவரங்கள்*

- 1.7 கி.மீ. நீளமுடைய இந்தச் சுரங்கப்பாதையானது 16,000 டன் எடையுள்ள கப்பல்களும் கடந்து செல்லும் வகையில் இருக்கும்.
- இந்தச் சுரங்கம் கப்பல்களுக்கு ஆபத்து மிக்க ஸ்டாட்ஹவெட் கடலின் வழியே ஒரு பாதுகாப்பான வழியாக அமையும்.
- இந்தச் சுரங்க கட்டுமான பணிகள் 2022 ஆம் ஆண்டில் தொடங்கும்.




## சர்வதேச அறிவுசார் சொத்து குறியீடு

- 9வது சர்வதேச அறிவுசார் சொத்து குறியீட்டில் (IIP – Intellectual Property Index) 53 உலகப் பொருளாதாரங்களில் 38.40 மதிப்புகள் பெற்று இந்தியா 40வது இடத்தில் உள்ளது.
- "Recovery through Ingenuity 2021" என்று தலைப்பிடப்பட்ட இக்குறியீடு அமெரிக்க வர்த்தக மன்றத்தின் உலகளாவியப் புத்தாக்கக் கொள்கை மையத்தினால் (Global Innovation Policy Center – GIPC) வெளியிடப்பட்டது.
- இக்குறியீட்டில் ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐக்கிய ராஜ்ஜியம் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் முன்னிலையில் உள்ளன.
- GIPC மையத்தினால் ஒவ்வோர் ஆண்டும் வெளியிடப்படும் IIP குறியீடு, 53 உலகப் பொருளாதார நாடுகளில் அறிவுசார் சொத்துரிமை, காப்புரிமை மற்றும் நகலுரிமை கொள்கைகள், அறிவுசார் சொத்துகளை வணிகமயமாக்கல் மற்றும் சர்வதேச ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் அளித்தல் போன்றவற்றை மதிப்பீடு செய்கின்றது.
- 53 நாடுகளில் 32 நாடுகள் நேர்மறையான மதிப்புகளைப் பெற்றுள்ளதால் 2020 ஆம் ஆண்டில் ஒட்டு மொத்த உலகளாவிய அறிவுசார் சொத்துகளின் சூழ்நிலை மேம்பட்டு உள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## வியாஸ் சம்மன் – 2020

- பேராசிரியர் சரத் பாகாரேவிற்கு மதிப்பு மிக்க வியாஸ் சம்மன் 2020 விருது வழங்கப் பட உள்ளது.

- அவர் தனது "பாட்லிபுத்ரு கீ சாம்ராகி" என்ற புதினத்திற்காக 31வது வியாஸ் சம்மன் விருதினைப் பெற உள்ளார்.
- 1991 ஆம் ஆண்டில் வியாஷ் சம்மன் விருதுகள் வழங்க ஆரம்பிக்கப்பட்டது.
- இந்த விருது K.K. பிர்லா நிறுவனத்தினால் வழங்கப்படுகிறது.
- கடந்த 10 ஆண்டுகளில் இந்தியக் குடிமகனால் எழுதப்பட்டு வெளியிடப்பட்ட இந்தி மொழியிலமைந்த சிறந்த இலக்கியப் படைப்பிற்கு இவ்விருது வழங்கப்படுகிறது.
- இவ்விருதுடன் நான்கு லட்சம் ரூபாயுடன் கூடிய ஒரு சான்றிதழ் மற்றும் பதக்கம் ஆகியவை வழங்கப்படும்.

### மகாராஷ்டிரா பூஷன் விருது

- ஆஷா போன்ஸ்லே மகாராஷ்டிரா அரசின் 2020 ஆம் ஆண்டிற்கான மகாராஷ்டிரா பூஷன் விருதினை வென்றுள்ளார்.
- மகாராஷ்டிரா அரசானது புகழ்பெற்ற பாடகியான ஆஷா போன்ஸ்லே அவர்கள் விருதிற்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக அறிவித்தது.
- இது அம்மாநில அரசின் உயரிய விருதாகும்.
- முதலமைச்சர் உத்தவ் தாக்கரே தலைமையிலான குழு 2020 ஆம் ஆண்டிற்கான விருதிற்கு ஆஷா போன்ஸ்லேவை தேர்ந்தெடுக்க முடிவெடுத்தது.
- இந்த விருது, இலக்கியம், கலை, விளையாட்டு மற்றும் அறிவியல், சமூகச் சேவை, பத்திரிக்கைத் துறை, பொது நிர்வாகம் மற்றும் சுகாதாரப் பணிகள் ஆகிய துறைகளுக்காக வழங்கப்படுகிறது.

## முக்கிய தினங்கள்

### கைது செய்யப்பட்ட மற்றும் காணாமல் போன பணியாளர்களுக்கான சர்வதேச ஒன்றிணையும் தினம் – மார்ச் 25

- இத்தினமானது ஒவ்வோர் ஆண்டும் அலெக்கோலெட் என்பவர் கடத்திச் செல்லப்பட்ட நாளினை நினைவு கூரும் விதமாகக் கடைபிடிக்கப்படுகிறது.
- இவர் கிழக்குப் பகுதியிலுள்ள பாலஸ்தீனிய அகதிகளுக்கான ஐ.நாவின் நிவாரணம் மற்றும் பணி நிறுவனத்தில் பணிபுரிந்த ஒரு முன்னாள் பத்திரிக்கையாளராவார்.
- இவர் 1985 ஆம் ஆண்டு ஒரு துப்பாக்கி ஏந்திய ஒரு நபரால் கடத்தப்பட்டார்.
- அவரது உடல் 2009 ஆம் ஆண்டில் லெபனானின் பெகா பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப் பட்டது.
- இத்தினம் ஐ.நா.வின் பணியாளர்கள் மற்றும் அமைதி காக்கும் படையினர், அரசு சாரா அமைப்புகள் மற்றும் ஊடகங்களின் பணியாளர்கள் ஆகியோரைப் பாதுகாக்கச் செய்வதற்கான ஒரு தீர்மானத்தை வலுப்படுத்தவும், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், நீதியினை வேண்டுவதற்குமான ஒரு தினமாக கடைபிடிக்கப் படுகிறது.

### அட்லாண்டிக் பகுதிகளில் நிகழும் அடிமைத்தனம் மற்றும் அடிமைகள் வர்த்தக முறையால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூறும் சர்வதேச தினம் – மார்ச் 25

- இத்தினமானது கொடூரமான அடிமை முறையின் பிடியில் சிக்கி அவதிப்பட்டு

இறந்தவர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்கு மரியாதை செலுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக கடைபிடிக்கப் படுகிறது.

- மேலும் தற்போதுள்ள இனவெறி மற்றும் தீமை ஆகியவற்றின் ஆபத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- பாதிக்கப் பட்டவர்களுக்கு நிரந்தர மரியாதை செலுத்தும் வகையில் நியூயார்க்கில் உள்ள ஐ.நா.வின் தலைமையகத்தில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப் பட்டுள்ளது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★